Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

முரசு – 03 திருவள்ளுவர் ஆண்டு 2043 ஐப்பசி 05 ஞாயிற்றுக்கிழமை (21.10.2012) பக்கங்கள் 20 ஓசை – 021

விஷானி நகை மாளிகை


மங்கையர் மனம் கவரும் தங்க நகைகளுக்கு



இல. 187, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

0212219510 (C/1675)

பாரபட்சம்



(03)


கடற்படையினர் உஷார்



(06)



சாதனை வெற்றி (09)



மக்கள் தொகைக்கு நிகராக... (10)

“வாகை சூடவா” தெரிவு



(17)

# வடக்கில் மழை தொடரும்

## வளிமண்டலத் திணைக்களம் அறிவிப்பு

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் தொடர்ச்சியான கடும் மழையுடன் கூடிய காலநிலை தொடருமென யாழ். வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இடைப்பருவப் பெயர்ச்சி காலநிலை காரணமாக டிசம்பர் மாதம் வரையில் தொடர்ச்சியாக விட்டுவிட்டு மழை பெய்யும். இது டிசம்பர் மாதத்தின் பின்னர் கடும் காற்று மற்றும் இடியுடன் கூடிய அடைமழையாக மாறும் வாய்ப்புக்களும் உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில் நேற்று முன்தினம் முதல் மேற்படி மூன்று மாவட்டங்களிலும் தொடர் மழை பெய்து வருகின்றது. இதனால் தாழ் நிலப்பகுதிகளில் வெள்ள நீர் தேங்கியுள்ளதுடன், அந்தப் பகுதி மக்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றனர்.

குறித்த பகுதிகளில் மழை பெய்யும் வேளையில் வீசக்கூடிய கடுமையான காற்று குறித்து பொதுமக்கள் விழிப்புணர்வுடன் இருக்கவேண்டும் எனவும், தாழ நிலப்பகுதி மக்கள் அனர்த்தங்களுக்கு ஏற்றபடி தயாராக இருக்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை வீசக்கூடிய கடுமையான காற்று மணித்தியாலத்திற்கு 20 தொடக்கம் 30 கிலோ மீற்றர் வேகத்தில் வீசலாம் என வானிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது.

அதேவேளை யாழ். மாவட்டத்தின் பல பாகங்களிலும் இடியுடன் கூடிய மழை பெய்யும் என வானிலை அவதானிப்புத் தொடர்பான இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இன்று மாவட்டத்தின் பல பிரதேசங்களிலும் பகல் வேளைகளில் இடி மின்னலின் தாக்கம் அதிகமாக இருக்கும் என்றும் இரவு நேரத்தில் அதிக மழைவீழ்ச்சி காணப்படும் என்றும் அறிவிக்கப்பட்டு

(19) ஆம் பக்கம் பார்க்க

## டிப்போ ஊழியர்கள் நாளை பணிப்புறக்கணிப்பு

(பருத்தித்துறை)

பருத்தித்துறை டிப்போ ஊழியர்கள் நாளை முதல் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளதாக அறிவித்துள்ளனர்.

தமக்கான சம்பளம் 8 ஆம் திகதி வழங்கப்படுவதாகவும் இது வரை இம்மாத சம்பளம் வழங்கப்படவில்லை என்றும் இச் சம்பளம் தமக்கு வழங்கப்படும் வரை தாம் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபடப் போவதாகவும் அறிவித்துள்ளனர். (17)

## கொழும்பில் நாளை சத்தியாக்கிரகப் போர்

(கொழும்பு)

காணாமல் போனோரைக் கண்டறியும் குழுவினால் நாளை கொழும்பில் சத்தியாக்கிரகப் போராட்டம் ஒன்று நடாத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இவர்களினால் ஏற்பாடு செய்யப்பட்ட சத்தியாக்கிரகப் போராட்டமானது கொழும்பிலுள்ள ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணைக்குழு முன்பாக இடம்பெறவுள்ளது.

பிற்பகல் 2.00 மணிக்கு ஆரம்பமாகும் சத்தியாக்கிரகப் போராட்டம் 4.00 மணி வரை 2 மணித்தியாலங்களுக்கு நடைபெறவுள்ளது.

(19) ஆம் பக்கம் பார்க்க

## மாணவத் தலைவர்களுக்கு தற்காப்புக் கலைப் பயிற்சி

பாடசாலை மாணவத் தலைவர், தலைவிகளுக்கு கராத்தே, ஜூடோ போன்ற தற்காப்புப் பயிற்சிகள் வழங்கப்பட உள்ளன. நாட்டின் அனைத்துப் பாட சாலைகளையும் சேர்ந்த மாணவத் தலைவர்களுக்கு இவ்வாறு பயிற்சி வழங்கப்பட உள்ளது. பாடசாலை மாணவத் தலைவர்களின் ஆளுமை மற்றும் தலைமைத்துவத்தை விருத்தி செய்யும் நோக்கில் பயிற்சிகள் வழங்கப்பட உள்ளதாக பாடசாலை மாணவப் படையுணியின் பிரதம அதிகாரி கேணல் யூ.கே. அபேரட்ன தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் மாதமளவில் பாடசாலை மாணவத் தலைவர்களுக்கு இந்தப் பயிற்சி வழங்கப்பட உள்ளது. மாணவத் தலைவர்களாகப் பதவி வகிக்கும் அனைத்து மாணவ, மாணவியரும்

(19) ஆம் பக்கம் பார்க்க

## யாழ். உதவித் தேர்தல் ஆணையாளரின் அதிரடி இடமாற்றத்தின் மர்மம் என்ன?

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தின் உதவித் தேர்தல் ஆணையாளர் திடீரென இடமாற்றம் செய்யப்பட்டதன் மர்மம் என்ன என்பது குறித்து நிர்வாகசேவை அதிகாரிகள் மட்டத்தில் பரவலாக பேசப்பட்டு வருகிறது. இதுவரை யாழ். மாவட்ட உதவித்தேர்தல் ஆணையாளராக கடமையாற்றிய எஸ்.குகநாதன் கரைதுறைப்பற்று பிரதேச செயலராக மாற்றப்பட்டுள்ள நிலையில், யாழ். மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளராகப் பெரும்பான்மை இனத்தைச் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில் கரைதுறைப் பற்று பிரதேச செயலகத்திற்கு பிரதேச செயலராக குகநாதன் நியமிக்கப்பட்டுள்ளதுடன், மன்னார் மாவட்டத்தில் தேர்தல் ஆணையாளராக இருந்த அதிகாரி சந்தண யாழ். தேர்தல் ஆணையாளராக கடந்த வியாழன் முதல் நியமிக்கப்பட்டுள்ளார். இதேவேளை கரைதுறைப் பற்று பிரதேச செயலர் பிரிவில் பிரதேச செயலராக

(19) ஆம் பக்கம் பார்க்க

## தரமற்ற எக்ஸ் கதிர் இயந்திரங்களுக்குத் தடை

தனியார் மருத்துவமனைகள் சிலவற்றில் பாவனையில் உள்ள தரமற்ற எக்ஸ் கதிர் இயந்திரங்கள் மற்றும் சி.ரி. ஸ்கானர்களுக்கு தடை விதிக்கப்பட்டிருப்பதுடன் அவற்றுக்கான அனுமதிப்பத்திரங்களும் இரத்துச் செய்யப்படவிருக்கின்றன.

இதற்காக எக்ஸ்-ரே மற்றும் சீ.ரீ. ஸ்கேன்களின் தரம் குறைந்த செய்றபாடுகள் தொடர்பில் சுற்றி வளைப்புத் தேடுதல்

(19) ஆம் பக்கம் பார்க்க

## விடுவிக்கப்பட்ட போராளிகளுக்கு வாழ்வாதாரச் செயற்றிட்டம்

### முல்லையில் இன்று விசேடகூட்டம்


முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த புனர்வாழ்வு அளிக்கப்பட்டு மீள் குடியமர்ந்துள்ள முன்னாள் போராளிகளைச் சந்தித்துக் கலந்துரையாட, புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் சந்திரசிறி கஜதீர இன்று முல்லைத்தீவுக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்திற்கு உட்பட்ட உதவி அரசாங்க அதிபர்களினூடாக அறிவித்தல் விடுக்கப்பட்ட 200 முன்னாள் போராளிகளை நேரடியாகச் சந்தித்து அமைச்சர் கலந்துரையாடவுள்ளார்.

புனர்வாழ்வு அளிக்கப்பட்டு மீள்குடிமர்ந்த பின்னர், வீடு, கமத் தொழில், மீன்பிடி மற்றும் வங்கிக்கடன் என்பவற்றினைப் பெற்றுக்கொள்வதில் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றிக் கலந்துரையாடப்படவுள்ளது.

இச்சந்திப்பு இன்று காலை 9.00 மணிக்கு முல்லைத்தீவு கரைதுறைப் பற்றுப் பிரதேச செயலகக் கேட்போர் கூடத்தில் இடமபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (04)

இணையத்தில் தினமுரசு
www.thinamurasu.net



கிளிநொச்சி ஆனந்தபுரத்தில் துயரத்தில் மிதக்கும் இந்தச் சிறுமி புலமைப் பரிசில் பரீட்சையில் சாதனை படைத்துள்ளார்.

## வன்னியில் காணிப் பிணக்குகள் ஆணைக்குழுவில் குவியும் முறைப்பாடுகள்

மனித உரிமை ஆணைக்குழுவின் கிளிநொச்சி காரியாலயத்தில் தற்போது முறைப்பாட்டாளர்களின் எண்ணிக்கையிலும் அதிகரிப்பு ஏற்பட்டுள்ள்தாக யாழ். பிராந்திய இணைப்பாளர் த.கனகராஜ் தெரிவித்தார்.

இலங்கை மனித உரிமை ஆணைக்குழு தனது பிராந்திய காரியாலயத்தை தற்போது கிளிநொச்சியிலும் செயற்படுத்த ஆரம்பித்துள்ளது. அதன்படி ஒவ்வொரு புதன்கிழமையிலும் கிளிநொச்சி கண்டி வீதியில் உள்ள பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிராந்திய காரியாலயம் இயங்குகின்றது.

பளைப் பிரதேச செயலகத்திற்குட்பட்ட பகுதியில் இருந்து தனக்குக் கிடைக்க வேண்டிய பதவி உயர்வு வேறு ஒருவருக்கு கிடைக்கப்பெற்றதாக ஒருவர் முறைப்பாடு ஒன்றினை மேற்கொண்டார்

(19) ஆம் பக்கம் பார்க்க



'என்னுள் என்ன மாற்றமோ' என்ற யாழ்.மாவட்டத்தில் தயா ரிக்கப்பட்ட முதலாவது முழுநீளத் திரைப்படம் தொடர் பான ஊடகவியலாளர் சந்திப்பு யாழ்.கேம்பிறிச் மனேச்மன் கல்லூரியில், இயக்குநர் கவிமாறன் தலைமையில் இடம்பெற்ற போது...

# மருத்துவமனைப் படுகொலை 25 ஆம் ஆண்டு நினைவு நாள் இன்று

(யாழ்ப்பாணம்)

1987 ஆம் ஆண்டு யாழ். போதனா வைத்தியசாலையில் கடமையின் போது படுகொலை செய்யப்பட்ட வைத்தியசாலை ஊழியர்கள் 21 பேரின் 25 ஆம் ஆண்டு நினைவு தினம் இன்று யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

யாழ்.போதனா வைத்திய சாலையின் கதிரியக்கப்பிரிவிற்கு முன்பாகவுள்ள அவர்களின் உருவப்படம் வைக்கப்பட்டிருக்கும் நினைவாலயத்தில் இந்த நினைவு தின நிகழ்வுகள் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வின் போது இன்று காலை 9.31 மணிக்கு யாழ். போதனா வைத்தியசாலை பணிப்பாளர் சிறிபவானந்தராசா மற்றும் போதனா வைத்திய சாலை வைத்திய ஊழியர்கள் கலந்து கொண்டு படுகொலை செய்யப்பட்டவர்களுக்கு மலர் மாலை அணிவித்து மலரஞ்சலி செலுத்தி நினைவுரையாற்றவுள்ளனர். (பா)

# பயனுறுதி மிக்க நடமாடும் சேவை; ஊரெழுவில் திரண்டனர் மக்கள்

ஊரேழு பொது நோக்கு மண்டபத்தில் நேற்றுக் காலை 9.00 மணி தொடக்கம் 2 மணி வரை நடைபெற்ற நடமாடும் பொலிஸ் சேவையின் போது 07 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டன. பதிவு செய்யப்பட்டது முறைப்பாட்டிற்கு பிரதிகளும் வழங்கப்பட்டன.

கணேசா பாடசாலையில் கல்வி பயிலும் வறிய மாணவர்கள் 42 பேருக்கு பொலிஸாரினால் கொப்பிகளும், சமூகமளித் திருந்த பொது மக்களுக்கு பாக்கு மரக்கன்றுகளும் வழங்கபட்டன. பொலிஸ் பொறுப்பதிகாரி மகிந்த வைத்தியதிலக, குற்றத்தடுப்புப் பிரிவு அதிகாரி சுசில் பிறேமச்சந்திர, ஊரேழு பொது சுகாதாரப் பரிசோதகர் சதீஸ் குமார், ஊரெழு கணேசா வித்தியாலய அதிபர் எஸ்.திவிகரன், ஊரெழு கிராம அலுவலர் கோ. ஜெயந்திரன், ஊரெழு மீள எழுச்சித்திட்ட கிராம அபிவிருத்தி அமைப்பின் தலைவர் ம.அன்ரன் குமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

பொலிஸ் பொறுப்பதிகாரி மகிந்த வைத்தியதிலக உரையாற்றுகையில், வழிப்பறிக்களவுகள, பொது மக்கள் - பொலிஸ் ஒத்துழைப்பு பற்றியும் விரிவாக கூறினார்.

அத்துடன் ஊரெழு பொதுச் சுகாதாரப் பரிசோதகர் உரையாற்றுகையில்,

டெங்கு நுளம்பை கட்டுப்படுததும் முறைகளையும், டெங்குக் காய்ச்சல் வந்தால் அதில் ஏற்படும் அறிகுறிகள் போன்றவற்றை விளங்கப்படுத்தி காய்ச்சல் வந்தால் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதையும் பொது மக்களுக்கு அறிவுறுத்தினார்.

கிராம அலுவலர் உரையாற்றுகையில், பாதீனியம் நச்சுச் செடி எனவும் அதனை பொது மக்களுக்கு காண்பித்து அதன் பாதிப்பு பற்றியும் இந்த செடியினால் ஏற்படும் நோய்கள் பற்றியும் விழிப்புக்கருத்துக்கள் வழங்கி பாதீனியத்தை அழிக்க வேண்டும் என்பதனையும் கூறினார். (22)

# இரத்தினபுரியில் இன்று தேசிய கலை இலக்கிய போட்டி

## – யாழிலிருந்து 46 பேர் பங்கேற்பு

(யாழ்ப்பாணம்)

சமுர்த்தி சிறுவர் கழகங்களிடையே மாவட்டத்தில் நடத்தப்பட்ட கலை இலக்கியப் போட்டிகளில் வெற்றியீட்டி யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த 46 பேர் இரத்தினபுரியில் இன்று நடைபெறும் தேசிய கலை இலக்கியப் போட்டியில் கலந்து கொள்ளவுள்ளனர்.

இரத்தினபுரி எம்பிலிப்பிட்டியவில் நடைபெறும் இந்த நிகழ்வில் கலந்து கொள்வதற்காக 46 போட்டியாளர்களும், ஆசிரியர்களும் நேற்றைய தினம் யாழ்.செயலகத்திலிருந்து தென்பகுதிக்கு பயணமாகினர்.

இவர்கள் தனிப்பாடல்கள், நாட்டார் பாடல்கள், அறிவிப்பாளர், பேச்சு, நாடகம், கவிதை போன்ற போட்டிகளில் பங்கெடுக்கவுள்ளனர் எனவும் யாழ்.மாவட்ட சமுர்த்தி இணைப்பாளர் ரகுநாதன் தெரிவித்தார். (பா)

# பார்வையற்றோருக்கு புனர்வாழ்வு வவுனியா மாவட்டம் முன்னிலை

(வவுனியா)

பார்வையற்றோர் பலவிதப் படுகின்றனர். அவர்கள் எப்போதும் சுயமாக இயங்கச் செய்யப்படவேண்டும். அந்தவகையில் பார்வையற்றோருக்கு புனர்வாழ்வளிக்கும் செயற்பாட்டில் வவுனியா மாவட்டம் முன்னிற்கின்றது என வவுனியா பொது வைத்தியசாலையின் கண் வைத்திய நிபுணர் வைத்திய கலாநிதி எம். மலரவன் தெரிவித்துள்ளார்.

வவுனியா அரிமா சங்கத்தின் அனுசரணையுடன் வவுனியா நகரசபை மற்றும் வவுனியா மாவட்ட வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனம் இணைந்து நடாத்திய சர்வதேச வெள்ளைப் பிரம்பு தினம் வவுனியா நகர சபைத் தலைவர் ஐ. கனகையா தலைமையில் வவுனியா பொது நூலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றபோது அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பார்வையற்றோர் மற்றும் மந்த பார்வையுடையவர்கள் தொடர்பில் வவுனியா மாவட்டத்தில் மக்கள் மத்தியியல் விழிப்புணர்வு உள்ளது. அதன் காரணமாக இவ்வாறான பாதிப்புள்ளவர்கள் பயன்பெற்று வருகின்றனர். அத்துடன் பார்வையற்ற பலரும் புனர்வாழ்வு பெற்று சுயமாக இயங்கியும் சுயதொழில்செய்தும் வாழ்ந்து வருகின்றனர். பார்வையற்றவர்களுக்கென வவுனியா மாவட்டத்தில் புனர்வாழ்வு நிலையத்தினை அமைக்கும் முயற்சியில் வவுனியா அரசாங்க அதிபருடன் இணைந்து முயன்று வருகின்றோம். அது விரைவில் சாத்தியமாகும் எனவும் தெரிவித்தார்.

வவுனியா பொது வைத்தியசாலையின் கண் வைத்திய நிபுணர் வைத்தியகலாநிதி எம். மலரவன், அரிமா சங்கப் பிராந்தியத் தலைவர் அரிமா வைத்திய கலாநிதி ஐ.ஜி. சந்திரசேகரம், ஓகன் நிறுவனத்தின் தலைவர் வி. சுப்பிரமணியம் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகக் கலந்து கொண்டிருந்த இந்நிகழ்வில் பார்வையற்றோருக்கு பொது நூலகத்தில் புதிய நூலகப் பகுதி திறந்து வைக்கப்பட்டதுடன் வெள்ளைப் பிரம்பு வழங்கும் நிகழ்வும் இடம்பெற்றது.

# "கண்ணகியம்மன் காவியமாலை" தென்புலோலியில் வெளியீட்டு விழா

(வடமராட்சி)

சிதம்பரப்பிள்ளை பசுபதியினரல் மரபு வழிச் செய்யுள் வடிவில் பாடப்பட்ட புராதன நூலான 'கண்ணகியம்மன் காவியமாலை' வெளியீட்டு விழா தென்புலோலி மந்திகை கண்ணகை அம்மன் ஆலய மண்டபத்தில் இன்று காலை 9.00 மணிக்கு பருத்தித்துறை தும்பளை சைவப்பிரகாச வித்தியாலய அதிபர் கே.ஜே.யோகநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

ஆசியுரையை சிவஸ்ரீ.வை.இராமேஸ்வரக்குருக்கள் நிகழ்த்துவார். முதற்பிரதியை புலோலி கல்வி நிலைய இயக்குநர் ஆசிரியர் என்.சிவலிங்கம் பெற்றுக்கொள்வார். வடக்கு மாகாணக்கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறைச் செயலாளர் எஸ்.சத்தியசீலன் மதிப்புரையையும், பருத்தித்துறை பிரதேச செயலர் ஆர்.ரி.ஜெயசீலன சிறப்புரையையும், கரவெட்டி பிரதேச செயலர் எஸ்.சிவஸ்ரீ பரிந்துரையையும் நிகழ்த்துவார்கள்.

ஆய்வுரையை மருதங்கேணி பிரதேச செயலர் என்.திருலிங்கநாதனும், முகவுரையை மருதங்கேணி ப.நோ.கூ. சங்க பொது முகாமையாளர் பி.ஸ்ரீ இராமச்சந்திரனும் நயப்புரையை ஆசிரியர் பரா.ரதீசும், ஆய்வுரையை சைவப்புலவர், சித்தாந்த பண்டிதர் வி.ஏ.தங்கமயிலும், ஏற்புரைய்யை நூலாசிரியர் பசுபதியும், நன்றியுரையை மந்திகை கண்ணகை அம்பாள் ஆலயத்தலைவர் வி.சிவஞானஸ்கந்தமூர்த்தியும் நிகழ்த்துவார்கள். (01)

# உணவகங்களில் அச்சுத்தாளுக்குத் தடை

(யாழ்ப்பாணம்)

அச்சுத்தாள்களை பயன்படுத்தும் உணவு கையாளும் நிலையங்கள், பேக்கரிகள் மீது நவம்பர் முதல் கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

உணவகங்களில் பார்சல் செய்தல் மற்றும் கைதுடைத்தலுக்கு வெள்ளைத்தாள்களை மட்டுமே பயன்படுத்த வேண்டும். அச்சுத்தாள்களைப் பயன்படுத்தக் கூடாது என அறிவிக்கப்பட்ட போதிலும் இந்நடைமுறை நவம்பர் 1 முதல் கடுமையாக்கப்படவுள்ளது என்று யாழ்.மாநகர பிரதம பொது சுகாதாரப் பரிசோதகர் க.ஆ.ஜீவநாதன் தெரிவித்துள்ளார்.

வாழ்க வளமுடன்



தினமுரசின் பிறந்த நாள் வாழ்த்துக்கள்

பெயர் : பி.தக்ஷயன்

முகவரி: நாகபூசணி அம்மன் வீதி கோண்டாவில் கிழக்கு.

அகவை 2 இல்

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்



வலிகாமம் கல்வி வலய சர்வதேச ஆசிரியர் தின விழா இராமநாதன் கல்லூரியில் நடைபெற்றது. ஆசிரியர் ஒருவருக்கு யாழ்.பல்கலைக்கழகப் பேராசிரியர் ம.சின்னத்தம்பி சான்றிதழ் வழங்குவதையும், விழாவில் கலந்து கொண்டவர்களையும் காணலாம். (06)

# பின்தங்கிய கிராம மக்கள் வீட்டுத்திட்ட வசதி இன்றி அவதி

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் யுத்தத் தினால் இடம்பெயர்ந்து தற்போது மீள் குடியமர்ந்துள்ள பின்தங்கிய கிராமங் களைச் சேர்ந்த மக்கள் வீட்டுத்திட்ட வசதிகளும் தற்காலிக வீடுகளும் இன்றி பெரும் கஷ்டங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இம்மாவட்டத்தில் உள்ள கொக்குத் தொடுவாய் வடக்கு, தெற்கு மத்தி மற்றும் கருநாட்டுக்கேணி, கொக்கிளாய் கிழக்கு, மேற்கு ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த மக்களே இவ்வாறு கஷ்டங்களை அனுபவித்து வருகின்றனர்.

இதில் கொக்குத்தொடுவாய் 3 கிராம அலுவலர் பிரிவுகளில் 96 குடும்பங்க ளுக்கும், கருநாட்டுக்கேணியில் 50 குடும்பங்களுக்கும், கொக்கிளாய் 2 கிராம அலுவலர் பிரிவுகளில் 75 குடும்பங்க ளுக்கும் இதுவரை தற்காலிக வீடுகள் வழங்கப்படவில்லை என சுட்டிக்காட்டப் படுகிறது.

இதேவேளை இக்கிராம அலுவலர் பிரிவுகளில் வசிக்கும் மக்களுக்கு வீட்டுத் திட்ட வசதிகள் வழங்குவதில் பாரபட்சம் காட்டப்படுவதாகவும் குறிப்பாக உறவு களை இழந்து வறுமையில் வாழும் குடும்பங்கள், பெண்களைத் தலைமைத் துவமாகக் கொண்ட குடும்பங்கள் மற்றும் அங்கத்தவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப இவர்கள் வீட்டுத்திட்டத்திலிருந்து விலக் களிக்கப்படுவதாக மக்கள் சுட்டிக்காட்டு கின்றனர்.

தற்போது தற்காலிக வீடுகள் கூட இல்லாமல் மர நிழல்களின் கீழ் வாழ்வு தாகவும் இரவு வேளைகளில் கோயில் களிலும், பாடசாலைகளிலும் வாழ்வதாக தெரிவிக்கும் இம்மக்கள் வாழ்வாதார ரீதி யாக பெரும் கஷ்டங்களை அனுபவிப்ப தாகத் தெரிவிக்கின்றனர்.

மழைகாலம் தற்போது ஆரம்பமாகி யுள்ள நிலையில் வாழ்விடங்களின்றி அல்லற்படும் தமக்கு அரச, அரசசார் பற்ற நிறுவனங்கள் உதவ முன்வர வேண்டும் என இக்கிராமங்களைச் சேர்ந்த மக்கள் கோரிக்கை விடுக்கின்ற னர். (04)

## குப்பை கொட்டுவதனை கண்காணிக்க அலுவலகம்

(யாழ்ப்பாணம்)

கல்லுண்டாயில் யாழ். மாநகர எல்லைக்குள் சேரும் குப்பைகளைக் கொட்டுவதற்கு என ஒதுக்கப்பட்ட இடத் தில் பிற நிறுவனங்களும் தங்கள் பகுதியில் சேரும் குப்பைகளைக் கொண்டு வந்து கொட்டுவதைக் கண் காணிப்பதற்கும் அப் பகுதியில் கடமை யாற்றும் ஊழியர்கள் இளைப்பாறு வதற்குமான அலுவலகத்தை சுகாதாரக் குழுத் தலைவர் எஸ்.விஜயகாந் அவர் களால் சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது.

இவ் அலுவலகத்திற்கு சோலர் மூலம் மின்சார வசதி செய்யப்பட் டுள்ளதுடன், அலுவலகத்தில் பாது காப்பு உத்தியோகத்தர்கள் 24 மணி நேரமும் கடமையில் ஈடுபடுவர். இந் நிகழ்வில் மாநகர சபை அதிகாரிகள், ஊழியர்கள் கலந்துகொண்டனர்.

## விக்ரோறியா, திரேசா கல்லூரிகளின் கலை நிகழ்வுகள் நாடாளுமன்றில்

(யாழ்ப்பாணம்)

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி, கிளிநொச்சி திரேசா பெண்கள் கல்லூரி ஆகியவற்றின் மாணவர்களின் கலை நிகழ்வு கள் நாடாளுமன்றத்தில் எதிர்வரும் 23 ஆம் திகதி இடம்பெறும்.

சபாநாயகர் தலைமையில் நடைபெறும் சரஸ்வதி பூஜை நிகழ்வில் இவர்களின் கலை நிகழ்வுகள் ஆற்றுகை செய்யப் படவுள்ளது.

இதற்கான ஒழுங்கமைப்பை ஈ.பி.டி.பியின் நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான மு.சந்திரகுமாரின் ஏற்பாட்டில் வடமாகாண பண்பாட்டு அலு வல்கள் திணைக்களத்தின் மாவட்ட கலாசார அலுவலர்கள் மேற்கொண்டு வருகின்றனர்.

## உதயபுரம் கடற்கரை வீதி புனரமைப்புப் பணிகள் துரிதம்



(யாழ்ப்பாணம்)

அரியாலை தென்கிழக்கு உதயபுரம் கடற்கரை வீதி புனரமைப்பு வேலைகள் கடந்த வாரம் முதல் துரிதமாக நடை பெற்று வருவதாக நல்லூர் பிரதேச ஈ.பி.டி.பி அமைப்பாளரும் நல்லூர் பிரதேச சபையின் எதிர்க்கட்சித் தலைவருமாகிய அரவிந்தாசன் தெரிவித்துள்ளார்.

நெல்சிப் திட்டத்தின் கீழ் நல்லூர் பிரதேச சபையின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் இந்த வீதிப் புனரமைப்பு வேலைகள் ஆரம் பமாகி நடைபெற்று வருவதாக வும் அவர் குறிப்பிட்டார்.

இந்த வீதிப் புனரமைப்பு வேலைகள் எந்தச் சூழ்நிலையி லும் கைவிடப்படவில்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

இந்த வீதிப் புனரமைப்பு வேலைகள் இடை நடுவில் கை விடப்பட்டிருப்பதாக நேற்றைய தினமுரசு நாளிதழின் இரண்டாம் பக்கத்தில் வெளியாகியிருந்த செய்தி தவறானது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இந்த வீதியானது 19 இலட் சம் ரூபா செலவில் புனரமைக் கப்பட்டு வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. (பா)

## பொதுக்கூட்டங்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட சிக்கன கூட்டுறவு சங்க பருத்தித்துறை பிராந்தியத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் இன்று ஞாயிற் றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு மேலைப்புலோலி சதாவதானி கதிரைவேற் பிள்ளை கூட்டுறவுச் சங்க மண் டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டம் பிராந்தியத் தலைவர் சி.சிவச்செல்வன் தலைமையில் நடைபெறவுள்ள துடன், இதில் புதிய நிர்வாகத் தெரிவு இடம்பெறவுள்ளதாக பிராந்திய செயலாளர் அறிவித் துள்ளார். (109)

யாழ். மாவட்ட சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்க ளின் சமாசத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் எதிர்வரும் நவம்பர் மாதம் 25 ஆம் திகதி ஞாயிற் றுக்கிழமை காலை 9.30 மணிக்கு வீரசிங்கம் மண்டபத்தில் நடை பெறவுள்ளது.

உறுப்புரிமைச் சங்கங்களின் பொதுச் சபைப் பிரதிநிதிகள் தவறாது பங்குபற்றுமாறும் கூட்டத்திற்கு பிரேரணைகளை சமர்ப்பிக்க விரும்பின் எதிர்வரும் 25 ஆம் திகதி பிற்பகல் 4 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கு மாறும் சங்கத் தலைவர் அறிவித் துள்ளார். (109)

## டெங்கு நுளம்பைக் கட்டுப்படுத்த திணைக்களங்கள் மும்முரம்

(யாழ்ப்பாணம்)

டெங்கு நோய் நுளம்புப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தும் செயற்பாடுகள் தொடர்பான கலந்துரையாடல் யாழ்ப்பாண நூலக வளாகத்திலுள்ள வட மாகாண கேட்போர் கூடத்தில் பிரதம செயலாளர் திருமதி விஜயலட்சுமி ரமேஸ் தலைமை யில் அண்மையில் நடைபெற்றது.

இக்கலந்துரையாடலில் வட மாகாண பிரதிப் பிரதம செய லாளர்கள், சுகாதார அமைச்சின் செயலாளர் உட்பட ஏனைய அமைச்சின் செயலாளர்கள், மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், பிராந்திய சுகா தார சேவைகள் பணிப்பாளர் கள், மலேரியா தடை இயக்க வைத்திய அதிகாரிகள், யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த வைத் திய அதிகாரிகள், பிரதேச சபை செயலாளர்கள், வீதி அபி விருத்தி அதிகாரசபை மற்றும் திணைக்கள அதிகாரிகள், யாழ் மாவட்ட மேற்பார்வைப் பொது சுகாதாரப் பரிசோதகர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.


2011 ஆண்டிலும் மற்றும் இந்த ஆண்டிலும் டெங்குநோய் தொற்று பற்றிய புள்ளிவிபரங் கள் மாகாண ரீதியாக மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாள ராலும் யாழ். மாவட்ட ரீதியாக பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளராலும் விளக்கிக் கூறப்பட்டன.

யாழ் மாவட்டத்தில் தற்பொழுது டெங்குநோய் பரவ ஆரம்பித் துள்ளதால் கடந்த வாரம் டெங்கு நுளம்பு பெருக்க கட்டுப்பாட்டு வாரமாக பிரகடனப் படுத்தப்பட்டு உள்ளூராட்சி திணைக்களம், ஏனைய திணைக்களங்களுடன் இணைந்து கட்டுப்பாட்டு நட வடிக்கைகளில் ஈடுபட்டதாக யாழ்ப்பாண பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரினால் தெரிவிக்கப்பட்டது.

இந்நடவடிக்கைகளில் ஏனைய திணைக்களங்கள் விசேடமாக உள்ளூராட்சி திணைக்களங் களின் ஒத்துழைப்பு எதிர்வரும் காலங்களில் முழுஅளவில் வழங் கப்பட வேண்டும் எனத் தீர் மானிக்கப்பட்டது.

தற்பொழுது அநேகமான வீதி கள் திருத்தம் செய்யப்பட்டுக் கொண்டிருப்பதால், வீதி ஓரங்களி லுள்ள வடிகால்களிலும் வீதிகளில் தெருக்கள் சந்திக்கும் இடங்க ளிலும் நீர் தேங்கியுள்ளதால் நுளம்பு கள் பெருகக்கூடிய தாகவுள்ளது.

இவற்றைச் சீர்செய்து நீர் வழிந்தோடச் செய்வதற்கு பொறுப்பான திணைக்களம் ஏனைய திணைக்களங்களுடன் இணைந்து பிராந்தியமட்ட, பிரதேசமட்ட குழுக் கூட்டங் களில் கலந்துரையாடி நட வடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டது.



கைதடி கற்பக விநாயகர் ஆலயத்தின் விநாயகர் தெய்வீக கானங்கள் இறுவட்டின் இசையமைத்தமைக்காக ஸ்ரீகுக தாஸிற்கு மெல்லிசை மன்னன் விருது ஆலய நிர்வாகத்தினரால் வழங்கிக் கௌரவிக்கப்படுவதைக் காணலாம். (எஸ்.பி)

## சேமிப்புத் திட்டம்

(யாழ்ப்பாணம்)

மேலைப் புலோலி சதாவதானி கதிரைவேற்பிள்ளை சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கம் தீபாவளியை முன்னிட்டு பரிசுகளுடன் கூடிய விசேட சேமிப்புத் திட்டம் ஒன்றினை அறிமுகப்படுத்தியுள்ளது.

இத்திட்டத்தில் உறுப்பினர் உறுப்பினர் அல்லாத அனைவரும் கலந்து பயன் பெற்றுக்கொள்ள முடியும். தீபாவளித் தினத்தன்று 10,000 ஆயிரம் ரூபா தொகையினை வைப்புச் செய்யும் ஒருவர் வைப்பினை மேற்கொள்ளும்போதே பெறுமதிமிக்க பரிசுப்பொருள் ஒன்றினைப் பெற்றுக்கொள்ள முடியும். ஒருவர் ரூபா 10,000 ஆயிரம் ரூபா வீதம் தாம் விரும்பிய தொகையினை வைப்பிலிட்டுப் பரிசில் களைப் பெற்றுக்கொள்ளலாம். மேலும் 2013 ஆம் ஆண்டு வரும் தீபாவளி தினத்தன்றும் 2012 ஆண்டு தீபாவளி தினத்திலன்றும் வைப்பிலிட்ட அனைவரதும் பெயர்களும் அதிஸ்டம் பார்க்கப்பட்டு ரூபா 5000.00, 3000.00, 2000.00 என மேலதிக பரிசுகள் வழங்கப்படும். அத்துடன் இத்தீபாவளி தின விசேட சேமிப்பு வைப்புக்கு 9% வட்டி வழங்கப்படும். என அறிவிக்கப்பட்டுள்ளது. (109)

நம்பிக்கை குறையும் போது ஒவ்வொரு மனிதனும் நெறியற்ற கொள்கையை மேற்கொள்கிறான். - ஜான்மில்டன்.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, விளம்பரப் பணிமனை: 0212220188
thinamurasu@live.com
Online : www.thinamurasu.net

## தமிழ் மக்களுக்குத் தலைவர்களாகும் தகுதி?

வடக்கில் மாரிமழை தொடங்கிவிட்டது. முன்பெல்லாம் மழை மகிழ்ச்சியை மட்டுமே கொண்டுவந்தது. விவசாயிகளுக்கு பயிர் பச்சைகள் செழிக்கும் என்ற மகிழ்ச்சி. சிறுவர்களுக்கோ பள்ளிக்கூடத்துக்கு லீவு போடலாம் என்று மகிழ்ச்சி. வெக்கை அடங்குவதில் பலருக்கும் மகிழ்ச்சி. நீரேந்து பகுதிகளில் கனமழை பெய்தால் அடுத்த வருடத்தில் தடையின்றி மின்சாரம் கிடைக்க வாய்ப்பேற்படும் என்றும் விஷயமறிந்தவர்கள் மகிழ்வார்கள்.

இப்படிப் பலருக்கும் மகிழ்ச்சியைத் தந்தது மழை. இன்று அவ்வாறு மகிழ முடியவில்லை. யுத்தத்திற்குப் பின்னரான மீள் குடியேற்றங்களால் சமீப காலத்தில்தான் சொந்த இடங்களில் சென்று குடியமர்ந்திருக்கும் மக்கள் இந்தப் பருவமழை காரணமாக பல்வேறு இடர்ப்பாடுகளை எதிர்கொள்கின்றனர்.

பலருக்கு இன்னும் முறையான வீடுகள் கட்டிக் கொடுக்கப்படவில்லை. நிரந்தர வருமானத்திற்கான நிரந்தரத் தொழில்கள் அவர்களுக்கு அமையவில்லை. தங்களை நிலைப்படுத்திக் கொள்ளுமுன்னரே இந்தக் கனமழையை அவர்கள் எதிர்கொள்ள நேரிட்டிருப்பது மகாதுன்பம்தான். அதிலும் சென்ற வாரமே மீள்குடியேறிய மாதகல் பகுதி மக்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கு ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியினரே நேற்று முன்தினம் உடனடி உதவியாக உணவுப் பொதிகளை வழங்கியுள்ளனர். அரசாங்கத்துடன் பேசிச் செயற்படுவதால், மக்களைச் சொந்த இடங்களில் குடியமர்த்துவதோடு, அவர்கள் பழையபடி இயல்பு வாழ்க்கையைத் தொடங்குவதற்கான வசதிகளைச் செய்துதர வேண்டுமென்பதிலும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியினரே முனைப்புடன் செயற்பட்டு வருவதைக் காண முடிகிறது.

அதிக நாடாளுமன்ற உறுப்பினர்களையும் அதிக உள்ளூராட்சி சபைகளையும் கைப்பற்றி வைத்திருப்பவர்கள், அரசாங்கம் மீள்குடியமர்த்தியதில் உள்ள குறைபாடுகளைத் தேடிச் சொல்லிக்கொண்டிருப்பதே போதும் என்று கருதுகிறார்கள். மக்களின் அவலங்களைச் சென்று பார்க்கவோ, அவர்களது கஷ்டங்களைத் தீர்ப்பதற்கு ஏதாவது செய்யமுடியுமா என்று முயற்சிக்கவோ அவர்கள் தயாரில்லை.

மக்கள் கஷ்டப்பட கஷ்டப்பட அதை அரச எதிர்ப்பாக எப்படி மாற்றுவது என்றும், அந்த எதிர்ப்புணர்வுதான் தங்களுக்கு அடுத்த தேர்தலில் வாக்குகளைக் குவிக்கும் என்று நினைத்துமே இவர்கள் செயற்பட்டுவருகிறார்கள். மக்களைப் போய்ப் பார்ப்பதோ, அவர்களது கஷ்டங்களைத் தெரிந்துகொள்வதோ, குறைகளைத் தீர்க்க முயல்வதோ இவர்களது சிந்தனையில் வருவதில்லை.

மக்களிடம் போய் அவர்கள் கஷ்டங்களை மாற்றுவதைவிட காரில் போய் ரவுணில் இறங்கி சுலோக அட்டைகளைப் பிடித்துக்கொண்டு நின்றுவிட்டு, மாபெரும் ஆர்ப்பாட்டம் நடத்தியதாகத் தங்கள் பத்திரிகையில் செய்தியைப் போட்டுவிட்டால் அரசியல் வேலை முடிந்தது என்ற சொகுசான வாக்கு வேட்டைக்குப் பழக்கப்பட்டு விட்டார்கள். மக்களுக்கும் இதுதான் அரசியல் என்று பழக்கப்படுத்தி விட்டிருக்கிறார்கள்.

மக்களின் கஷ்டங்களை மாற்றுவதற்கு எந்தத் துரும்பையும் எடுத்துப் போடாமலே, அரைநூற்றாண்டுக்கும் மேலாக மக்களின் தலைவர்களாய் வலம் வந்துகொண்டிருக்கும் வித்தையை தமிழரசுக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்களிடமிருந்துதான் உலகம் கற்றுக்கொள்ள வேண்டும். - ஆசிரியர்

# இலங்கையில் வருடம் ஒன்றிற்கு 2 இலட்சம் பேருக்குப் பாலியல் நோய்

(கொழும்பு)

இலங்கையில் ஆண்டொன்றுக்கு 60 ஆயிரம் முதல் 2 இலட்சம் பேர் பாலியல் ரீதியிலான நோய்களுக்கு உள்ளாகின்றனர் என்று புதிய ஆய்வுகளின் மூலம் தெரியவந்துள்ளது என்று தேசிய பாலியல் நோய்கள் மற்றும் எயிட்ஸ் ஒழிப்பு வேலைத்திட்டத்தின் விசேட நிபுணர் டாக்டர் ஜி.வீரசிங்க தெரிவித்துள்ளார்.

குறித்த தொகையில் பாலியல் நோய்களுக்கு உள்ளாகின்ற போதிலும், சுமார் 10 ஆயிரம் முதல் 15ஆயிரம் பேர் மாத்திரமே இது தொடர்பான சிகிச்சைகளுக்காக வைத்தியர்களை நாடுகின்றனர்.

வெட்கம், சமூகத்திலிருந்து ஒதுக்கப்படுதல், அறியாமை போன்ற காரணங்களாலேயே இந்நோய்களால் பீடிக்கப்பட்டவர்கள் உரிய சிகிச்சைகளைப் பெற்றுக்கொள்வதில்லை.

எச்.ஐ.வி., எயிட்ஸ் தொற்றானது தாயிடமிருந்து குழந்தைக்கு தொற்றுவதால் கர்ப்பிணிப் பெண்கள் இரத்தப் பரிசோதனைகளை மேற்கொள்வது சிறந்தது. இலங்கையில் எயிட்ஸ் நோயானது ஆண் ஓரினச் சேர்க்கையாளர்கள் காரணமாகவே அதிகளவில் பரவுகின்றது என கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# நீரின் அளவை மதிப்பிடுவதற்கு புதிய தொழில்நுட்ப கட்டமைப்பு

(கொழும்பு)

நாடு முழுவதும் நீர்த்தேக்கங்கள், ஆறுகள் மற்றும் குளங்களில் நீரின் அளவை நாளாந்தம் மதிப்பிடுவதற்கான புதிய தொழில்நுட்ப கட்டமைப்பை நாடளாவிய ரீதியில் நிறுவுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்தத் தகவல்களை செய்மதி தொழில்நுட்பம் மூலம் நீர்ப்பாசனத் திணைக்களத்தின் தலைமையகமும் நீர்ப்பாசன மற்றும் நீர்வளங்கள் முகாமைத்துவ அமைச்சும் நாளாந்தம் பெற்றுக்கொள்ள முடியும் என அரசாங்கத் தகவல் திணைக்கள இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது.

எதிர்வரும் 15 மாதங்களுக்குள் இந்தப் புதிய தொழில்நுட்ப கட்டமைப்பு நிறுவப்படவுள்ளது.

இதன்கீழ் 122 கண்காணிப்பு நிலையங்கள் நாடு முழுவதும் நிறுவப்படுவதற்கான உடன்படிக்கையில் அரசாங்கமும் ஜேர்மனியும் கைச்சாத்திட்டுள்ளன. நாடு முழுவதும் நிறுவப்பட்டுள்ள தரவு சேகரிப்பு நிலையங்கள் ஊடாக மணித்தியாலத்திற்கு ஒரு தடவை நீர் நிலைகளின் நீர்மட்டம் அளவு தொடர்பான விபரங்கள் கொழும்பிற்கு அனுப்பி வைக்கப்படவுள்ளன.

இதற்கமைய நீர்முகாமைத்துவ நடவடிக்கைகளின் பொருட்டு உரிய தீர்மானங்களை சரியான முறையிலும் துரிதமாகவும் மேற்கொள்வதற்கான சந்தர்ப்பம் கிடைக்கும் என நீர்ப்பாசன மற்றும் நீர்வள முகாமைத்துவ அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

# "ஹஜ்" விடுமுறை மாற்றத்தால் ஹோட்டல் உரிமையாளர்கள் அதிருப்தி

(கொழும்பு)

இவ்வருடத்திற்கான ஹஜ் பண்டிகை எதிர்வரும் 27ஆம் திகதி என கொழும்பு பெரிய பள்ளிவாசல் அறிவித்ததன் பின்னர், 26ஆம் திகதி நிர்ணயிக்கப்பட்ட பொது விடுமுறைதினமானது 27ஆம் திகதிக்கு அரசினால் மாற்றப்பட்டது. இந்நிலையில் 26ஆம் திகதி விடுமுறை தினத்திற்காக பதிவுகளை மேற்கொண்ட ஹோட்டல் உரிமையாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக விசனம் தெரிவிக்கின்றனர்.

இவ்விடயம் தொடர்பாக ஹோட்டல் உரிமையாளர்கள் கருத்துத் தெரிவிக்கையில்;

26 ஆம் திகதி விடுமுறை என்பதால் எமது வாடிக்கையாளர்கள் பலர் முன்பதிவுகளை அன்றைய தினம் ஹோட்டல்களில் மேற்கொண்டிருந்தனர்.

ஆனால், விடுமுறை தினத்தை மாற்றியதால் வாடிக்கையாளர்கள் தமது முன்பதிவுகளை இரத்துச் செய்கின்றார்கள். இல்லையேல் மறுதினத்திற்கு பதிவினை கேட்கிறார்கள். மறுதினம் அதாவது 27 ஆம் திகதி ஏற்கனவே வேறு வாடிக்கையாளர்களால் பதிவுசெய்யப்பட்டுள்ளதால் அதுவும் சிக்கலாக இருக்கிறது.

இந்நிலையில் வாடிக்கையாளர்களில் பலர் தமது 26ஆம் திகதி பதிவுகளை இரத்துச் செய்துள்ளனர். இவ்விடயத்தினால் ஹோட்டல் உரிமையாளர்களுக்கு பாரிய நஷ்டம் ஏற்பட்டுள்ளது என அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

# பிரித்தானியாவிலிருந்து 60 பேர் இலங்கைக்கு நாடு கடத்தல்

(கொழும்பு)

பிரித்தானியாவில் புகலிடக் கோரிக்கை நிராகரிக்கப்பட்ட 60 இலங்கையர்கள் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமையன்று இலங்கைக்கு திருப்பி அனுப்பப்படவுள்ளனர்.

இதற்கான ஆயத்தப் பணிகளை பிரித்தானிய குடிவரவுத்துறையினர் மேற்கொண்டு வருகின்றனர்.

இலங்கைக்கு திருப்பியனுப்பப்படுவோர் முகங்கொடுக்கும் கைதுகள், சித்திரவதைகள் போன்றவற்றின் மத்தியிலேயே இந்த 60 பேரும் திருப்பி அனுப்பப்படுவதாக மனித உரிமை அமைப்புக்கள் குற்றம் சுமத்தியுள்ளன.

இந்தநிலையில் இந்த நாடுகடத்தலை தடுக்கும் முயற்சிகளில் பிரித்தானியாவில் உள்ள சட்ட அமைப்புக்கள் ஈடுபட்டுள்ளன.

கடந்த செப்ரெம்பர் 19ஆம் திகதியும் இவ்வாறு நாடு கடத்தப்படவிருந்த இலங்கையர்களில் 35 பேர் இறுதிநேர சட்ட ஏற்பாடுகளின் அடிப்படையில் நாடு கடத்தப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## மழையுடன் கூடிய காலநிலையால் சிறுவர்களுக்கு வைரஸ் காய்ச்சல்

(கொழும்பு)

நாட்டில் தற்போது நிலவிவரும் மழையுடன் கூடிய காலநிலையால் சிறுவர்கள் மத்தியில் வைரஸ் காய்ச்சல் பரவி வருவதாக சிறுவர் நோய் தொடர்பான விசேட வைத்தியர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார்.

இதனால் சிறுவர்களை மழையில் இருந்து பாதுகாத்துக் கொள்ளுமாறு அவர் பெற்றோர் மற்றும் பாதுகாவலர்களிடம் கேட்டுக் கொண்டுள்ளார்.

சிறுவர்கள் மழையில் நனையலாம். ஆனால் அதிக நேரம் மழையில் நனைவது உகந்ததல்ல.

இதனால் வைரஸ் நோய் ஏற்படக்கூடும் சிறுவர்கள் மழையில் நனைந்த பின்னர் கதிப்பமான துணியால் துடைத்தெடுத்து உடன் ஆடை மாற்ற வேண்டும்.

அதன்மூலம் சிறுவர்களை வைரஸ் காய்ச்சலில் இருந்து காக்க முடியும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## குழாய்க் கிணற்றுவரியை அனுமதிக்கப் போவதில்லை

பாரம்பரிய குழாய்க் கிணறுகளில் இருந்து பெறப்படும் நீருக்கு வரி அறவிடும் திட்டத்தை தாம் அனுமதிக்கப் போவதில்லை என்று நீர் வளத்துறை அமைச்சர் தினேஸ்குணவர்தன தெரிவித்துள்ளார்.

இலங்கையில் பராம்பரியமாகக் காணப்படும் குழாய்க் கிணறுகளில் இருந்து பெறப்படும் நீருக்கும் வரி அறவிடுவது குறித்து ஆலோசிக்கப்படுவதாக, நீர்வடிகாலமைப்பு சபை தெரிவித்திருந்தது.

இதற்காக நீர்வடிகாலமைப்பு சட்டத்தில் சீர்திருத்தத்தை மேற்கொள்ளவும் தீர்மானிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பில் அமைச்சர் தினேஸ் குணவர்தன கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

# 13 ஆவது திருத்தமும் கூட்டமைப்பின் சுயநல அரசியலும்

■ சங்கர சிவன்



பதின்மூன்றாவது அரசியலமைப்புத் திருத்தம் மீண்டும் பேசு பொருள் ஆகியிருக்கின்றது. இத்திருத்தத்தை நீக்குவதற்கு ஆதரவானதும், எதிரானதுமான கருத்துக்கள் மீண்டும் முன்வைக்கப்படுகின்றன.

பதின்மூன்றாவது திருத்தம் நடைமுறைக்கு வந்த நாளிலிருந்து பேரினவாத சக்திகள் அதை நீக்க வேண்டும் என்று கூறி வருகின்றன. இலங்கை சிங்கள பௌத்த நாடு என்ற பிழையான நிலைப்பாட்டில் நின்றே பேரினவாதிகள் இக்கருத்தை முன் வைக்கின்றனர். அதேநேரம், சில நடைமுறைப் பிரச்சினைகள் தலைதூக்கும் போது அவற்றின் நதி மூலத்தைத் தேடிப் பார்க்காமல் பதின்மூன்றாவது திருத்தமே அவற்றுக்கான காரணம் என்ற தவறான புரிகையின் அடிப்படையில் அத்திருத்தத்தை நீக்க வேண்டும் என்ற கோரிக்கையும் முன்வைக்கப் படுவதுண்டு.

இப்போது இப்பிரச்சினை பெரிதாகத் தலைதூக்கியிருக்கின்றது. திவிநெகும சட்டமூலத்தை நிறைவேற்றுவதில் ஏற்பட்ட தடங்கல் இதற்குக் காரணம். சட்டமூலத்தை நிறைவேற்றுவதற்குப் பதின்மூன்றாவது திருத்தம் தடையாக இருக்கின்றது என்று கருதுபவர்களும் திருத்தை நீக்க வேண்டும் என்று கூறுகின்றார்கள். எல்லாப் பிரச்சினைகளையும் சிங்கள பௌத்த நாடு என்ற நிலைப்பாட்டில் நின்று பார்க்கும் பேரினவாதிகளும் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திப் பதின்மூன்றாவது திருத்தத்தை நீக்க வேண்டும்என்ற கோரிக்கையை வலியுறுத்துகின்றார்கள்.

திவிநெகும கூட்டமூலம் தொடர்பாக ஏற்பட்டிருக்கும் தடங்கல் போன்ற சந்தர்ப்பங்களில் எத்தகைய நடைமுறையைப் பின்பற்ற வேண்டும் என்பது பற்றி அரசியலமைப்பில் எதுவும் சொல்லப்படவில்லை. இது பதின்மூன்றாவது திருத்தத்தைத் தயாரித்தவர்களின் தவறு. இத்தவறை நிவர்த்திக்க வேண்டும் எனக் கூறுவதற்குப் பதிலாக பதின்மூன்றாவது திருத்தத்தை நீக்க வேண்டுமெனக் கோருவது ஒருநடைமுறைப் பிரச்சினையைச் சர்வதேசப் பரிமாணமுடைய அரசியல் பிரச்சினையாக மாற்றிவிடும். அரசியலமைப்பிலுள்ள குறைபாட்டைச் சட்டரீதியாக நீக்குவது சிரமமான காரியமாக குறைக்கும் வகையில் அரசாங்கம் செயற்படக் கூடாது என்றும் சொல்கிறார். பதின்மூன்றாவது திருத்தத்திலும் மாகாண சபையிலும் அவ்வளவு நம்பிக்கையும் பற்றுதலும் திடீரெனக் கூட்டமைப்புக்கு ஏற்பட்டிருக்கின்றது.

மாகாண சபை மூலம் தமிழ் மக்களுக்கு ஓரளவு நன்மை உண்டு என்பதுகூட்டமைப்புத் தலைவர்களுக்கு ஏற்கனவே தெரிந்த விடயம் தான். தெரிந்திருந்தும், பதின்மூன்றாவது திருத்தமும் மாகாண சபையும் எவ்வித பிரயோசனமும் இல்லாதவை என்றும் அவற்றை நிராகரிக்க வேண்டும் என்றும் ஏன் தமிழ் மக்களுக்குக் கூறினார்கள் என்ற கேள்வி எழலாம். அது நியாயமான கேள்வி. கூட்டமைப்பின் சுயநல அரசியலே காரணம் என்பது தான் இக்கேள்விக்கான பதில்.

மாகாண சபையை மக்கள் ஏற்றால் அதன் மூலம் ஓரளவு நன்மை கிடைப்பதை நடைமுறையில் விளங்கிக்கொள்வார்கள். மாகாண சபையை அடிப்படையாகக் கொண்டு படிப்படியாக அரசியல் தீர்வை அடைய முடியும் என்பதையும் ஏற்றுக்கொள்வார்கள். இனப்பிரச்சினைக்கு இப்படி ஒருஇலகுவான தீர்வு வழி இருப்பதை மக்கள் விளங்கிக் கொண்டால் தங்களின் அரசியல் அஸ்தமித்துவிடும் என்ற அச்சம் கூட்டமைப்புத் தலைவர்களுக்கு இருந்தது. இனப்பிரச்சினை தீராமலிருப்பது தான் இவர்களின் அரசியலுக்கு மூலதனம். அதனால் மாகாண சபையில் எதுவுமே இல்லை எனக் கூறி மக்களை அந்தப் பக்கம் திரும்பவிடாமல் தடுத்துத் தங்கள் சுயநல அரசியலை நடத்திக் கொண்டிருந்தார்கள்.

இந்தியாவின் நட்புக்குக் கூட்டமைப்பு முக்கியத்துவம் அளிப்பதாலேயே, இத்திருத்தத்தின் மூலம் தமிழ் மக்களுக்கு நன்மை உண்டு என்று கூட்டமைப்பு இப்போது பேசத் தொடங்கியிருக்கின்றது. பதின்மூன்றாவது திருத்தம் பறிபோவதற்குத் தாங்களும் உடந்தையாக இருந்ததாக இந்தியா கருதிவிடக் கூடாது என்பது இவர்களின் பிரதான அக்கறை.

கூட்டமைப்புக்குள் நிலவும் முரண்பாட்டை இந்த விடயத்திலும் காணலாம். நாடாளுமன்றத் தெரிவுக் குழுவுக்குப் போய் பதின்மூன்றாவது திருத்தத்தைத் தக்க வைக்க வேண்டும் என்ற கருத்தைச் சுமந்திரன் முன்வைக்கிறார். அரசாங்கம் பதின்மூன்றாவது திருத்தத்தை நீக்க முடிவு செய்திருப்பதால் தெரிவுக் குழுவுக்குச் செல்வது பலனற்றது என்றும் சாத்வீகப் போராட்டத்தை ஆரம்பிக்க வைக்க வேண்டும் என்றும சுரேஷ் பிரேமச்சந்திரன் கூறுகின்றார்.

அரசாங்கமே முடிவு செய்துவிட்டது என்று சுரேஷ்பிரேமச்சந்திரன் எதை ஆதாரமாக வைத்துச் சொல்கின்றாரோ தெரியாது. இப்படி ஆதாரமற்ற அறிக்கைகளை விடுவது அவருக்குக் கைவந்த கலையாகிவிட்டது. அரசாங்கம் அப்படியான எந்த முடிவையும் எடுக்கவில்லை. பதின்மூன்றாவது திருத்தத்தைநீக்கவேண்டும் என்று அரசாங்கத்தைச் சேர்ந்த சிலர் கூறுகின்றார்கள் என்பதற்காக அது அரசாங்கத்தின் முடிவு ஆகிவிடாது. பதின்மூன்றாவது திருத்தத்துக்கு ஆதரவானவர்களும் அரசாங்கத்தில் இருக்கின்றார்கள்.

தெரிவுக் குழுவை நிராகரித்துச்சாத்வீகப் போராட்டத்தை ஆரம்பிப்பது இனப்பிரச்சினையின் தீர்வுக்கு ஒரு போதும் இட்டுச் செல்லாது. சாத்வீகப் போராட்டம் மக்களை மேலும் துன்பத்தில் ஆழ்த்தும் நிலைக்கு இட்டுச் சென்றுவிடும் என்பது மாத்திரமின்றி கூட்டமைப்பின் சுயநல அரசியலின் இன்னொரு வடிவமாகவும் மாறிவிடும். தமிழரசுக் கட்சி நடத்திய சத்தியாக்கிரகம் போன்ற போராட்ட வடிவத்தையே சுரேஷ் சாத்வீகப் போராட்டம் என்று கூறுகின்றார். அது போன்ற சாத்வீகப் போராட்டத்தை நடத்துவதென்றால் தெளிவான ஒரு கொள்கையைமுன் வைத்து நடத்த வேண்டும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இன்று கொள்கை இல்லாத கூட்டுக் கதம்பம். இனப்பிரச்சினையின் தீர்வுக்கான கொள்கை எது என்று திட்டவட்டமாகக்கூறுவதற்குக் கூட்டமைப்பின் எந்தத்தலைவராலும் இதுவரை முடியவில்லை. சுரேஷ் பிரேமச்சந்திரனாலும் முடியவில்லை. ஐக்கிய இலங்கையில் அரசியல் தீர்வுஎன்று மேலோட்டமாகச் சொல்கின்றார்களேயொழிய அந்தத் தீர்வு எவ்வாறானதாக இருக்க வேண்டும் எனக் கூறுவதற்கு. ஏனோ தயங்குகின்றார்கள்.

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இன்று கொள்கை இல்லாத கூட்டுக் கதம்பம். இனப்பிரச்சினையின் தீர்வுக்கான கொள்கை எது என்று திட்டவட்டமாகக் கூறுவதற்குக் கூட்டமைப்பின் எந்தத் தலைவராலும் இதுவரை முடியவில்லை. இந்த நிலையில் கூட்டமைப்பு சாத்வீகப் போராட்டத்தை ஆரம்பிக்குமேயானால், அது இலக்கு இல்லாத போராட்டமாகவே இருக்கும். இந்தப் போராட்டத்தில் இனப்பிரச்சினைக் கான தீர்வு முன்வைக்கப்பட மாட்டாது. அரசாங்கம் அப்படித் தீமை செய்கின்றது, இப்படித் தீமை செய்கின்றது என்று அவலங்களைப் பட்டியல் போட்டு நடத்தும் போராட்டமாகவே இருக்கும். அவ்வாறான போராட்டம் தலைவர்கள் நாடாளுமன்றத்துக்குச் செல்வதற்கு உதவுமேயொழிய இனப்பிரச்சினையின் தீர்வுக்கு உதவாது.**

இருக்காது.

பதின்மூன்றாவது திருத்தத்தை நீக்க வேண்டும் என்ற கோரிக்கை எழுந்ததால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஏமாற்று அரசியல் அம்பலமாகுவதையும் காண முடிகின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பதின்மூன்றாவது அரசியலமைப்புத் திருத்தத்தை முற்றுமுழுதாக நிராகரித்து வந்தது. அதில் ஏற்றுக்கொள்வதற்கு எதுவுமே இல்லை எனக் கூறியது. அந்த அடிப்படையில் மாகாண சபையையும் நிராகரித்தது. கிழக்கு மாகாண சபைத் தேர்தலில்போட்டியிட்டபோது கூட மாகாண சபையை ஏற்றுக்கொள்வதாகக் கூறவில்லை. தமிழ் மக்கள் தங்களுக்குப் பின்னால் நிற்கின்றார்கள் என்பதைச் சர்வதேச சமூகத்துக்கு எடுத்துக்காட்டுவதற்காகவே போட்டியிடுவதாகக் கூறினார்கள். ஆனால், தேர்தல் முடிந்ததும் எப்படியாவது ஆட்சி அமைக்க வேண்டும் என்று மேற்கொண்ட முயற்சி அவர்களின் சந்தர்ப்பவாத அரசியல்.



பதின்மூன்றாவது அரசியலமைப்புத் திருத்தத்தை நீக்குவதற்கான முயற்சி நாடாளுமன்றத் தெரிவுக் குழுவுக்கு வரலாம் என்ற சந்தேகம்ஏற்பட்ட பின்னர் கூட்டமைப்பு அத்திருத்தத்துக்கு ஆதரவாகப் பேசத் தொடங்கியிருக்கின்றது. பதின்மூன்றாவது திருத்தம் மாகாணங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட அதிகாரப் பகிர்வை வழங்குகின்றது என்கிறார் சுமந்திரன். பதின்மூன்றாவது திருத்தத்தின் மூலம் மாகாணங்களுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களைக்

இந்த நிலையில் கூட்டமைப்பு சாத்வீகப் போராட்டத்தை ஆரம்பிக்குமேயானால், அது இலக்கு இல்லாத போராட்டமாகவே இருக்கும். இந்தப் போராட்டத்தில் இனப்பிரச்சினைக்கான தீர்வு முன்வைக்கப்பட மாட்டாது. அரசாங்கம் அப்படித் தீமை செய்கின்றது, இப்படித் தீமை செய்கின்றது என்று அவலங்களைப் பட்டியல் போட்டு நடத்தும் போராட்டமாகவே இருக்கும். அவ்வாறான போராட்டம் தலைவர்கள் நாடாளுமன்றத்துக்குச்செல்வதற்கு உதவுமேயொழிய இனப்பிரச்சினையின் தீர்வுக்கு உதவாது. நடைமுறைச் சாத்தியமான கொள்கையும் சமகால யதார்த்தம் பற்றிய புரிகையும்தான் இனப்பிரச்சினையின் தீர்வுக்கான இன்றைய தேவைகள். கொள்கை இல்லாத போராட்டங்களால் தீர்வை அடைய முடியாது. ●

# அணுத் தொழில்நுட்ப பரிமாற்றம்; இந்தியா - இலங்கை உடன்பாடு

(கொழும்பு)


இந்தியாவுக்கும் இலங்கைக்கும இடையில் அணுத் தொழில்நுட்ப அறிவைப் பரிமாற்றிக் கொள்வதற்காக சிவில் அணு ஒத்துழைப்பு உடன்படிக்கையை ஏற்படுத்துவதற்கு இரண்டு நாடுகளும் தீர்மானித்துள்ளன.

கூடங்குளம் அணுமின் நிலையம் தொடர்பிலான விடயங்களும் இருதரப்பு உடன்படிக்கையில் உள்ளடக்கப்பட உள்ளதாக அணுசக்தி அதிகார சபையின் தலைவர் கலாநிதி ரஞ்ஜித் விஜேவர்தன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான நகல் உடன்படிக்கையொன்றை ஓரிரு மாதங்களுக்குள் ஏற்படுத்திக் கொள்வதற்கு இருநாட்டு பிரதிநிதிகளுக்கும் இடையில் இடம்பெற்ற பேச்சுவார்த்தையின் போது இணக்கம் காணப்பட்டிருந்தது.

இதற்கமைய இந்திய பிரதிநிதிகள் குழுவொன்று அடுத்த வருட முற்பகுதிக்குள் இலங்கை வரவுள்ளது. நகல் உடன்படிக்கை தொடர்பில் இதன் போது இறுதி இணக்கப்பாடு எட்டப்படவுள்ளது.

இலங்கையின் அணுத் தொழில்நுட்ப அறிவை மேம்படுத்திக்கொள்வதற்காக இந்திய



அணுத் தொழில்நுட்ப நிபுணர்களின் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்ள எதிர்பார்ப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்திய அணுத்திட்ட நிலையங்களில் இலங்கையின் அணு விஞ்ஞானிகளுக்கு எதிர்காலத்தில் துறைசார் பயிற்சிகளை இந்த உடன்படிக்கையின் மூலம் பெற்றுக்கொடுப்பதற்கும் எண்ணியுள்ளது.

இந்தியாவுடன் ஏற்படுத்திக் கொள்ள திட்டமிட்டுள்ள சிவில் அணு ஒத்துழைப்பு உடன்படிக்கையின் மூலம் இலங்கையின் அணுத் தொழிலநுட்பம் மேலும் முன்னேற்றமடையும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# புத்தளத்தில் சூடு குடும்பஸ்தர் பலி

(கொழும்பு)

புத்தளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பாலாவி நாகவில்லு பகுதியில் இனந்தெரியாதோரினால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் மரணமடைந்துள்ளார்.

நேற்றுமுன்தினம் பிற்பகல் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில், பாலாவி நாகவில்லு மீள்குடியேற்றக் கிராமத்தைச் சேர்ந்த முஹமது நஸார் (வயது 33) என்பவரே மரணமடைந்துள்ளார். சடலம் புத்தளம் வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பில் புத்தளம் பொலிஸார் விசாரணையை முன்னெடுத்துள்ளனர்.

# கட்சியிலிருந்து இடைநிறுத்தியமைக்காக சட்ட நடவடிக்கை எடுப்போம்

(கொழும்பு)



மக்கள் பேரணியில் பங்கேற்க வேண்டாம் என கட்சி எங்களுக்கு உத்தியோகபூர்வமாக அறிவிக்கவில்லை. இவ்வாறான நிலையில் கட்சியிலிருந்து எம்மை இடைநிறுத்தியமைக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்போம் என நாடாளுமன்ற உறுப்பினர் அசோக அபயசிங்க தெரிவித்துள்ளார்.

சட்ட நடவடிக்கை எடுப்பது தொடர்பில் சட்டத்தரணிகளுடன் கலந்துரையாடி வருகின்றோம். இந்தப் பேரணியில் கலந்து கொள்ள வேண டாம் என கட்சி எழுத்துமூலம் உத்தியோகபூர்வமாக அறிவித்திருக்க வேண்டும். எனினும், இந்தப் பேரணியில் ஐ.தே.க.வினர் கலந்து கொள்ளக்கூடாது என்பதனை நாங்கள் ஊடகங்கள் ஊடாகவே அறிந்துகொண்டோம்.

இதேவேளை, கட்சியிலிருந்து இடைநிறுத்திவைக்கப்பட்டுள்ள ஏனைய இரு நாடாளுமன்ற உறுப்பினர்களான பாலித ரங்கே பண்டார, பாலி தெவரப்பெரும ஆகிய இருவரும் சட்ட நடவடிக்கை எடுப்பது குறித்து ஆலோசித்து வருகின்றனர்.

# ஆஸி. செல்வதைத் தடுக்க கடற்படையினர் உஷார்

(கொழும்பு)

சட்டவிரோதமாக அவுஸ்ரேலியா செல்வோரைத் தடுப்பதற்கான நடவடிக்கை தொடர்ந்தும் முனனெடுக்கப்படுவதாக இலங்கை கடற்படை அறிவித்துள்ளது.

இவ்வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் சட்ட விரோதமாக அவுஸ்ரேலியாவிற்கு செல்வதற்கு முயற்சித்த இரண்டாயிரத்து 600 இற்கும் மேற்பட்டவர்கள் இலங்கையைச் சூழவுள்ள கடற்பரப்பில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

. இவவாறு சட்ட விரோதமாகச் செல்பவர்களை கைது செய்வதற்கு கடற்படையினரின் படகுகள் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக கடற்படை பேச்சாளர் கொமாண்டர் கோசல வர்ணகுலசூரிய கூறியுள்ளார்.

கடற்றொழிலுக்கு செல்லும் போர்வையில் சிறு குழுக்களாக கடலுக்குச் செல்வோர் ஆழ்கடல் பரப்பில் ஒன்று சேர்ந்து பெரிய படகுகள் மூலம் அவுஸ்ரேலியாவிற்கு செல்வதாக கடற்படை பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

அவ்வாறானவர்களைக் கடற்படையினர் கைது செய்து பொலிஸாரிடம் ஒப்படைத்த பின்னர் சட்ட நடவடிக்கை எடுக்கப்படுவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# மகிந்தபுர 560 வீட்டுத் திட்டத்துக்கு அமைச்சரவை அங்கீகாரம்

(கொழும்பு)

கிருலப்பனையில் நிரமாணிக்க உத்தேசிக்கப்பட்டுள்ள மகிந்தபுர ஜனசெவன 560 வீடுகள் கொண்ட தொடர்மாடி வீடமைப்புத்திட்டத்துக்கு அமைச்சரவை அனுமதியளித்துள்ளது.

அரசாங்கத்தின் இந்த வீட்டுத் திட்டத்துக்காக முதற்கட்டமாக 6,699 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.


இந்த வீடமைப்புத் திட்டம் ஜனாதிபதியின் மகிந்த சிந்தனையின் படி ஜனசெவன 10 இலட்சம் வீடுகள் அமைக்கும் திட்டத்தின் கீழ் கொழும்பு வாழ் மத்தியதர வகுப்பினர்களுக்காக தொடர்மாடி வீடமைப்புத் திட்டமொன்றை கிருலப்பனை யில் நிர்மாணிப்பதற்கு அமைச்சர் விமல் வீரவன்ச யோசனை வழங்கியிருந்தார்.

24 மாடிகளைக் கொண்ட இத்தொடர்மாடி வீட்டுத் திட்டத்தில் மொத்தமாக 560 வீடுகள் உள்ளடக்கப்படுகின்றன. இவை, 560 சதுர அடி, 650 சதுர அடி மற்றும் 850 சதுர அடிகளைக் கொண்ட வீடுகளாகும்.

இவ்வீடமைப்புத் திட்டத்தில் விளையாட்டு மைதானம், சமூக நிலையம், போக்குவரத்து பஸ் நிலையம், சிறுவர் பூங்கா. சந்தை போன்றனவும் உள்ளடக்கப்படவுள்ளன. இவ்வீடுகளைப் பெற விரும்புவர்களுக்கு அரச வங்கிகள் ஊடாக கடன் பெற்றுக்கொள்ள வசதி செய்து கொடுக்கப்படும். இவ்வீடுகள் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை ஊடாக விண்ணப்பம் கோரப்பட்டு பகிர்ந்தளிக்கப்படும் என வீடமைப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

# அதிபர், ஆசிரியர்களின் வேதனப் பேச்சுக்கள் தோல்வி

## 24 முதல் தொழிற்சங்கப் போராட்டம்



(கொழும்பு)

அதிபர் - ஆசிரியர்களது வேதனப் பிரச்சினை உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் பதில் கல்வியமைச்சருடன் இடம்பெற்ற பேச்சுவார்த்தை பயனற்றுப் போனதாக இலங்கை ஆசிரியர் சேவைகள் சங்கம் தெரிவித்துள்ளது.

பதில் கல்வியமைச்சருக்கும் ஆசிரியர் சங்கத்துக்கும் இடையிலான இந்தச் சந்திப்பு கல்வியமைச்சில் நேற்றுமுன்தினம் இடம்பெறறது.


தமது கோரிக்கைக்கு தீர்வு பெற்றுக்கொடுக்கப்படாவிட்டால் எதிர்வரும் 24 ஆம் திகதியில் இருந்து பாரிய தொழிற்சங்கப் போராட்டம் ஒன்றை முன்னெடுக்கப் போவதாக ஆசிரியர் சங்கம் முன்னர் எச்சரிக்கை விடுத்திருந்தது.

இந்த நிலையில், நேற்று இடம்பெற்ற பேச்சுவார்த்தை தோல்வியில் நிறைவுற்றதால் திட்டமிட்டவாறு போராட்டம் இடம்பெறும் என இலங்கை ஆசிரியர் சேவைகள் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்ராலின் எமது செய்திச் சேவைக்குத் தெரிவித்தார்.

# சகோதரனைக் கைது செய்யுமாறு அமைச்சர் பொலிஸாருக்கு ஆலோசனை

தமது சகோதரனான பிரியந்த சிறிசேனவை கைது செய்யுமாறு தாமே பொலிஸாருக்கு ஆலோசனை வழங்கியதாக ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் பொதுச்செயலாளர் அமைச்சர் மைத்திரி பால சிறிசேன தெரிவித்துள்ளார். கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

மனம்பிட்டிய வனவிலங்கு அலுவலகம் தாக்கப்பட்டமை மற்றும் அதன் அதிகாரிகளது சேவைகளுக்கு இடையூறு விளைவித்தமை போன்ற குற்றச்சாட்டின் பேரில் கடந்த செவ்வாய்க்கிழமை பிரியந்த சிறிசேன பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தார். இதனையடுத்து, அவர் எதிர்வரும் 30 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.







நீண்டகால தேவையைக் கருத்திற்கொண்டு சமுத்திர ஆய்வு மற்றும் பரிசோதனை ஆகியவற்றை மேற்கொள்வதற்காக விசேடமாகத் தயாரிக்கப்பட்ட இலங்கைக்கே உரித்தான 'சமுத்ரிகா' கப்பல், நேற்றுமுன்தினம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் அம்பாந்தோட்டை, மாகம்புர துறைமுகத்தில் செலுத்தப்பட்டது. இந்நிகழ்வில் அமைச்சர்களான சீ.பீ.ரத்நாயக்க, பிரியங்கர ஜயரத்ன, ஜொன்ஸ்டன் பெர்ணான்டோ, மஹிந்த அமரவீத, நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷஉட்பட பலரும் கலந்துகொண்டனர்.

# கேப்பாபிலவு மக்களுக்கு சூரிபுரத்தில் காணி வழங்கல்

(முல்லைத்தீவு)

கேப்பாபிலவைச் சேர்ந்த 110 குடும்பங்களும் தற்போது தங்கவைக்கப்பட்டுள்ள சூரிபுரம் காட்டுப்பகுதியிலேயே நிரந்தரமாகத் தங்க வைக்கப்படுவர் எனவும் சூரிபுரம் காட்டுப் பகுதி அரச காணி என்பதால், அதனை அவர்களுக்குப் பகிர்ந்தளிக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் ந.வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

2009 ஆம் ஆண்டு இடம்பெற்ற போர் நடவடிக்கைகள் காரணமாக முல்லைத்தீவு மக்கள் இடம்பெயர்ந்து வவுனியா மெனிக்பாம் நலன்புரி நிலையத்தில் தங்கவைக்கப்பட்டிருந்தனர்.

இந்த முகாமிலிருந்த மக்கள் படிப்படியாக அவர்களது சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்தப்பட்டு வந்தனர். இறுதியாக கடந்த செப்ரெம்பர் மாதம் 25 ஆம் திகதி மெனிக்பாம் முகாம் மூடப்பட்டது.

முகாமில் இருந்து ஏற்றிவரப்பட்ட கேப்பாபிலவைச் சேர்ந்த 110 குடும்பங்கள் தற்போது நந்திக்கடலுக்கு அண்மித்த சூரிபுரம் பகுதியில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

இதுகுறித்து அரச அதிபர் மேலும் கூறுகையில், இவர்கள் தற்போது தங்கியுள்ள இடத்திலேயே நிரந்தரமாக குடியமர்த்தப்படவுள்ளனர். அவர்கள் தங்கவைக்கப்பட்டுள்ள பகுதியில் நிரந்தரமாக தங்குவதற்குரிய வகையில் ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. மேலும் குறித்த பகுதி அரச காணி என்பதால் அந்த மக்களுக்குப் பங்கிட்டு வழங்கப்படும் என்றார்.

# வடக்கில் கனமழை இடி, மின்னல் எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

வடக்கில் பல பகுதிகளிலும் நேற்றுமுன்தினம் பிற்பகல் முதல் கனமழை பெய்து வருகின்றது. இந்தக் கனமழையை அடுத்து தாழ்வான நிலப்பகுதிகளிலும் வயல் நிலங்களிலும் மழை வெள்ளம் அதிகரித்துக்காணப்படுகின்றது.

இந்நிலை இன்னும் சில நாட்கள் நீடிக்கும் பட்சத்தில் தாழ்வான நிலப்பகுதியில் வெள்ளப்பெருக்கு ஏற்படும் சாத்தியம் தென்படுவதாகக் கிடைக்கும் தகவல்களில் இருந்து தெரிய வருகின்றது. அத்துடன் வயற் பிரதேசங்களில் மழை நீர் தேங்கியிருப்பதன் காரணமாக நெல் விதைப்பும் பாதிக்கப்பட்டுள்ளது. விதைப்பு மேற்கொள்ளப்பட்ட வயல் நிலங்களும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

அத்துடன் தீவுப்பகுதிகள் மற்றும் தென்மராட்சிப் பகுதிகளிலும் தொடர்ந்து மழை பெய்து வருவதாகவும் அங்கிருக்கும் எமது செய்தியாளர்கள் தெரிவித்துள்ளனர். இந்தப்பகுதிகளின் தாழ்வான நிலப்பகுதிகளிலும் வயல் நிலப்பகுதிகளிலும் வெள்ள நீர் சூழ்ந்து காணப்படுவதாகவும் தெரியவருகின்றது.

அத்துடன் யாழ் குடாநாட்டில மேற்கொள்ளப்படும் வீதி அபிவிருத்திப்பணிகளும் மழை காரணமாக பாதிக்கப்பட்டிருப்பதாகவும் தெரியவருகின்றது.

இந்தக் கன மழை காரணமாக எற்படும் இடி, மின்னல் மற்றும் சுழல் காற்று என்பவற்றில் இருந்து மக்கள் பாதுகாப்பாக இருக்குமாறு வானிலை அவதானப் பகுதியினரினால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும் மழை வெள்ள நீர் வீதியோரங்களில் தேங்கியிருப்பதன் காரணமாக பயணிகள் மற்றும் வானங்கள் என்பனவும் சிரமங்களை எதிர்நோக்குவதனையும் அவதானிக்க முடிகிறது. (பா)

# வீதிப் புனரமைப்பு பூர்த்தி

(நயினாதீவு)

நயினாதீவு பெருங்குளம் வீதி வடகிழக்கு உள்ளூர் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் வேலணை பிரதேச சபையினால் புனரமைக்கப்பட்டுள்ளது.

மேற்படி வீதி உலக வங்கியின் நிதியிலிருந்தும் வேலணை பிரதேச சபை நிதியிலிருந்தும் அப்பிரதேச மக்களின் பூரண [illegible]ங்களிப்புடனும் ஒன்றரைக் கோடி ரூபா செலவில் புனரமைக்கப்பட்டுள்ளது.

இவ் வீதி புனரமைப்பின் காரணமாக அவ் வீதியில் அமைந்துள்ள ஸ்ரீகணேசா பாடசாலைக்குச் செல்லும் மாணவர்கள், பிள்ளையார் கோவிலுக்குச் செல்லும் அடியார்கள், தீர்த்தக் கரை வீதிக்குச் செல்லும் மக்கள் அனைவரும் மழை காலங் களில் வெள்ளத்தின் ஊடாகச் செல்வது தவிர்க்கப்பட்டுள்ளது.

இவ் வீதியின் புனரமைப்புத் தொடர்பில் வேலணை பிரதேச சபையின் தவிசாளரும், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் வேலணைப் பிரதேச அமைப்பாளருமாகிய சி.சிவராசா நேற்று முன்தினம் நேரில் சென்று பார்வையிட்டுள்ளார். இதன்போது வேலணை பிரதேச சபையின் நயினாதீவு உப அலுவலகப் பொறுப்பதிகாரி ந.மோகனரூபனும் உடனிருந்தார்.

## வடக்கு வரணியில் டெங்கு ஒழிப்புப்பிரசாரம்

(வரணி)

வடக்கு வரணிப்பிரதேசத்தில் கடந்த சனிக்கிழமை டெங்கு சம்பந்தமான விழிப்புணர்வு நிகழ்வு நடைபெற்றது. வரணி சுகாதாரப்பரிசோதகர், மற்றும் குடும்பநல உத்தியோகத்தர்கள், தொண்டர்கள், வீடு வீடாகச் சென்று மக்களுக்கு டெங்கு நோய் பரவாமல் தடுப்பது பற்றிய கருத்துக்களை வழங்கினர்.

நீத்தேங்கி நிற்க முடியாதவாறு பொருட்களை அகற்றுமாறும் அறிவித்தனர். அத்துடன் சுகாதாரப்பகுதியினர் அப்பகுதியில் ஒலிபெருக்கிமூலம் டெங்கு சம்பந்தமாக மக்களுககு விழிப் புணர்வு பிரசாரத்திலும் ஈடுபட்டனர். (150)

# முல்லைத்தீவில் வெடிபொருட்கள் மீட்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு பகுதியில் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலை அடுத்து பெருமளவு ஆயுதங்களும் வெடிபொருட்களும் முல்லைத்தீவு பொலிஸாரினால் கடந்த வாரம் மீட்கப்பட்டிருப்பதாக யாழ்.சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்தில் நடைபெற்ற வாராந்த செய்தியாளர் சந்திப்பில் பிரதிப் பொலிஸ் மா அதிபர் எரிக் பெரேரா தெரிவித்துள்ளார்.

ரீ-56 ரக துப்பாக்கிகள் அந்தத் துப்பாக்கிக்குரிய பாகங்கள் மற்றும் வெடிபொருட்கள் எல்.எம்.ஜி.குண்டுகள் மற்றும் எறிகணைகள், ரவைகள் உட்பட பெருமளவு வெடி பொருட்கள் மீட்கப்பட்டுள்ளதாகவும் தெரிய வருகின்றது.

இவற்றில் புலிகளின் தயாரிப்புக் குண்டுகளும் அடங்கியிருப்பதாகவும் மேலும் தெரிய வருகின்றது. (பா)

## கொடிகாமம் சந்தையில் தேங்காய்க்கு கிராக்கி

(கொடிகாமம்)

கொடிகாமம் சந்தையில் தற்போது தேங்காய்க்கு மிகப் பெரும் கிராக்கி ஏற்பட்டுள்ளது. கடந்த மாதங்களில் இறக்க நிலையில் இருந்த தேங்காய் விலை சந்தையில் தற்போது உச்சமடைந்துள்ளது.

தேங்காய் உரிமையாளரிடம் வியாபாரிகள் போட்டி போட்டுக் கொள்வனவு செய்துவருகின்றனர். 20 ரூபா வரை விற்பனை செய்யப்பட்ட தேங்காய் தற்போது 35 ரூபா வரை விற்பனை செய்யப்பட்டுகின்றது. தற்போது சந்தையில் தேங்காய் விற்பனைக்கு வருவது மிகவும் குறைந்த நிலையில் உள்ளது குறிப்பிடத்தக்கது. (150)

## முல்லைக் கடற்பரப்பில் இந்திய மீனவர்கள்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு கடற்பரப்பில் இந்திய மீனவர்களின் ரோலர் மீன்பிடி நடவடிக்கைகள் இடம்பெற்று வருவதால் தமது தொழில் பாதிக்கப்பட்டுள்ளதாக முல்லைத்தீவு மீனவர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக, முல்லைத்தீவு கடற்பரப்பில் 12 பாக தூரத்தில் இந்திய மீனவர்கள் ரோலர் படகு மூலம் வந்து மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடுவதால் தாம் தொழில் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால் தமது வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதாக தெரிவிக்கும் இப்பகுதி மீனவர்கள் ஜீவனோபாய தொழிலாக மீன்பிடியையே நம்பி வாழ்வதால் அன்றாட வருமானம் இதிலேயே தங்கியுள்ளது என அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். (04)



வடமாகாண நீர்ப்பாசன திணைக்களத்தினால் முன்னெடுக்கப்படும் செயற்திட்டங்கள் சம்பந்தமாக வடமாகாண ஆளுநர் பனிமனையில் ஆராய்வுக்கூட்டம் வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ. சந்திரசிறி தலைமையில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இதில் வடமாகாண நீர்ப்பாசன பணிப்பாளர் எந்திரி எஸ்.சிவபாதம் உள்ளிட்ட உயர் அதிகாரிகள் ஆளுநருடன் கலந்துரையாடுவதைக் காணலாம். (படம்:கே.நந்தகுமார்)

# முரசின் இன்றைய பலன்

(21.10.2012 - ஞாயிற்றுக்கிழமை)

நந்தன வருஷம் ஐப்பசி மாதம் 05 ஆம் திகதி.
நட்சத்திரம்: பூராடம் முன்னிரவு 11.54 வரை. சித்தாமிர்த யோகம்.
திதி: ஸப்தமி பின்னிரவு 3.03 வரை.
இராகுகாலம் 4.32 - 6.02 வரை. சுபநேரம் 9.02 - 10.32 வரை
எமகண்டம் 12.02 - 1.32 வரை, குளிகன் காலம் 3.02 - 4.32 வரை.
சரஸ்வதி பூஜாரம்பம்.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | தொழிலில் புது வாய்ப்பு. குடும்பத் தேவைக்கு தாராள செலவு. உறவினர் ஆறுதல் செய்தி. கடன் தீரும். சக ஊழியர் ஒத்துழைப்பு. மதிப்புக் கூடும். ஓய்வும் உல்லாசமும். |
| ரிஷபம் | மாறுபடுபவர்களிடம் விலகுவது நல்லது. தொழில் மந்தம். சேமிப்பு செலவாகும். வாகன கவனம். உறவினர் வகையில் உதவி. கோபம், எரிச்சல் வரும். அலைச்சலுடன் ஆதாயம். |
| மிதுனம் | அவசரப் பணி ஏற்படும். கூடுதல் தன்னம்பிக்கை. புதிய சந்திப்பு. வரவை விட செலவு கூடும். எதிர்பார்த்த செய்தி தாமதம். பிணி மாறும். பிள்ளைகளால் பெருமிதம். சுகமான நாள். |
| கடகம் | நண்பரால் மகிழ்ச்சி. தொழில் இலக்கு நிறைவேறும். பணவரவு திருப்தி. கூடுதல் சொத்துச் சேர்க்கை. உடன்பிறந்தவர்கள் உறுதுணை. அரசால் ஆதாயம். வெற்றி பெறும் நாள். |
| சிம்மம் | அதிக சுறுசுறுப்பு. தொழில் பலம் பெறும். உபரி வருமானம். வீட்டுப்பொருள் வாங்குவீர்கள். மனஉளைச்சல் நீங்கித் தெளிவு. குடும்பத்தில் நிம்மதி. புதிய பாதை தெரியும் நாள். |
| கன்னி | அன்பு எண்ணம். எதிர்ப்பவரும் நட்பாவர். சக ஊழியர் உதவி. தொழில் வளர்ச்சி திருப்தி. சராசரி பணரவு. கடன் தீரும். பிள்ளைகளால் அந்தஸ்து. புதுமை படைக்கும் நாள். |
| துலாம் | பணிகள் சிறப்பாக நிறைவேறும். தொழில் முன்னேற்றம். உபரி வருமானம். உறவினர் வருகை. குடும்பத்தில் மகிழ்ச்சி. பிரியமானவர்களின் சந்திப்பு. எதிர்பார்ப்புகள் பூர்த்தியாகும் நாள். |
| விருச்சிகம் | சவால்கள் தவிர்க்கவும். நிதானம் நன்மை. தொழில் தாமதம். செலவு கூடும். உடல்நல கவனம் வேண்டும். அதிகாரிகளால் அலைக்கழிவு. விட்டுக் கொடுக்க வேண்டிய நாள். |
| தனுசு | திட்டம் செயலாகும். அதிக உழைப்புக்கு தயாராவீர்கள். தொழில் சிறக்கும். உபரி வருமானம். பெற்றோர் மகிழ்ச்சி. உறவினர் சுபநிகழ்ச்சி. செயலில் வேகம். சாதிக்கும் நாள். |
| மகரம் | குறிக்கோளுடன் செயற்பாடு. முக்கியஸ்தர்களின் உதவி. தொழில் மாற்றம். எதிர்பாராத பணவரவு. குடும்பத் தேவை நிறைவேறும். வழிபாடு உற்சாகம். வெளியூரிலிருந்து நல்ல செய்தி. |
| கும்பம் | விமர்சனங்கள் வரும். கவனம் தேவை. வேலைச் சுமை. குறைந்த பணவரவு. இல்லறத்துணை உதவி. விருந்து வரும். உடல் பாதுகாப்பில் கவனம். வழிபாடு நம்பிக்கை. |
| மீனம் | பேச்சில் விரக்தி. தகராறுகளைத் தவிர்க்கவும். தொழிலில் சிறு குளறுபடி. புதிய செலவு. உறவினர் வகையில் தொல்லைகள். குடும்ப அனுசரணை. உடல்நலத்திற்கு ஒய்வு அவசியம். |

# ரசாக்கிற்கு அபராதம்

(லாகூர்)

பாகிஸ்தான் கப்டன் ஹபீஸை விமர்சித்த சக வீரர் அப்துல் ரசாக்குக்கு கிரிக்கெட் சபை அபராதம் விதித்துள்ளது.

இலங்கையில் சமீபத்தில் நடந்த ருவென்ரி 20 உலக கோப்பை கிரிக்கெட் போட்டியில் பாகிஸ்தான் அணி அரையிறுதியுடன் வெளியேறியது. இந்தத் தொடரில், 32 வயதான பாகிஸ்தான் சகலதுறை வீரர அப்துல் ரசாக் ஒரே ஒரு ஆட்டத்தில் மட்டுமே களம் இறக்கப்பட்டார். இலங்கைக்கு எதிரான அரையிறுதியில் அவர் சேர்க்கப் படவில்லை. ரசாக்கை நீக்கியதே தோல்விக்கு காரணம் என்று முன்னாள் வீரர்கள் பலரும் கண்டனம் தெரிவித்தனர்.

இதற்கிடையே, தாயகம் திரும்பியதும் பாகிஸ்தான் ருவென்ரி 20 அணியின் கப்டன் ஹபீஸ் மீது அப்துல் ரசாக் கடுமையாகச் சாடினார். அரையிறுதியில் என்னைத் தேர்வு செய்யாதது அணி நிர்வாகத்தின் முடிவு அல்ல. இது கப்டன் ஹபீஸின் தனிப்பட்ட முடிவு. என்னைக் களம் இறக்க அவர் விரும்பவில்லை என்று பகிரங்கமாக விமர்சித்தார்.

அணியின் கப்டனை வெளிப்படையாக விமர்சித்த ரசாக்குக்கு, அது குறித்து விளக்கம் அளிக்கும்படி பாகிஸ்தான் கிரிக்கெட் சபை கடிதம் அனுப்பியது.

இந்த நிலையில் ரசாக்கும், ஹபீஸும், பாகிஸ்தான் கிரிக்கெட் சபை பணிப்பாளர் முன்பு ஆஜராகி விளக்கம் அளித்தனர். அப்போது ரசாக், உணர்ச்சி வசப்பட்டு ஆத்திரத்தில் அவ்வாறு கூறி விட்டேன். கப்டனுக்கு எதிராக நான் சொன்ன கருத்து நியாயமற்றது என்பதை ஏற்றுக்கொள்கிறேன். இந்த செயலுக்காக நான் மன்னிப்பு கேட்டுக் கொள்கிறேன். கப்டன் ஹபீஸுடன் எனக்கு ஒரு போதும் பிரச்சினை இருந்ததில்லை என்றார். மன்னிப்பு கேட்டாலும் ஒழுங்கு நடவடிக்கையாக அவருக்கு ரூ.56 ஆயிரத்தை பாகிஸ்தான் கிரிக்கெட் வாரியம் அபராதமாக நேற்று முன்தினம் விதித்தது.

இந்தச் சம்பவம் தொடர்பாக ஹபீஸ் கூறுகையில், பாகிஸ்தான் அணிக்காக நீண்ட காலமாக பங்களிப்பு அளித்து வரும் ரசாக் எங்களது சொத்து. அவர் என்னை விமர்சித்தது தொடர்பாக நான் அதிகமாக எதுவும் சொல்ல விரும்பவில்லை. ஆனால் அவரை நீக்கியது அணி நிர்வாகம் எடுத்த முடிவு என்றார்.

# கப்டன் பதவி கிடைக்காமை ஏமாற்றமே



ருவென்ரி 20 கிரிக்கெட் போட்டியில் அவுஸ்ரேலிய அணியின் கப்டன் பதவி கிடைக்காதது எனக்கு ஏமாற்றம் அளிக்கிறது என அவ்வணி வீரர் வட்சன் தெரிவித்துள்ளார்.

என்னைப் பொறுத்தவரை கலிஸ் சிறந்த சகலதுறை வீரர். எனக்கும் தற்போது அந்த வாய்ப்பு கிடைத்தது அதிர்ஷ்டமே. சகலதுறையில் துடுப்பாட்டத்தில் சிறப்பாக ஆடி ஓட்டங்கள் குவிப்பதையே அதிகமாக விரும்புகிறேன். விக்கெட்டுகள் கைப்பற்றுவதை விட ஓட்டங்களைக் குவிப்பதில் திருப்தி அதிகம். ருவென்ரி 20 போட்டியில் அவுஸ்ரேலிய அணியின் கப்டன் பதவி கிடைக்காதது எனக்கு மிகுந்த ஏமாற்றமே. ஆனால் கப்டனாக இருக்கும் பெய்லி சிறப்பாகவே செயற்படுகிறார்.

எனது துடுப்பாட்டம், பந்து வீச்சு ருவென்ரி- 20 ஓவர் போட்டியில் முக்கிய பங்காக இருப்பது மகிழ்ச்சி அளிக்கிறது. சம்பியன்ஸ் லீக் ஆட்டம் மிகவும் தகுதி வாய்ந்த போட்டியாகும். அதில் இருந்து பாதியில் விலகுவது ஏமாற்றமே என்றாலும் அவுஸ்ரேலிய கிரிக்கெட் சபையின் இந்த முடிவை ஏற்றுக்கொள்கிறேன் எனவும் அவர் தெரிவித்தார்.

# ஆசிய விளையாட்டு 2019 நடத்தப்போவது யார்?

ஆசிய விளையாட்டு போட்டி 1951ஆம் ஆண்டு முதல் 4 ஆண்டுகளுக்கு ஒரு முறை நடத்தப்பட்டு வருகிறது.

கடந்த ஆசிய விளையாட்டு சீனாவில் 2010ஆம் ஆண்டில் நடந்தது. அடுத்த ஆசிய விளையாட்டுப் போட்டி தென்கொரியாவில் (இன்சியோன்) 2014ஆம் ஆண்டில் நடைபெறவுள்ளது.

2019ஆம் ஆண்டில் நடைபெறும் 18ஆவது ஆசிய விளையாட்டு போட்டியை நடத்தும் நாடு எது? என்பதை முடிவு செய்ய 31ஆவது ஆசிய ஒலிம்பிக் சபை பொதுக்குழு கூட்டம் சீனாவில் அடுத்த மாதம் (நவம்பர்) 8ஆம் திகதி நடைபெறவுள்ளது. போட்டியை சுரபாயா (இந்தோனேஷியா), ஹனோய் (வியட்நாம்), துபாய் (ஐக்கிய அரபு எமிரேட்ஸ்) ஆகிய இடங்களில் நடத்த விண்ணப்பிக்கப்பட்டு இருக்கின்றன.

வாக்கெடுப்பு நடத்தி போட்டியை நடத்தும் நாடு முடிவு செய்யப்படும் என்று தெரிகிறது. அத்துடன் ஆசிய ஒலிம்பிக் சபை கூட்டத்தில் லண்டன் ஒலிம்பிக் போட்டியில் பதக்கம் வென்ற ஆசிய வீரர், வீராங்கனைகள் கௌரவிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதில் சீன வீர, வீராங்கனைகளே அதிகளவில் கௌரவத்தைப் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அழையா விருந்தாளியால் கைவிடப்பட்ட ஆட்டம்

(டர்பன்)

சம்பியன்ஸ் லீக் கிரிக்கெட்டில் மழை விளையாடி வருகிறது. ஏற்கனவே கொல்கத்தா - பெர்த் ஸ்கார்சர்ஸ், மும்பை-யார்க்ஷைர் ஆகிய அணிகள் மோதிய ஆட்டங்கள் மழையால் பாதியில் கைவிடப்பட்டிருந்தன.

இந்த நிலையில் டர்பனில் நேற்று முன்தினம் நடக்க இருந்த டில்லி டேர்டெவில்ஸ்-ஒக்லாந்து (ஏ பிரிவு) இடையிலான ஆட்டமும் மழையால் பாதிக்கப்பட்டது. ஆட்டம் தொடங்குவதற்கு முன்பே மழை கொட்டித் தீர்த்தது. தொடர்ந்து மழை பெய்ததால் இந்த ஆட்டமும் இரத்துச் செய்யப்பட்டது. இரு அணிக்கும் தலா 2 புள்ளிகள் பகிர்ந்து அளிக்கப்பட்டன.

# பந்துவீச்சுப் பயிற்சியாளராக ஷேன் பொண்ட்



(வெலிங்டன்)

நியூசிலாந்து அணியின் பந்து வீச்சுப் பயிற்சியாளராக முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் ஷேன் பொண்ட் நியமிக்கப்பட்டுள்ளார்.

நியூசிலாந்து அணியின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் ஷேன் பொண்ட், (வயது-37). கடந்த 2010இல் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் இருந்து ஓய்வு பெற்றார். தொடர்ந்து காயங்களால் அவதிப்பட்ட இவர், தனது ஒன்பது ஆண்டு கிரிக்கெட் வாழ்க்கையில் வெறும் 18 டெஸ்ட் போட்டிகளில் மட்டுமே பங்கேற்றுள்ளார். நியூசிலாந்து அணி தென்னாபிரிக்கா (2012, டிச.) மற்றும் இங்கிலாந்து (2013 பெப்.) அணிகளுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது. இதற்கான நியூசிலாந்து அணிக்கு ஷேன் பொண்ட் பந்து வீச்சுப் பயிற்சியாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இது குறித்து நியூசிலாந்து கிரிக்கெட் இயக்குநர் ஜோன் புக்கானன் கூறுகையில், நியூசிலாந்து அணி தென்னாபிரிக்கா, இங்கிலாந்து போன்ற முன்னணி அணிகளுக்கு எதிராக டெஸ்ட் தொடரில் பங்கேற்கவுள்ளது. தற்போது ஷேன் பொண்ட் பந்து வீச்சுப் பயிற்சியாளராக நியமிக்கப்பட்டிருப்பதால், அணியின் பந்துவீச்சில் நல்ல முன்னேற்றம் இருக்கும் என நம்புகிறேன். குறிப்பாக வேகப்பந்துவீச்சு சிறப்பாக இருக்கும். கிரிக்கெட் குறித்த இவரது ஆலோசனைகள் அணியில் உள்ள இளம் வீரர்களின் வெற்றிக்கு சிறந்த பாடமாக அமையும் என்றார்.

இது குறித்து பொண்ட் கூறுகையில், சர்வதேச கிரிக்கெட் போட்டியில் ஓய்வு பெற்ற நாள் முதல், இது போன்ற ஒரு பொன்னான வாய்ப்புக்காகத் தான் காத்துக் கொண்டிருந்தேன். நியூசிலாந்து அணிக்காக விளையாடிய அனுபவம் பயிற்சியாளராக சாதிக்க உதவும் என்றார்.

# தடைபோட முடியாது

(கேப்டவுண்)

போட்டிகளின் போது மழை, போதிய வெளிச்சமின்மை போன்ற இயற்கை நிகழ்வுகளை எம்மால் ஒன்றும் செய்ய முடியாது என, மும்பை இந்தியன்ஸ் அணியின் பந்து வீச்சுப் பயிற்சியாளர் ஷோன் போலக் தெரிவித்துள்ளார்.

யார்க்ஷயர் அணிக்கு எதிரான போட்டி மழையால் தடைபட்டது ஏமாற்றம் அளிக்கிறது. ஏற்கனவே சிட்னி அணி அரையிறுதிக்கு முன்னேறிய நிலையில், எமக்கு தொடரிலிருந்து வெளியேறிவிடும் அபாயம் ஏற்பட்டுள்ளது. போட்டியின் போது குறுக்கிடும் மழை, போதிய வெளிச்சமின்மை போன்ற இயற்கை நிகழ்வுகளை எம்மால் கட்டுப்படுத்த முடியாது எனவும் தெரிவித்தார்.

# போட்டி ஊதியம் தாமதம்; வீரர்கள் அதிருப்தி

இலங்கை அணியின் முன்னாள் சுழற் பந்து வீச்சாளரும், உலக சாதனையாளருமான முத்தையா முரளிதரன் உட்பட 54 கிரிக்கெட் வீரர்களுக்கு பங்களாதேஷ் பிறீமியர் லீக் தொடரில் பங்குபற்றியமைக்கான ஊதியத் தொகை இன்னமும் வழங்கி முடிக்கப்படவில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஊதியத் தொகை வழங்கப்பட வேண்டிய வீரர்களில் முத்தையா முரளிதரன், கெரான் பொலாட், அஷார் மொகமட், அலெக்ஸி கேர்வெஸீ, டெரன் ஸ்டீவன்ஸ், நியல் ஓ பிரையன், ஹெர்ஷல் கிப்ஸ் ஆகிய 6 வெளிநாட்டு வீரர்கள் உட்பட 54 வீரர்களுக்கே இன்னமும் ஊதியப் பணம் வழங்கி முடிக்கப்படவில்லை.

ஊதியத் தொகை வழங்கி முடிக்கப்படாத உள்ளூர் வீரர்களில் மொஹமட் அஷரபுல், தமிம் இக்பால், மஹமதுல்லா, அலோக்கபாலி, இம்ருல் கேய்ஸ், முஷபிக்கூர் ரஹீம், ஜுனைட் சித்திக்கி, சஹாரியார் நபீஸ் போன்ற பங்களாதேஷின் முக்கியமான வீரர்களும் உள்ளடங்குகின்றனர்.

பங்களாதேஷ் பிறீமியர் லீக் தொடரின் ஒப்பந்தத்தின் படி பங்களாதேஷ் பிறீமியர் லீக் தொடர் நிறைவடைந்து 20 நாட்களுக்குள் வீரர்களுக்குரிய முழுமையான ஊதியமும் வழங்கி முடிக்கப்பட வேண்டும். பங்களாதேஷ் பிறீமியர் லீக் இந்தாண்டு பெப்ரவரி மாதம் 29ஆம் திகதியுடன் நிறைவடைந்தத பின்னரும் இன்னமும் வீரர்கள் முழுமையான ஊதியத்தைப் பெற்றுக்கொள்ளவில்லை.

பங்களாதேஷ் பிறீமியர் லீக் தொடரில் தொடர்ந்து வரும் ஊதியப் பிரச்சினைகள் காரணமாக அடுத்த தொடரில் சர்வதேச வீரர்களைப் பங்குபற்ற வேண்டாமென சர்வதேசக் கிரிக்கெட் வீரர்களின் அமைப்புக் கோரியுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இந்தியா செல்கிறார் மரடோனா

ஆர்ஜென்ரீனா கால்பந்து அணியின் முன்னாள் கப்டனும், ஜாம்பவானுமான மரடோனா நாளை மறுதினம் இந்தியா செல்லவுள்ளார். விமானம் மூலம் கொச்சி வந்தடையும் மரடோனா அங்கிருந்து உலங்குவானூர்தி மூலம் கண்ணூர் செல்கிறார். கண்ணூரில் 24ஆம் திகதி நடைபெறும் நகைக்கடை திறப்பு விழா மற்றும் ஏர்லைன்ஸ் தொடக்க விழாவில் கலந்து கொள்கிறார்.அத்துடன் அவர் கண்ணூர் நேரு மைதானத்தில் கால்பந்தை உதைத்து இரசிகர்களை உற்சாகப்படுத்துவார். கால்பந்து மோகம் அதிகம் கொண்ட கேரளாவுக்கு மரடோனா வருவது இதுவே முதன்முறையாகும். அவரை நேரில் காண இரசிகர்கள் கூட்டம் படையெடுக்கும் என்பதால் பாதுகாப்புக்கு 3 ஆயிரம் பொலிஸாரை ஈடுபடுத்தும் படி நிகழ்ச்சி அமைப்பாளர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். உலகின் தலைசிறந்த வீரர்களில் ஒருவராக விளங்கிய மரடோனா இந்தியா வருவது இது இரண்டாவது முறையாகும். ஏற்கனவே, 2008ஆம் ஆண்டில் கொல்கத்தாவில் நடந்த ஒரு நிகழ்ச்சியில் இவர் கலந்து கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அரையிறுதியில் வோஸ்னியாக்கி



(மொஸ்கோ)

கிரெம்ளின் கோப்பை ரென்னிஸ் போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவு அரையிறுதியில் விளையாட டென்மார்க் வீராங்கனை கரோலின் வோஸ்னியாக்கி தகுதி பெற்றுள்ளார்.

காலிறுதியில் டொமினிகா சிபுல்கோவாவுடன் (ஸ்லோவாக்கியா) நேற்று முன்தினம் மோதிய வோஸ்னியாக்கி 6,2, 6,7 (1,7), 6,1 என்ற செட் கணக்கில் வென்றார். மற்றொரு காலிறுதியில் சுவீடனின் சோபியா அர்விட்சன் 6,3, 6,3 என்ற நேர் செட்களில் ரஷ்ய வீராங்கனை மரியா கிரிலென்கோவை வீழ்த்தினார்.இப்போட்டித் தொடரில் முன்னணி வீராங்கனைகள் பங்குபற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# வடமாகாண கராத்தே; நவீல்ட் பாடசாலை சாதனை வெற்றி



பதக்கம் வென்றோருடன் பாடசாலை அதிபர் மகேந்திரன், பொறுப்பாசிரியர் வவிராஜ், கராத்தே ஆசிரியர் சென்சே விஜயராஜ் ஆகியோர் இருப்பதைக் காணலாம்.

(யாழ்ப்பாணம்)

வடமாகாண வீர,வீராங்கனைகளுக்கிடையிலான வடக்கு மாகாண மட்ட கராத்தே போட்டியில் கைதடி நவீல்ட் (செவிப்புலன், விழிப்புலன் இழந்தோர்) பாடசாலை 39 பதக்கங்களை வென்று சாதனை படைத்துள்ளது.

இலங்கை கராத்தே சம்மேளனத்தினால் நடத்தப்பட்ட வடக்குமாகாண மட்ட கராத்தே போட்டி அண்மையில் யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெற்றது.

இதில் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, யாழ்ப்பாணம், மன்னார் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த அதிகளவான வீர, வீராங்கனைகள் பங்குகொண்டனர்.

இதில் சிறப்பான பெறுபேறுகளை வெளிப்படுத்திய கைதடி நவீல்ட் பாடசாலை தனிக் காட்டா, குழுக்காட்டா, சண்டைப் போட்டிகளில் 12 தங்கம், 10 வெள்ளி, 17 வெண்கலம் உட்பட 39 பதக்கங்களை வென்று சாதனை படைத்துள்ளது.

இதில் பதக்கம் வென்றோர் விபரம் வருமாறு:

தனிப் போட்டி:

ஜெ. ஜிலோத்தனா (வயது -08) தங்கம், எஸ். லக்சனா (வயது - 10) தங்கம், கே. கம்சிகா (வயது - 17) தங்கம், பி. பிர-தீபன் (வயது 17) தங்கம், கே. திலக்ஷனா (வயது-18) தங்கம், கே. மதியழகன் (வயது-20) தங்கம், கே. ஜெனுஷாயினி (வயது - 08) வெள்ளி, கே. ஜெனுஷா (வயது-09) வெள்ளி, எஸ். ஜானுகா (வயது-12) வெள்ளி, கே. கஜனி (வயது 14) வெள்ளி, பி. தனுஷிகா (வயது-17) வெள்ளி, ஏ. மயூரா (வயது-18) வெள்ளி, கே. ஜஜீபன் (வயது-22) வெள்ளி, கே. மதுசிகா (வயது-08), வெண்கலம், என். கிருஸ்திகா (வயது-09) வெண்கலம், சி. அனுஷா (வயது-09) வெண்லகம், கே. யதுஷா (வயது-13) வெண்கலம், வி. கஜரூபி (வயது-13) வெண்கலம், எஸ். சிவாஜினி (வயது-14) வெண்கலம், சி. ஜெந்தினி (வயது - 14) வெண்கலம், எல். டனுசன் (வயது - 15) வெண்கலம், எஸ். டயாளினி (வயது-17) வெண்கலம், எஸ். டசாந்தி (வயது - 17) வெண்கலம், எஸ். நெசிந்தன் (வயது-19) வெண்கலம்.

குழுப் போட்டி

கே. கஜனி (வயது-14) தங்கம், சி. ஜெந்தினி (வயது-14) தங்கம், எஸ். சிவாஜினி (வயது -14) தங்கம், கே. திலக்ஷனா (வயது-18) தங்கம், ஜே. மயூரா (வயது-18) தங்கம், ரி. டிலக்ஷி (வயது-18) தங்கம், கே. கம்சிகா (வயது-17) வெள்ளி, எஸ். டயா-ளினி (வயது-17) வெள்ளி, பி. தனுசிகா (வயது-17) வெள்ளி, எல். டனுசன் (வயது-15) வெண்கலம், வி. விநாயகமூர்த்தி (வயது-15) வெண்கலம், எஸ். ஜினோதரன் (வயது-15) வெண்கலம், ஐ. றொபின்சனா (வயது-17) வெண்கலம், எஸ். தர்சனா (வயது-17) வெண்கலம், எஸ். அருந்ததி (வயது-17) வெண்கலம். (எஸ்.பி)

## விஜயராஜுக்குப் பாராட்டு

(யாழ்ப்பாணம்)

நவீல்ட் பாடசாலை வீர, வீராங்கனைகளை சிறப்பான முறையில் பயிற்றுவித்து பதக்கம் வெல்ல வைப்பது என்பது சாதாரண விடயமல்ல. இது மகத்தான சாதனை. அந்த வகையில் விஜயராஜ் பாராட்டப்பட வேண்டியவர் என கராத்தே உயர் அதிகாரிகள் பாராட்டியுள்ளனர்.

வடக்கு மாகாண வீர, வீராங்கனைகளுக்கான கராத்தே போட்டி அண்மையில் யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெற்றது. இதில் நவீல்ட் பாடசாலை வீர,வீராங்கனைகள் 39 பதக்கங்களை வென்று சாதனை படைத்துள்ளனர்.

இதற்கு பயிற்றுவிப்பாளர் விஜயராஜின் பங்களிப்பே மிக முக்கியமாகக் கருதப்படுகின்றது. செவிப்புலனற்ற, விழிப்புலனற்ற வீர, வீராங்கனைகளுக்கு பயிற்றுவிப்பது என்பது கடினம். அந்த வகையில் மாகாண மட்டப் போட்டியில் 39 பதக்கங்களை வெல்ல வைத்திருப்பதென்பது உண்மையிலேயே சாதனை. இந்த வீரர்களில் தேசிய மட்டப் போட்டிகளிலும் சிறப்பான பெறுபேறுகளைப் பெற்றுக்கொள்ளக் கூடிய வீரர்கள் பலர் உள்ளனர். அந்த வகையில் இவர்களைப் பயிற்றுவித்த விஜயராஜின் பயிற்றுவிப்புத்திறன் மிகக் கூர்மையானது. இவரின் செயற்பாடு ஏனைய பயிற்றுவிப்பாளர்களுக்கு ஒரு முன்னுதாரணம் என கராத்தே விற்பன்னர்கள் பாராட்டியுள்ளனர். (எஸ்.பி.)

## விளையாட்டுச் செய்திகள்

### முபாரக் தலைமையில் இலங்கை அணி

(கொழும்பு)

ஹொங்கொங்கில் இம்மாதம் 25ஆம் திகதி முதல் 29ஆம் திகதி வரை நடைபெறவுள்ள 5 ஓவர்கள் கிரிக்கட் சுற்றுப் போட்டித் தொடரில் பங்குபற்றவுள்ள இலங்கை அணிக்கு ஜெகன் முபாரக் தலைமை தாங்கவுள்ளார். இதற்கான உத்தியோகபூர்வ அணி விபரம் வெளியிடப்பட்டுள்ளது.

அணிக்கு 6 பேர் கொண்ட இப்போட்டியில் இலங்கை அணி சார்பாக கௌசல் லொக்கு ஆராய்ச்சி, சாமர கப்புகெதர, கோஷல குலசேகர, சச்சித் பத்திரண, ரமித் ரம்புக்வெல்ல, கௌசல் ஜனித் ஆகியோரும் இடம்பிடித்துள்ளனர். இதேவேளை 5 ஓவர்கள் கிரிக்கட் போட்டிகளுக்கான முகாமையா-ளராக ஷன்ன் வீரக்கொடி தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

கடந்த வருடம் நடைபெற்ற போட்டிகளில் இலங்கை அணி அரையிறுதி வரை முன்னேறியது. இறுதிப் போட்டியில் பாகிஸ்தான் அணி கிண்ணத்தை கைப்பற்றியமை குறிப்பிடத்தக்கது.

### நீக்கப்பட்டது தடை

(யாழ்ப்பாணம்)

ஆவரங்கால் மத்தி, ஆவரங்கால் இந்து இளைஞர் ஆகிய அணிகளுக்கு விதிக்கப்பட்ட தடை யாழ். மாவட்ட கரப்பந்தாட்ட சங்கத்தினால் நீக்கப்பட்டுள்ளது.

அண்மையில் யாழ். மாவட்ட கரப்பந்தாட்ட சங்கத்தினால் மேற்படி இரு அணிகளுக்கும் மூன்று மாத தற்காலிகத் தடை விதிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து யாழ். மாவட்டத்திலேயே கரப்பந்தாட்டத்தில் முன்னணி அணிகளாகத் திகழும் இவ் அணிகளின் எதிர்கால நலனைக் கருத்திற் கொண்டு தடை நீக்கப்பட்டதாகவும், நடவடிக்கை என்பது எல்லா அணிகளுக்குமானது எனவும், அந்த வகையிலேயே தற்காலிக தடை விதிக்கப்பட்டதாகவும் கரப்பந்தாட்ட சங்கத்தினர் தெரிவித்தனர். (93)

## நாரந்தனை அண்ணா வெற்றிக் கிண்ண கால்பந்து

# தம்பட்டி காந்திஜி சம்பியன்



(நாரந்தனை)

நாரந்தனை அண்ணா சனசமூக நிலையம், நாரந்தனை அண்ணா விளையாட்டுக்கழகம் ஆகியன இணைந்து நடத்திய கால்பந்துப் போட்டியில் தம்பட்டி காந்திஜி அணி கிண்ணத்தைக் கைப்பற்றியுள்ளது.

நாரந்தனை அண்ணா விளையாட்டுக்கழகத்தினால் வருடா வருடம் நடத்தப்பட்டு வரும் தீவகத்திற்குட்பட்ட கால்பந்து அணிகளுக்கிடையிலான இச்சுற்றுப் போட்டி கடந்த 13,14,15ஆம் திகதிகளில் நாரந்தனை அண்ணா விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது.

அணிக்கு ஒன்பது பேர் கொண்ட இக்கால்பந்தாட்டப் போட்டி விலகல் முறையில் நடைபெற்றது.

தீவகத்தின் முன்னணி அணிகள் பல பங்கு கொண்ட இத்தொடரின் இறுதிப் போட்டிக்கு தம்பட்டி காந்திஜி அணியும் சென். பீலீப்ஸ் அணியும் தகுதி பெற்றன.

இரு அணிகளுமே தீவகத்தின் பலமான அணிகளாகத் திகழ்ந்தமையால் இறுதிப் போட்டி குறித்த எதிர்பார்ப்பு பெரும் பரபரப்பை ஏற்படுத்தும் அளவிற்கு இருக்கும் என இரு அணி ஆதரவாளர்களால் கருதப்பட்டது.

அதற்கமைய இரு அணிகளும் தமது ஆட்டத் திறனை வெளிப்படுத்தி ஆடிவந்தனர். இருப்பினும் தம்பட்டி காந்திஜி அணி வீரர் எவரும் எதிர்பார்க்காத வகையில் சிறப்பானதொரு கோலைப் போட்டு அணியை முன்னிலைப்படுத்தினார். இதனைத்தொடர்ந்து சென். பீலிப்ஸ் அணியும் தமது ஆட்ட வியூகத்தை மாற்றியமைத்து கோல் போடும் முயற்சியை மேற்கொண்டது. காந்திஜி அணியின் பிற்கள வீரர்களின் தடுப்பணையைத் தாண்டி சென்.பீலிப்ஸ்அணியால் உட்செல்ல முடியவில்லை. இறுதியில் 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்ற தம்பட்டி காந்திஜி அணி அண்ணா விளையாட்டுக்கழகழகத்தின்வெற்றிக் கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது. (20)

### தங்கக் கிண்ண கரப்பந்து

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதி தங்கக் கிண்ண கரப்பந்தாட்டத் தொடருக்கான பதிவுகளை இந்த மாதம்31ஆம் திகதிக்கு முன்னர் மேற்கொள்ளுமாறு யாழ். மாவட்ட கரப்பந்தாட்ட சங்கம் தெரிவித்துள்ளது.

யாழ். மாவட்ட கரப்பந்தாட்ட அணிகள் மாவட்ட கரப்பந்தாட்ட சங்கத்தில் போட்டிகளில் பங்குபற்ற விரும்பின் மாவட்ட கரப்பந்தாட்ட சங்கத்தில் விண்ணப்பங்களைப் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இப்போட்டித் தொடரில் அதிகளவான அணிகள் பங்குபற்ற வாய்ப்புள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (93)

### எனது செயற்பாடு திருப்தி

(டர்பன்)

எனது செயற்பாடு சிறப்பாக இருந்தபோதும் அரையிறுதி வாய்ப்பை நாம் இழந்தது பெரும் ஏமாற்றமே என கால்கத்தா நைட் ரைடர்ஸ் அணியின் சுழற்பந்து வீச்சாளர் சுனில் நரைன் தெரிவித்தார்.

என்னைப் பொறுத்த வரையில் எமது அணிக்கு போதிய பயிற்சி ஆட்டங்கள் இல்லாததே ஆசிய அணிகளுக்கு தோல்வி ஏற்படக் காரணம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# பேச்சுவார்த்தை வரும், ஆனால்....

கிருஷ்ணமூர்த்தி அரவிந்தன் கட்டுரையிலிருந்து

உண்மையில் இலங்கையில் மீண்டும் பேச்சுகளை ஆரம்பிக்க வேண்டிய தேவை இந்தியாவுக்கும் உள்ளது. இலங்கை அரசாங்கத்துக்கும் உள்ளது. தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கும் உள்ளது. மேற்குலகத்துக்கும் உள்ளது. ஐ.நா.வுக்கும் உள்ளது. சனங்களுக்கும் உள்ளது.

ஆனால், இதில் சனங்களைத் தவிர வேறு எவரும் விசுவாசமாக பேச்சுவார்த்தையை ஆதரிக்க வில்லை. சனங்களைத் தவிர, வேறு எவரும் அதில் விசுவாசமாக ஈடுபடப்போவதுமில்லை. தற்காலிக நெருக்கடியைத் தீர்த்துக் கொள்ளவே இந்த நாடகத்தை ஆடப்போகின்றன எல்லாத்தரப்பும்.

இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு பேசியே ஆகவேண்டும் என்று தென்னாபிரிக்கா, தமிழ்த்தரப்பிடம் சொல்லியுள்ளது. தென்னாபிரிக்காவின் அனுபவம் அது. ஆகவே அது அதை எடுத்துக் கூறியுள்ளது. என்னதான் நடந்தாலும் தீர்வு ஒன்று வேணும். அது தவிர்க்க முடியாதது. அதை நோக்கி, என்றோ ஒரு நாள் பயணித்துத்தான் ஆகவேணும் என்று. தென்னாபிரிக்கா கூறியுள்ளது. எதிரியோ எதிர்த்தரப்போ எவ்வளவுதான் கடுமையானதாக இருந்தாலும் அதை எதிர்கொண்டுதான் ஆகவேண்டும் என்பது தென்னாபிரிக்காவின் நிலைப்பாடு.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பைப் பொறுத்தவரை அதனால் இனியும் அரசியல் அரங்கில் தாக்குப் பிடிக்க முடியாது என்ற நிலை.



சனங்களின் நாளாந்தப் பிரச்சினைகள், நெருக்கடிகள் பல தீர்க்கப்படாமல் இருக்கின்றன. அதில் கூட்டமைப்பிற்குப் பாத்திரமே இல்லை.

மறு பக்கத்தில் அரசியற் தீர்வும் காணமுடியாத கட்டத்தை நோக்கி நகரும் போது அதனால் எதுவும் செய்ய முடியாத ஒரு நிலை உருவாகியுள்ளது. இது அதனுள்ளே பல பிரச்சினைகளைக் கிளப்பியும் விட்டுள்ளது.

சனங்களின் நெருக்கடிகளையும் பிரச்சினைகளையும் வெளிப்படுத்திப்போராட வேண்டிய தமிழ்க் கூட்டமைப்பு பேசாதிருக்கும் போது அதைக் கையில் எடுத்துப் போராட முன்வந்தது கஜேந்திரகுமார் தரப்பான தமிழ்த்தேசிய விடுதலை முன்னணி.

இது கூட்டமைப்புக்கு ஒரு நெருக்கடியையே ஏற்படுத்தியது. எனவே அது தமிழ்த்தேசிய விடுதலை முன்னணியின் அரங்கில் தானாக முன்வந்து கலந்து கொண்டது. இடையிடையே சில அரங்குகளை இந்த மாதிரித் தானும் திறந்து பார்த்தது. ஆனாலும் கஜேந்திரகுமாரின் அணியே இதில் முன்னிலைப் பாத்திரத்தை வகிக்கிறது.

ஆகவே மக்களின் பிரச்சினைகளை முன்நிலைப் படுத்தியோ அவற்றை மையப் படுத்தியோ போராடக் கூடிய ஆற்றல் கூட்டமைப்பிடம் இல்லை. அப்படிச் செயற்படக் கூடிய ஒன்றிரண்டு பேரும் அதனுடைய தலைமையை மீறி எதையும் செய்து விட முடியாது.

இதேவேளை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினுள்ளே புகைந்து கொண்டிருக்கும் அதிகாரச் சமநிலைக்கான போட்டி இன்னும் அந்தக் கட்சியைப் பலவீனமாக்கக் கூடிய அபாயமும் உள்ளது. இந்த நிலையில் எல்லாவற்றுக்கும் ஒரு தீர்வாக அது மீண்டும் பேச்சு மேசையில் அமரத் தீர்மானித்துள்ளது.


இதன்மூலமாக அது தன்னுட் கொண்டிருக்கும் நெருக்கடியைத் தற்காலிகமாகத் தணித்துக் கொள்ளலாம். அத்துடன் ஒரு வேலைத்திட்டத்தில் ஈடுபட்டதாகவும் அமையும். அதாவது தன்னைச் சூடேற்றிக் கொள்வதற்காக அது பேச்சுகளில் இறங்கப் போகிறது.

# உலக மக்கள் தொகை... மொபைல் போன்களின்...




தற்சமயம் உலக மக்கள் தொகை...
போன் எண்ணிக்கை உள்ளதாக ...
ஏஜன்சி தெரிவித்துள்ளது. ஐ.நா., ...
வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்...
ஆண்டு வரை, 600 கோடி மொபைல்...
செலுத்தப்பட்டுள்ளது. அதாவது, 10...
போன் சந்தாதாரர்களாக இருந்துள்...
மட்டும், 100 கோடி சந்தாக்கள் செ...
ஆண்டு முடிவில், இந்தியாவும் ...
தொட்டு விடும் என, எதிர்பார்...
ஆண்டு, உலகில் உள்ள, 700 ...
கோடி பேர், இணையதளத்தை ...
பணக்கார நாடுகளுக்கும், வளர்ந்...
நிறைய இடைவெளி இருக்கிற...
பயன்படுத்துபவர்களில் 70 சதவீ...
அடைந்த, பணக்கார நாடுகளைச்...
நிலையில், வளர்ந்து வரும் நாடுக...
பயன்படுத்துவோர், வெறும், 24 ...
இவ்வாறு ஐ.நா முகவரக அறிக்கை...

## பாடகி சின்மயி பொலிஸில் புகார்



"கன்னத்தில் முத்தமிட்டால்" படத்தில் வரும் "ஒரு தெய்வம் தந்த பூவே" பாடல் மூலம் சினிமாவில் பின்னணிப் பாடகியாக அறிமுகமானவர் சின்மயி ஸ்ரீ பாதா. தொடர்ந்து, தமிழ் உட்பட 7 மொழிகளில் 600இற்கும் மேற்பட்ட பாடல்கள் பாடி முன்னணிப் பாடகியாக உள்ளார். தொலைக்காட்சிகளில் இசை சம்பந்தமான நிகழ்ச்சிகளையும் தொகுத்து வழங்கியுள்ளார். இவர் கடந்த வியாழனன்று தனது தாயார் பத்மாசினியுடன் பொலிஸ் கமிஷனர் அலுவலகம் சென்று, 2 புகார் மனுக்களைக் கொடுத்துள்ளார்.

டுவிட்டர் இணையத்தளத்தில் என்னை ஆபாசமாக சித்தரித்து புகைப்படங்களும், அருவருக்கத்தக்க வாசகங்களும் இடம் பெற்றுள்ளன. 6 பேர் சேர்ந்து இந்த அருவருக்கத்தக்க செயலில் ஈடுபட்டுள்ளனர். உதவிப் பேராசிரியர் ஒருவருக்கும் இதில் தொடர்பு உள்ளது. அவர்கள் மீது பொலிஸார் நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு ஒரு மனுவில் கூறியிருக்கிறார். மற்றொரு புகாரில், "மும்பை சாய்பாபா டெலி பிலிமை சேர்ந்த இசை நிகழ்ச்சிகள் நடத்தும் கஜேந்திர சிங் என்பவர் எனக்கு ரூபா17 இலட்சம் பணம் தரவேண்டும். பலமுறை கேட்டும் அவர் தராமல் காலம் கடத்திக்கொண்டு வருகிறார். எனவே பணத்தைப் பெற்றுத்தர நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று கூறியுள்ளார்.

## ஸ்ரேயாவுடன் வந்த சல்மான் ருஷ்டி

லண்டனில் நடந்த பட விழாவுக்கு நடிகை ஸ்ரேயாவுடன் போய் நின்று அனைவரது பார்வையையும் தன் மீது விழவைத்துள்ளார் உலகப் பிரபல எழுத்தாளர் சல்மான் ருஷ்டி. இவர் 1981ஆம் ஆண்டு எழுதிய இந்திய, பாகிஸ்தான் பிரிவினையை அடிப்படையாகக் கொண்ட மிட்நைட்ஸ் சில்ட்ரன் நாவல் தற்போது திரைப்படமாகியுள்ளது. இந்தப் படம் லண்டனில் தொடங்கியுள்ள 56ஆவது பி.எப்.ஐ பட விழாவில் திரையிடப் பட்டுள்ளது. இந்தப் பட விழாவுக்கு தன்னுடன் படத்தின் நாயகி யான ஸ்ரேயாவையும் உடன் அழைத்து வந்திருந்தார் ருஷ்டி. இதனால் பட விழாவுக்கு வந்த அத்தனை பேரின் கண்களும் ஸ்ரேயா மீதுதான் விழுந்து எழுந்தன. இந்தியப் பாரம்பரிய முறையிலான சேலையை படு ஸ்டைலாக அணிந்து வந்து அத்தனை பேரையும் ஈர்த்து விட்டார் ஸ்ரேயா. இந்தப் படத்தை தீபா மேத்தா இயக்கியுள்ளார். அவரும் விழாவுக்கு வந்திருந்தார். இந்தப் படம் பெரும் சர்ச்சைக்குரிய விஷயங்களைத் தொட்டிருப்பதால் இப்படத்தை இந்தியாவில் திரையிட யாருமே முன்வரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.



# மழைக்கால நோய்களில் இருந்து தப்ப...



வெயிலோ, மழையோ, குளிரோ, தட்பவெப்ப நிலைக்கு ஏற்ப, நமது உடல் தகவமைத்துக் கொள்ளும் இயல்புடையது. அதேபோல, அந்தந்த தட்பவெப்பத்திற்கேற்ப, வைரஸ், பக்டீரியாக்களால் நோய்களும் அதிகமாக பரவ ஆரம்பிக்கும். தற்போது, பருவமழை தொடங்கி விட்டது. ஆங்காங்கே மழை கொட்டத் தொடங்கி விட்டது. முன்னோடியாக, "டெங்கு" காய்ச்சல் பரவும் செய்திகளும். இதேபோல மழைக்காலத்தில், பல்வேறு நோய்களும் நம்மைத் தாக்கும். வெயில் காலத்தில் "எறும்பைப் போல" சுறுசுறுப்பாக செயற்படும் நாம், மழைக்காலத்தில் சோம்பல் நிலைக்கு சென்று விடுவோம். திடீர் மழையில் நனையும் போது சளி, காய்ச்சல் தொந்தரவு ஏற்படும்.

மழைக்காலம், பனிக்காலம் என்றாலே அதிக சளி, மூச்சுத்திணறல், இருமல் தொந்தரவு பரவலாக இருக்கும். நோயாளிகள் தங்களை தற்காத்துக் கொள்வது அவசியம். ஆஸ்த்மா, காசநோய், நுரையீரல் நோய் உள்ளவர்கள் வெளியே செல்லும் போது, மழையில் நனையக் கூடாது. மழையில் நனைந்தால் இருமல், சளி, தலைவலி, காய்ச்சல், மூச்சு முட்டல் ஏற்படும். இருதய நோயாளிகள் மழை, அதிக குளிரில் செல்லக்கூடாது. அதிக குளிர், இரத்தக் குழாய்களை சுருங்கவைப்பதால், ஆபத்தில் முடியலாம். மாரடைப்பு மற்றும் வால்வுக் கோளாறு உள்ளவர்களுக்கு அடிக்கடி சளி பிடிக்கும் வாய்ப்பு உள்ளது. பக்கவாதம், மூளை தொடர்பான நோய்கள் இருந்தால், நோயை கூடுதலாக்கி விடும். நீரிழிவு நோயாளிகள் மழைக். காலத்தில் உடற்பயிற்சி, நடைபயிற்சி செய்ய முடியாது. எனவே, இரத்தத்தில்

சீனி கூட...
நிலையில்...
பாட்டை...
வேண்டும்...

## ள் தொகைக்கு சமமாக, ...போன்களின் எண்ணிக்கை!




க மக்கள் தொகைக்கு சமமாக, மொபைல்
க உள்ளதாக ஐ.நா., தொலைதொடர்பு
ள்ளது. ஐ.நா., தொ்லை தொடர்பு ஏஜன்சி
றிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது: கடந்த
கோடி மொபைல் போன்களுக்காக சந்தா
து. அதாவது, 100ல், 86 பேர் மொபைல்
ளாக இருந்துள்ளனர். இதில், சீனாவில்
சந்தாக்கள் செலுத்தப்பட்டுள்ளன. இந்த
இந்தியாவும் அந்த எண்ணிக்கையை
என, எதிர்பார்க்கப் படுகிறது. கடந்த
உள்ள, 700 கோடி மக்களில், 230
ணயத்தளத்தை பயன்படுத்தினர். ஆனால்,
நக்கும், வளர்ந்து வரும் நாடுகளுக்கும்,
வளி இருக்கிறது. இணையத்தளத்தை
ரில், 70 சதவீதம் பேர் தொழில் வளர்ச்சி
ர நாடுகளைச் சேர்ந்தவர்களாக இருக்கும்
து வரும் நாடுகளில், இணையத்தளத்தை
வெறும், 24 சதவீதம் பேர் மட்டுமே.
கவரக அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

சீனி கூட வாய்ப்புள்ளது. அந்த நிலையில், உணவுக் கட்டுப் பாட்டை கட்டாயம் கடைப்பிடிக்க வேண்டும். அதிக குளிரில், அதிகாலையில் உடற்பயிற்சி, நடைப்பயிற்சி செய்ய வேண்டாம், மாரடைப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. தேங்கிய மழைநீர் மூலம் சிக்குன்குனியா, டெங்கு, பன்றி காய்ச்சல் பரவலாம். பன்றிக் காய்ச்சல் கிருமிகள் (எச்1என்1) அதிக குளிர், மழை சீதோஷ்ணத்தில் அதிகமாக உற்பத்தியாகும். எனவே சுற்றுப்புறத்தை தூய்மையாக வைக்க வேண்டும்.

ஈரத்தலையுடன் இருந்தால், "சைனஸ்" தொல்லை ஏற்படும். வைரசால் கண்நோய் ஏற்படும் வாய்ப்புள்ளது. பாதுகாப்பில்லாத குடிநீரால் மஞ்சள் காமாலை நோய் தாக்கலாம். கொதிக்க வைத்த இளஞ்சூடான நீரைக் குடித்தால், கொலரா, வயிற்றுப் போக்கு ஏற்படுத்தும் கிருமிகளில் இருந்து நம்மை காப்பாற்றும்.

மழை பெய்யும் போது, சாக்கடை கழிவுநீரும் சேர்ந்து விடும். தவிர்க்க முடியாமல் நடந்து வந்தாலும், உடனடியாக ஆடையை மாற்றி, கால்களை நன்கு கழுவ வேண்டும்.

மழையில் நனைந்த ஆடைகள் மூலம், தோல்நோய்கள் வரலாம்.

உடல் இயங்குவதற்கு தண்ணீர் அவசியம். குறைந்தது இரண்டு லீற்றர் தண்ணீர் குடிக்க வேண்டும். குளிர், மழைக்காலத்தில் உடலை வெதுவெதுப்பாக வைத்திருக்க, சிலர் அதிகமாக சிகரெட் புகைப்பர், மதுவை அருந்துவர். இவர்களுக்கு மாரடைப்பு, நுரையீரல், கல்லீரல் தொடர்பான நோய்கள் வரலாம்.

குளிருக்கு கோப்பி, தேநீர் அதிகமாகக் குடித்தால், வயிற்றுப் புண் ஏற்படும். நீரிழிவு நோயாளிகளின், கொழுப்புச்சத்து அதிகரிக்க காரணமாகிவிடும். அவதானமாக நடந்துகொள்ளுங்கள்.



## சைக்கிள் திருடன்

சைக்கிள் திருடன், பின்லாந்துப் படம். படத்தை மேரி ராந்தாசிலா இயக்கியிருக்கிறார். சைக்கிள் திருடனின் கதை இதுதான்:

சிறுவன் றொபேர்ட் ரோசன் இரண்டு கால்களிலும் கட்டுப் போட்டுக் கொண்டு, சக்கர நாற்காலியில் உட்கார்ந்திருந்தான். தன் கால்கள் செயல் இழந்துவிட்டதாகவே நினைத்தான். இரண்டு மாதங்களுக்கு முன்னால் அவன் சைக்கிளில் செல்லும்போது - ஒரு விபத்து நடந்துவிட்டது. இரண்டு கால்களிலும் பலமான அடி. வசதியான குடும்பத்துப் பையன் என்பதால் உயர்ந்த சிகிச்சை உரிய காலத்தில் கிடைத்தது. அவனைப் பார்த்துக் கொள்ள ஒரு மருத்துவ தாதியும் கிடைத்துவிட்டாள்.

தன்னால் இனி எழுந்து நடமாடவே முடியாது என்று நினைத்தான் றொபேர்ட். ஆனால் செவிலிப்ளோரா அவனுக்கு வாழ்வில் ஒரு பிடிப்பை ஏற்படுத்திக் கொண்டு இருந்தாள். "உன்னால் நிச்சயமாக நடக்க முடியும்" என்று சொல்லிக் கொண்டு இருந்தாள்.

சிறுவன் ரிக்கியும், சிறுமி நெல்லியும் இணைபிரியாத நண்பர்கள். இருவரும் சேர்ந்தே விளையாடுவார்கள், எந்த இடத்துக்கும் போய் வருவார்கள்.

ரிக்கியின் பெற்றோர் அவனுக்கு ஒரு சைக்கிளைப் பரிசாக அளித்தார்கள். அது ஒரு சாதாரண சைக்கிள் அல்ல. பிரமாதமாக அலங்கரிக்கப்பட்ட அழகு மிகு சைக்கிள் அது. ரிக்கி மிகவும் பூரித்துப் போனான். தன் தோழி நெல்லியிடம் காட்டிப் பெருமையாகப் பீற்றிக் கொண்டான். உனக்குக் கிடைத்திருக்கும் பரிசு உயர்வானது என்று நெல்லியும் பாராட்டினாள்...

ஆனால் - திடீரென ஒருநாள் அந்த அழகு சைக்கிள் காணாமற் போனது. ரிக்கி வாடிப்போய்விட்டான். பல இடங்களில் சைக்கிளைத் தேடிப் பார்த்து அலுத்துப் போனான். "நாம் இரண்டு பேருமே சேர்ந்து தேடுவோம் வா" - என்று துணைக்கு வந்தாள் தோழி நெல்லி.

இருவரும் சேர்ந்து தேடத் தொடங்கினர். அன்று ரிக்கியின் உறவினர்களை வழியனுப்ப ரிக்கி - நெல்லி இருவருமே புகைவண்டி நிலையத்திற்குச் சென்றார்கள். புகைவண்டி நிலையத்தின் நுழைவாயிலுக்கு அருகில் ஒரு நீல நிற வேனை அவர்கள் பார்த்தார்கள். அந்த வேனின் கண்ணாடிக் கதவு வழியாக ஒரு சைக்கிளின் ஹாண்டில் பார் தெரிந்தது. அதன் கைப்பிடிகளில் தெரிந்த குஞ்சலம் - ரிக்கியின் ஆவலைத் தூண்டியது.

அந்த நீல நிற வேனின் பின் பக்கக் கதவைத் திறக்க முயன்றார்கள். நல்ல வேளையாகத் திறந்து கொண்டது. ஏறி உள்ளே போனால் - வண்டிக்குள் நிறுத்தப்பட்டிருந்த சைக்கிள் தன் சைக்கிள்தான் என்பதை ரிக்கி கண்டறிந்தான். சைக்கிளில் பொறிக்கப்பட்டிருந்த ஆர்.ஆர். என்ற பச்சைவர்ண எழுத்துக்கள் - அவனுக்குச் சொந்தமான சைக்கிள்தான் அது என்பதைப் பறைசாற்றின.

"இந்த வண்டியில் நாம் மறைவாக அமர்ந்து கொள்வோம். இந்த வண்டி எங்கேதான் போகிறது என்று பார்க்கலாம். சைக்கிள் திருடன் யார் என்பதையும் நாம் கண்டுபிடித்து விடலாம்" - என்றான் ரிக்கி.

இருவரும் நீலநிற வண்டியின் பின்புறத்தில் மறைவாக அமர்ந்து கொண்டார்கள். சற்று நேரத்தில் அங்குவந்த வண்டி ஓட்டி, ஏறி அமர்ந்து வேனை ஓட்டத் தொடங்கினான். அவன் செல்போனில் யாருடனோ பேசுவது தெளிவாகக் கேட்டது... "றொபேர்ட் ரோசன்! நான் உன் அங்கிள் பெர்ட்டில் பேசுகிறேன். நீ சீக்கிரமே குணமடைய வேண்டும் என்று கடவுளை வேண்டிக் கொள்கிறேன். மதியம் மூன்று மணிக்கு நான் பெரியாஸ்பத்திரிக்கு வருகிறேன். உனக்கு நல்ல பரிசுப் பொருள்கள் கொண்டு வருகிறேன்!" - என்று பேசிக்கொண்டிருந்தான் வண்டி ஓட்டி.

ரிக்கி - அவன் தோழி நெல்லி - இருவருக்குமே இப்போது வண்டியின் இலக்குத் தெரிந்துவிட்டது.

ஓரிடத்தில் வண்டியை நிறுத்திவிட்டு வண்டி ஓட்டி பெர்ட்டில் சாப்பிடப் போனார். ரிக்கியும் நெல்லியும் - இயற்கை உபாதைக்காக மறைவிடத்திற்குச் சென்றார்கள்... அவர்கள் திரும்பி வருவதற்குள் நீல வேன் புறப்பட்டு விட்டது!...

"ரிக்கி, வண்டி பட்டணத்தில் இருக்கும் பெரியாஸ்பத்திரிக்குத்தான் போகிறது. நீ வயிற்று வலி வந்த மாதிரி நடி! வண்டி எதையாவது நிறுத்தி லிப்ட் கேட்டு - நாமும் பெரியாஸ்பத்திரிக்குப் போய்விடலாம்!" என்றாள் நெல்லி.

தந்திரம் பலித்தது. ஒரு கார்க்காரர் லிப்ட் கொடுத்தார். உரிய நேரத்தில் இருவரும் பெரியாஸ்பத்திரியை அடைந்தார்கள். சிறிது நேரத்திற்கெல்லாம் நீல வேன் அங்கு வந்து நின்றது! அங்கிள் பெர்ட்டில் - பின் பக்கத்தில் இருந்து சைக்கிளை இறக்கி நிலத்தில் நிறுத்தினார்.

மறைவிடத்தில் இருந்து ரிக்கியும் நெல்லியும் அவர் முன்னால் வந்து நின்றார்கள். "அங்கிள்! ஏன் என் சைக்கிளைத் திருடினீர்கள்?" - என்று கோபத்துடன் கேட்டான் ரிக்கி.

அங்கிள் பெர்ட்டில் வருத்தத்துடன் பேசினார். "தம்பி! இது உன் சைக்கிளா? இதைத் திருடுவது என் நோக்கமல்ல! எங்கள் குடும்பத்துப் பையன் ஒருவன் விபத்தில் சிக்கிப் படுத்த படுக்கையாகி விட்டான். அவனுக்கு இந்தச் சைக்கிளைப் பரிசாகக் கொடுக்க நினைத்தேன். உன் சைக்கிள் ஓர் அகால நேரத்தில் சவுக்கு மரத் தோப்பில் - அநாதையாகக் கிடந்தது. அதனால் எடுத்தேன். அங்கே இருந்த ஒரு சிமெந்து இருக்கையில் ஒரு பையில் கணிசமான பணமும், உனக்கு ஒரு கடிதமும் வைத்தேனே! நீ பார்க்கவில்லையா? உன் பெயர் என்ன?"

"அந்தக் கடித உறையை நான் பார்க்கவில்லை. என் பெயர் ரிக்கி ரேப்பர்"

"ரிக்கி ரேப்பர் என்பதைக் குறிக்கும் விதத்தில் உன் சைக்கிளில் ஆர்.ஆர். என்ற எழுத்துப் பொறிக்கப்பட்டு இருந்தது. எங்கள் வீட்டுப் பையன் பெயர் - றொபேர்ட் ரோசன். அவன் பெயரும் ஆர். ஆர் - என்றே வரும்"

இதற்குள் தாதி றொபேர்ட் ரோசனை சக்கர நாற்காலியில் அழைத்து வந்தாள். ரிக்கியும், நெல்லியும் மறைவிடத்திற்குச் சென்று ஒளிந்து கொண்டார்கள்.

அங்கிள் பெர்ட்டில், "இந்த சைக்கிள் பரிசு உனக்கு!" என்று சொன்னதும் ஆச்சரியப்படுத்தும் விதத்தில் - சக்கர நாற்காலியில் இருந்து எழுந்து வந்து, றொபேர்ட் ரோசன் சைக்கிளைத் தொட்டுப் பார்த்தான்.

மேலும் சிறிது நேரம் அவனுடன் அன்பாகப் பேசினார் பெர்ட்டில் அங்கிள். தாதி அவனை மீண்டும் சக்கர நாற்காலியில் அமர வைத்து மருத்துவமனைக்குள் கூட்டிச் சென்றாள்.


"எங்கள் வீட்டுப் பையனுக்கு உளவியல் ரீதியாகச் சிகிச்சை தரவே உன் சைக்கிளை எடுத்தேன்."


"நீங்கள் என் சைக்கிளை எடுத்துக் கொண்டது குறித்து எனக்கு எந்த வருத்தமும் இல்லை!" - என்று அமைதியாகச் சொன்னான் ரிக்கி. நெல்லியும் தலை ஆட்டினாள்.

**- எஸ்.குரு -**

## தமிழ்ச்செல்வனும் சீமானும்

டி.பி.எஸ்.ஜெயராஜின் கட்டுரையிலிருந்து





2007 நவம்பர் 2, அதிகாலை முதல் வெளிச்சத்தின் பொழுது இஸ்ரேலிய தயாரிப்பான கிபீர் குண்டு வீச்சு விமானங்களும் மற்றும் ரஷ்யன் சுப்பர்சோனிக் மிக் 27 விமானமும் இரண்ணமடு கிழக்கு, தெற்கு, கிளிநொச்சி நகரம் மற்றும் அதன் புறநகர் பகுதிகளான ஆனந்தபுரம் மற்றும் திருவையாறு பகுதிகள் மீதும் வான் தாக்குதலை நடத்தின. எல்.ரீ.ரீ.ஈயின் அரசியற் பிரிவுக்கு தலைமை தாங்கிவந்த 40 வயதான சுப்பையா பரமு தமிழ்ச்செல்வனும் அவருடன் சேர்த்து மற்றும் ஐவரும் அந்த வான் தாக்குதலில் கொல்லப்பட்டார்கள். மரணத்தின் பின் தமிழ்ச்செல்வன் எல்.ரீ.ரீ.ஈயின் தலைவரால் பிரிகேடியராகப் பதவி உயர்த்தப்பட்டார்.

திருவையாறு குண்டுத் தாக்குதலில் தமிழ்ச்செல்வனுடன் சேர்த்து கொல்லப்பட்ட மற்றவர்கள், முத்துக்குமாரு சௌந்தரக்கிருஸ்ணன் என்ற லெப். கேணல் அன்புமணி, தர்மராஜா விஜயகுமார் என்கிற மேஜர் மிகுதன், கருணாநிதி வசந்தகுமார் என்கிற கப்டன் கலையரசன், பஞ்சாட்சரம் சஜீபன் என்கிற லெப்.ஆட்சிவேல், மற்றும் முத்துக்குமாரக் குருக்கள் சிறீகயந்திரிநாத சர்மா என்கிற லெப். மாவைக்குமரன் ஆகியோராவர். அவர்கள் அனைவரும் யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள கிராமங்களை சேர்ந்தவர்களாவர்.

மாவைக்குமரன் ஒரு பிராமண பூசகரின் மகனாவார். கலையரசன் அல்லது நேதாஜி என்றழைக்கப்படுபவர், ஆட்சிவேல் மற்றும் மாவைக்குமரன் ஆகியோர்கள் தமிழ்ச்செல்வனின் மெய்ப்பாதுகாவலர்கள். அலெக்ஸ் என்றும் அழைக்கப்படும் அன்புமணி மற்றும் மிகுதன் ஆகியோர் அரசியற் பிரிவை சேர்ந்தவர்கள்.

அன்புமணி அல்லது அலெக்ஸ் என்பவர் ஒரு புகைப்பட தொழில் நிபுணரும் பல ஊடகவியலாளர்களுக்கு நன்கு தெரிந்தவரும் ஆவார். அவர் எல்.ரீ.ரீ.ஈயின் அரசியற் பிரிவின் மூலோபாய தொடர்பாடல் பிரிவுக்கு பொறுப்பாக இருந்தவர். தமிழ்ச்செல்வனின் நெருங்கிய உதவியாளரான அன்புமணி, அரசியற் பொறுப்பாளரின் ஐரோப்பிய பயணங்களின் போதெல்லாம் அவருடன் பயணம் செய்துள்ளார்.

தமிழ்நாட்டு திரைப்பட நடிகரும், இயக்குனரும் நாம் தமிழர் கட்சியின் தலைவருமான, செபஸ்ரியன் சீமான் அல்லது செந்தமிழன் சீமான், அலெக்ஸ் அல்லது சௌந்தரராஜன் என்பவரது விதவை மனைவியைத்தான் கூடிய சீக்கிரம் திருமணம் செய்ய உள்ளார். ஸ்ரீலங்கா உல்லாசப் பயணிகளும் மற்றும் யாத்திரிகர்களும் தமிழ் நாட்டில் திட்டமிட்டு தாக்கப்படும் விடயத்தில் சீமானின் நாம் தமிழர் க்ட்சிதான் முன்னணியில் நின்று வருகிறது. சீமானின் சிங்கள எதிர்ப்பு கருத்துக்களின் சீற்றம் நன்கு அறியப்பட்டிருந்ததால் அவரையே கனடா அங்கிருந்து நாடுகடத்தியதுடன், மற்றும் அமெரிக்கா அவருக்கு உள்நுழைவதற்கு அனுமதி மறுத்திருந்தது.

# கணினி உலா

A.J.Nimalrajan

## மலரும் நினைவுகளை வெளிப்படுத்த Facebook Stories




உங்கள் மலரும் நினைவுகளைத் தொகுத்து உலகம் அறிய உதவும் வாய்ப்பை பிரசித்தி பெற்ற சமூக வலைத் தளமான Facebook தருகிறது. Facebook Stories என்ற புதுவசதி அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது.

இத்தளத்தில் பேஸ்புக் தளத்தில் பல்வேறு பயனர்களால் பகிரப்படும் சுவாரஸ்யமான செய்திகளை அல்லது கதைகளை ஒன்றிணைத்து ஒவ்வொரு மாதங்களும் வேறுபட்ட கருப்பொருட்களை உள்ளடக்கியவாறு வெளியிட தீர்மானிக்கப் பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.


பெண்களுக்கு தனி சமூக இணையதளம்

பேருந்தில் லேடீஸ் special போல இப்போது இணையதளத்திலும் வந்து விட்டது லேடீஸ் special. பெண் களுக்கென தனி சமூக இணையதளத்தை தொடங்கி உள்ளார் கனடாவைச் சேர்ந்த ஒரு பெண்மணி.

www.luluvise.com என்ற இந்த இணையதளத்தில் ஆண்கள் சேர தடை விதிக்கப்பட்டுள்ளது. Facebook போன்ற சமூக இணையதளங்களையும் இணைக்கும் வகையில் இது வடிவமைக்கப்பட்டுள்ளது.

## Autorun வைரஸ் கணனிக்கு வராமல் தடுப்பது எப்படி?

எல்லோரிடமும் பென்ரைவ்வும் அதில் சில வைரஸ்சும் காணப்படுவது வழக்கமே. எனவே நம் கணனிகளுக்கு வைரஸ உட்புகாமலிருக்க ஒவ்வொருவரும் சில வழிகளைத்தேடிக்கொண்டிருப்போம். இவ்வகையில் உலகில் மிக பிரசித்திபெற்ற வைரஸ்களில் ஒன்று Autorun.inf ஆகும். இவ்வகை வைரஸ் கள் மிகவும் பயங்கரமானதும் கணனி பாவனையாளர்களுக்கு தலைவலியை ஏற்படுத்தக் கூடியதுமாகும். இது விண்டோஸ் இயங்குதளங்களிலேயே பரவலாகத் தாக்குகின்றது. எனவே இவ் ஒட்டோரன் வைரஸிலிருந்து நம் கணனியைப் பாதுகாப்பது எப்படி?





நீங்கள் முதலில் செய்யவேண்டியது உங்கள் பென் ட்ரைவில் வைரஸ் உள்ளது என உணருவீர்களாயின் சிறந்த அன்டி வைரஸ் ஒன்றை நிறுவுங்கள். அதுவும் எந்நாளும் update செய்து கொள்ளக்கூடியதாகவும் இருத்தல் வேண்டும், இவ் வறான அன்டி வைரஸ்கள் பலவும் இலவசமாக கிடைக்கின்றது. ஆயினும் Microsoft நிறுவனத்தின் Microsoft Essentials மிகச்சிறந்த இலவச அன்டி வைரஸ் ஆகும். இது விரைவானதும், சிறிய அளவிலான memory யே தேவைப்படுகிறது. இது licensed விண்டோஸ் இயங்கு தளங்களிலேயே பயன்படுத்த முடியும். இதைப் பயன் படுத்திப் பாருங்கள் சிறந்த ஒரு அன்டி வைரஸ் நீங்களே உணர்வீர்கள்...

01. Run command ஐ (Ctrl + R) திறந்து gpedit.msc என டைப் செய்து ok பட்டனை அழுத்துங்கள்.

02. பின் ஒரு pop-up windows காட்சித்தரும் அதில் Administrative Templates கீழ் System என்பதை தெரிவு செய்யுங்கள்

03. அங்கு Turn Off Autoplay என்பதை டபிள் க்ளிக் (double click)செய்யுங்கள்.




04. பிறகு வரும் pop-up windows வில் Turnoff Autoplay என்பதற்கு கீழுள்ள Enabled என்பதையும் Turnoff Autoplay on இல் All drives தெரிவுசெய்யுங்கள்

05. இப்பொழுது நீங்கள் பென் ட்ரைவ்வை திறக்கும் வரை அது திறக்காது.

எப்பொழுதும் பென் ட்ரைவ்வை double click செய்து திறக்காதீர்கள். இங்கு ஒரு இலகுவான வழியொன்றை தருகிறேன்.

01. Run command I (Ctrl + R) திறந்து drive வின் எழுத்தை கீழுள்ள படத் தில் காட்டப்பட்டுள்ளவாறு டைப் செய்து ok




பட்டனை அழுத்துங்கள்.

இவ்வாறு open செய்யும்போது வைரஸ் நம் கணனிக்குள் உட்புகாது. இப்போது பென்ட்ரைவில் உங்களுக்கு தேவையான வற்றை செயற்படுத்தலாம்.






ஏ.கே.

## கணனிகள் வாங்கும் போது கவனிக்க வேண்டியவை

தற்போது ஏராளமான தயாரிப்பு பெயர்களில் ஏராளமான புது விடயங்களுடன் கணனிகள் நாளுக்கு நாள் சந்தைக்கு வந்த வண்ணமேயுள்ளன.


பழையன கழிதலும் புதியன புகுதலும் என்ற கருத்தியலுக்கு அமைவாக புதியன சந்தைக்கு வந்தாலும் நாம் பழையவற்றை கைவிடுவதாக இல்லை.

இதன் காரணமாகவே கணனி உதிரிப்பாகங்களை தயாரிக்கும் நிறுவனங்களும் புதுப்புது பொருத்தும் நுட்பங்களுடனும் (Ascembling Technics) வெவ்வேறு அளவு பரிமாணங்களுடனும் புதியவற்றை தயாரிக்கிறார்கள்.

எனவே பழைய உதிரிப்பாகங்களுடன் புதியன பொருந்தாது புதியவற்றை பொருத்த வேண்டும் என்றால் எல்லாவற்றையுமே புதியதாக வாங்கவேண்டிய நிலைமை.


இதனால் 2006, 2007 காலப்பகுதியில் வாங்கிய கணனிகள் எல்லாம் இன்று தேடுவாரற்றுக் கிடக்கின்றன. 2006இல் ஒரு Pentium IV கணனி வாங்குவது என்றால் 60,000.00 ரூபாவிற்கு மேல் செலவழிக்க வேண்டும். ஆனால் 05 வருடம் கழித்து நல்ல நிலையில் உள்ள அதே கணனியை 10,000.00 ரூபாவுக்கு கூட விற்க முடியாத நிலைமை.

காரணம் கணனி தயாரிப்பு நிறுவனங்கள் புதிய கண்டுபிடிப்புடனான தொழிநுட்பங்களை அறிமுகப் படுத்தும் போது தமது உதிரிப்பாக விற்பனையை மேம்படுத்துவதற்காக புதிய புதிய பரிமாணங்களில் இவற்றை தயாரிக்கின்றன. சுருக்கமாக இவற்றை பரம்பரை(Generation) என்று சொல்லுகிறார்கள். அதாவது Pentium iv பரம்பரையில் இருந்தவற்றை தற்போதைய i3, i5 கணனி உதிரிப்பாகங்களுடன் இணைத்து பயன்படுத்த முடியாது. இவ்வ வேறு Generatoin ஐ சேர்ந்தவை.




உதராணமாக பழைய றலி சைக்கிளை இன்றும் வைத்து ஓடுவது போல. சைக்கிளின் செயின், பெடல், ப்றீவீல் என்பவை இன்னமும் மாறாமல் அதே அளவு பரிமாணங்களில் கிடைக்கின்றன. எனவே பழைய சைக் கிளையே நாம் புதுப்பித்து புதுப் பித்து ஓடக்கூடியதாகவுள்ளது.

ஆனால் இலத் திர னியல் உதி ரிப்பாகங்கள் குறிப்பாக கணனி உதிரிப்பாகங்கள் காலத்துக்கு காலம் அளவு பரிமாணங்களை வித்தியாசப்படுத்தி சந்தைப்படுத்தப்படுகின்றன.




காரணம் கணனிச் சந்தையின் இயங்கு நிலையினை மாறாமல் வைத்திருப்பதற்காகும். எனவே கணனி தயாரிப்பு நிறுவனங்கள் தமது இலா பத்தைப் பார்க்கும் போது கணனி பாவனை யாளர்களும் தமது இலாபத்தையும் பார்க்க வேண்டும் தானே.

எனவே தேவையற்ற விதத்தில் விலை கூடிய கணனிகளை வாங்காது எமக்குத் தேவையான வகையில் எமக்குப் பொருத்தமான கணனியை வாங்குதல் சிக்கனமானது.

சாதாரணமான தட்டச்சு வேலைகள் மற்றும் கணக்கீட்டு வேலைகளுக்கும் மற்றும் தரவுத் தளங்களை சிறிய அளவில் வடிவமைத்து அன்றாடம் வேலை செய்யவும் இன்ரநெற் பாவனைக்கும் Pentium (iv) Dual Core கணினிகள் போதுமானவையாகவுள்ளன. இந்த கணனியை வாங்கும் போது தற்காலிக மெமறி (RAM) - (Random Access Memory) 01GB இற்கு மேல் இருத்தல் உத்தமம். ஏனெனில் Windows 7 நிறுவுவதாயின் 01GB Ram அவசியமாகும். மேலும் வன்தட்டின் (hardisk) இன் மெமறி அளவு 120 GB அல்லது அதிகம் இருந்தாலும் போதுமானது. இவ்வாறான இன கணனி ஒன்றில் மேலதிக அனைத்து வசதிகளும் அதாவது USB Poets Network Card, Multimedia என்பவை சேர்ந்தே வருகின்றன. கம்பியில்லா இன்ரநெற் இணைப் புக்கு மட்டும் மேலதிகமாக wirless adapter ஒன்று சேர்த்துக் கொள்ளவேண்டி இருக்கும்.

இந்த ரக கணனிகள் சாதாரணமாக தற்போதைய சந்தையில் 20,000.00 - 30.000.00 ரூபாவரை கிடைக்கின்றன.

அடுத்ததாக புகைப்பட திருத்தங்கள் (Photo editing) வீடியோ திருத்தங்கள் (Vedio editing) மற்றும் அவற்றை தொகையாக சேர்த்து வைத்தல் போன்ற தேவைகளுக்காக அல்லது இவற்றை தொழிலாக செய்வோர் அல்லது குறுகிய வலையமைப்பிலே பிரதானமான கணனியாக



பயன்படுத்துவதற்கு தற்போது வெளிவரும் i3, i5 கணனிகளை கொள்வனவு செய்வது சிறந்தது. இவை 55,000.00 முதல் 70,000.00 வரை சந்தையில் கிடைகக்கின்றன. இவை அதிகூடியளவு வேகம் மற்றும் நினைவாற்றல் (Mamory) என்பவற்றுடன் கிடைக்கின்றன.

எனவே வீட்டில் படிக்கும் பிள்ளைகளுக்காக கணனி வாங்கும் பெற்றோர் வாயைக்கட்டி வயிற்றைக்கட்டி சேமித்த பணத்தை தேவையற்ற விதத்தில் கணனிக்கு செலவழிக்காது எமது தேவைக்கேற்ற வித்தில் கணனியை வாங்கினால் மிகுதிப் பணத்திற்கு அச்சியந்திரம் (Printer) நிழல் இயந்திரம் (Scanner) என்பவற்றை கொள்வனவு செய்து கொள்ள முடியும். இதன் முலம் Print மற்றும் Scan தேவைகளுக்காக வெளியில் செலவழிக்கும் பணத்தினை மீதப்படுத்திக் கொள்ளலாம்.

எந்தக் கணனியை வாங்குவதென்றாலும் முதலில் உத்தரவாத காலத்தையும் (warrenty Period கடையின் நம்பகத்தன்மையையும் உறுதிப் படுத்திக் கொள்வது முக்கியமானதாகும்.

ஏனெனில் தம்மிடம் கொள்வனவு செய்த கணனிகளுக்கு மூன்றுவருடம் உத்தரவாதம் கொடுத்த விற்பனை நிலையங்கள் குறுகிய காலத்திலேயே கடையைப் பூட்டிக்கொண்டு வெளியேறிய சம்பவங்களும் யாழ்ப்பாணத்திலுள்ளன.

எனவே எமது பணத்திற்கான பெறுமதியை நாம் தட்டிக் கொள்வதற்கு எமக்கு பொருத்தமான கணனியை கொள்வனவு செய்வது சாலச் சிறந்தது.

# நல்லூர் பிரதேச சபைத் தலைவர் பாதுகாப்பு வழங்கக் கோரவில்லை

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேசசபைத் தலைவர் இனந்தெரியாதவர்களால் தாக்கப்பட்ட சம்பவம் குறித்து யாழ். பொலிஸ் நிலையப்பொறுப்பதிகாரி சமன்கிசோ தலைமையில் விசாரணைகள் இடம் பெற்றுவருவதாக யாழ். பிரதிப்பொலிஸ்மா அதிபர் எரிக் பெரேரா தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் யாழ். சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்தில் இடம் பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் கலந்து கொண்ட அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்தச்சம்பவத்துடன் தொடர்புடைய எவரும் இதுவரை கைது செய்யப்படவில்லை. புலன் விசாரணைகள் தொடர்ந்து நடைபெற்றுவருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

குறித்த பிரதேச சபைத்தலைவருக்கு பொலிஸ் பாதுகாப்பு ஏதாவது வழங்கப்பட்டுள்ளதா என்று பத்திரிகையாளர்கள் கேட்ட கேள்விக்கு அவர் பதிலளிக்கையில்; தமக்கு பாதுகாப்பு வழங்குமாறு அந்தப்பிரதேச சபைத் தலைவர் கோரவில்லை என்றும் பிரதிப்பொலிஸ்மா அதிபர் பதிலளித்தார்.

அத்துடன் கடந்த வாரத்தில் பல்வேறு குற்றச்செயல்கள் குறித்து அவற்றைக் கட்டுப்படுத்துவதற்காக நீதிமன்றத்தினால் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 42 பேர்கைது செய்யப்பட்டுள்ளதாகவும், குடிபோதையில் வாகனம் செலுத்திய 15 பேரிற்கு எதிராக நீதிமன்றங்களில் வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருப்பதாகவும் சூழல் மாசடைதல் சம்பந்தமாக 37பேருக்கு எதிராக வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருப்பதாகவும் தெரிவித்த பிரதிப்பொலிஸ்மா அதிபர், இக்காலப்பகுதியில் சட்டவிரோதமாக ஆடுகளை ஏற்றிச்சென்ற ஐந்து பேர், வீதியோரத்தில் குடிபோதையில் கலகம் விளைவித்த மற்றும் பொதுஇடங்களில் நடமாடிய 23 பேர் கைது செய்யப்பட்டு அவர்களுக்கு எதிராக நீதிமன்ற வழககுகள் பதிவு செய்யப்பட் டிருப்பதாகவும் பிரதிப்பொலிஸ்மா அதிபர் தெரிவித்துள்ளார். (பா)

## சேதமடைந்துள்ள வீதி; போக்குவரத்து நெருக்கடி

(பருத்தித்துறை)

பருத்தித்துறை பிரதான வீதிப்பகுதியில் குடிநீர்த் திட்டத்துக்காக வெட்டப்பட்ட வாய்க்காலில் குழாய்கள் பொருத்தப்படாமையால் அவ்விடங்கள் நீரினால் மூடப்பட்டுள்ளதன் நிமித்தம் பாவனையாளர்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இதேவேளை ஓராங்கட்டை சந்தியிலிருந்து பருத்தித்துறை செல்லும் வீதியின் வீதி அகலிப்பு வேலைகள் இதுவரை ஆரம்பிக்கப்படாமையால் வீதி குண்டும் குழியுமாக மிக மோசமாக சேதமடைந்துள்ளது. இதனால் தற்போது இவ்வீதியுடான போக்குவரத்து பெரும் நெருக்கடியின் மத்தியில் இடம்பெறுவதாக மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

எனவே இவ்விடயத்தில் பொறுப்புவாய்ந்த அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (109)

# மாணவரிடம் நன் நடத்தையை ஏற்படுத்துபவரே சிறந்த ஆசிரியர்

(வவுனியா)

அன்பும் பண்பும் மிக்கது ஆசிரியத்துவம். தான் விரும்புகின்ற நடத்தையை மாணவர்களிடத்தே ஏற்படுத்துவதை விட மாணவர் விரும்பும் நடத்தையை மாணவர்களிடத்தே ஏற்படுத்துபவரே சிறந்த ஆசிரியர் என வவுனியா கல்வியியல் கல்லூரியின் பீடாதிபதி க. பேணாட் தெரிவித்துள்ளார்.

தேசிய கல்வியியல் கல்லூரியில் இடம்பெற்ற ஆசிரியர் தின நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

எனக்கு ஆரம்ப கல்வியைக் கற்பித்த ஆசிரியையை நான் தெய்வமாக வணங்குகின்றேன். ஏனெனில் அந்த ஆசிரியையை நான் வாழ்நாளில் சந்தித்திருக்காவிடின் நான் இன்று உங்கள் முன்னிலையில் ஓர் உயர் கல்வி நிறுவனத்தின் தலைவராக இருந்து உரையாற்றியிருக்க முடியாது. பாடசாலைக்கு செல்வதற்கு விரும்பாத என்னை, பாடசாலையில் எந்நேரமும் அழுது கொண்டிருந்த என்னை அரவணைத்து அன்புகாட்டி ஓர் தாயைப் போல் பராமரித்து எனக்கு கற்றலில் விருப்பம் ஏற்பட வழிகாட்டியவர் எனது ஆரம்ப கல்வி ஆசிரியரே.

வாழ்க்கையில் திருப்பு முனையை ஏற்படுத்திய ஆசிரியர்களை யாருமே என்றும் மறக்க முடியாது. ஒரு மனிதன் தன்னையறிய உதவும் ஆசிரியர்களையும் அவர்களின் அணுகுமுறையையும் யாரும் வாழ்நாளில் மறந்து வாழ முடியாது என்றார்.



யாழ். ஒஸ்மானியாக் கல்லூரியில் அண்மையில் நடைபெற்ற E-city ஆங்கில தினப்போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களின் கலை நிகழ்வையும், மௌலவி மஹ்முக பரிசு வழங்குவதையும் காணலாம். (105)

# டெங்கு நோயிலிருந்து பாதுகாக்க செய்யவேண்டிய வழிமுறைகள்

(நேற்றைய தொடர்ச்சி)

மக்கள் டெங்கு நோயிலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ளவேண்டிய வழி முறைகள்.

**நுளம்பு கடிப்பதை தவிர்த்தல்**

☐ டெங்கு நுளம்பு பகலில் கடிக்கும். அதிலிருந்து பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

☐ முழு நீள மேற்சட்டை மற்றும் கால்களைப் பாதுகாக்கும் வகையில் உடை அணிதல் வேண்டும்.

☐ நுளம்பு வராமல் தடுக்கும் மருந்துகளைப் பாவித்தல்.

☐ நுளம்புச்சுருள் மற்றும் அழிக்கும் இரசாயனப் பொருட்களைப் பாவித்தல்

☐ நுளம்பு வலைகளைப் பயன்படுத்தல் (குறிப்பாக குழந்தைகள், சிறார்களுக்கு) Permithrin மருந்து தெளித்த நுளம்பு வலைகள் மற்றும் கதவு, யன்னல் வலைகளைப் பயன்படுத்தல்

☐ நோய் பரம்பலை கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளை எடுத்தல், நோயாளியிடமிருந்து ஏனையோருக்கு பரவாமல் தடுக்க நடவடிக்கை எடுப்பது அவசியம்.

**நுளம்புகள் பெருகுவதைத் தடுத்தல்**

டெங்கு நோயைப் பரப்பும் நுளம்புகள் ஒவ்வொரு வீட்டின் சுற்றுப் புறத்திலுள்ள நீர் தேங்கும் இடங்களில் இருந்து பரவுகின்றது.

**அதனை தடுப்பதற்கு நாம் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் வருமாறு;**

☐ வீட்டுச் சுழலிலுள்ள நீர் தேங்கும் நிலைகளை ஒழித்தல்

☐ வீட்டிற்குள் வைக்கும் சாடிகள், கோப்பைகள் போன்றவற்றுள் நீர் நிலைத்து நிற்காமல் சுத்தப்படுத்தல்

☐ தண்ணீர் சேமித்து வைக்கும் பாத்திரங்கள் மற்றும் வாளிகளை மூடி வைத்தல், பாவித்து எறிந்த போத்தல்கள் மற்றும் பாத்திரங்களை சுற்றுச் சூழலிலிருந்து அகற்றி அழித்தல்.

☐ மேலே தெரிவிக்கப்பட்டிருந்த முறைகளை கவனத்தில் எடுத்து நாம் எல்லோரும் செயற்பட்டால் டெங்கு நோயிலிருந்து எம்மை காப்பாற்றிக் கொள்ளலாம். (முற்றும்)

**வைத்தியகலாநிதி ஆர்.தெய்வேந்திரம்**
**(யாழ்.வைத்தியசாலை)**

# பதிவிருக்கப் பெட்டகம்

குவிக்கப்பட்ட மனிதத் தலைகள்
பார்வையிலிருந்து மறைகின்றன
யாரும் கவனிக்காத வண்ணம்
நான் மிகவும் சிறியவனாகிறேன்
நான் மரணம் அடைந்தாலும்
குழந்தைகளின் மிருதுவான
புத்தகங்களிலும்
புதிய விளையாட்டுகளிலும்
உயிர்த்தெழுவேன்
கதிரவன் பிரகாசிக்கிறான்
என்பதைக் கூற.
**– மாண்டெல்ஷ்டாம்**

தானும் உணவாகி
மீனும் உணவாகும்
இந்த நதிக்கு
நானும் உணவாவேன்
**– சிற்பி**

வானூர்தி நிலையத்திற்கு
வழியனுப்ப வந்தவர்கள்
கட்டியணைத்து
அழுது புலம்பி
கடைசியாக
கையசைக்கிறார்கள்
மறக்காம
மாச மாசம் பணம் அனுப்பு
என்று சொல்லி
**– இசாக்**

மாடு மணியடித்ததற்கு
நீதி வழங்கினான்
ஒரு மன்னன்.
மயிலின் குளிருக்கு
போர்வை தந்தான்
ஒரு ராஜா.
முல்லைக்குத் தேர் தந்தான்
ஒரு அரசன்.
கழுகுக்கு உணவாக
தராசில் உட்கார்ந்தான் சிபி.
எந்த அரசனும்
மனிதர்களுக்கு
எதுவும் தரவில்லை
இப்போது போலவே.
**– தேவகுமார்**

காற்று
தள்ளித் தள்ளிச் சென்று
கடல் மேல்
சூல் கொண்டிருக்கும்
கரு மேகங்கள்.
காலம்
தள்ளித் தள்ளிச் சென்றும்
கலையாத
என் சோகங்கள் போல்.
ஒரு மழைத் துளி
கடல் மேல் விழும்.
கடலாகும்.
ஒரு
கண்ணீர்த் துளி விழுந்து
கரையும் சோகத்தில்
என்னுள்
கடல் உடையும்.
**– கு.அழகர்சாமி**

உனக்கும் எனக்கும்
எனக்கும் அவனுக்கும்
இவனுக்கும் உனக்கும்
கடைசியில் ஒன்றுமில்லை
என ஆனது?
அதனாலென்ன வாருங்கள்
டீ குடிக்கப் போகலாம்
என்றேன் நான்.
**– சமயவேல்**

ரோஜாக்களைப் பற்றி
பேசியும் புகழ்ந்தும்
அலுத்துவிட்டது.
தினப்படி வாழ்க்கையில்
முட்களுடனே பரிச்சயம்
அதிகம் என்பதால்.
**– எஸ்.சுகந்தி சுப்ரமணியன்**

அடைக்கப்படும் கதவின்
விருப்பமான சத்தத்திற்காக
உள் அறையில் காத்திருக்கிறேன்.
மிகுந்த கவனத்துடன்
சத்தமே கேட்காமல்
சாத்திவிட்டுப் போகிறார்கள்.
இப்படித்தான் ஒரு காரணமுமின்றி
இழந்துவிட நேர்கிறது
இன்னும் சிலவற்றை.
**– கல்யாண்ஜி**

ஒரு டைனோசரை நெருங்குவது எப்படி?
ஒட்டிக்கொண்டு நின்றால்
கட்டைவிரல் நகம் குடை பிடிக்கும்
வாலும் தலையும் எங்கோ பல காதத்தில்
முதுகிலிருந்து பார்த்தால்
அடிவயிறும் பிறப்புறுப்பும் அதல பாதாளத்தில்
காதிலிருந்து கால்விரல்கள் காணாத தூரத்தில்
ஒரு டைனோசரை நெருங்குவது எப்படி!
அது நம்மை நெருங்கச் செய்வதுதான்.
**– தேவதச்சன்**

மலை உச்சிக்குப்
போகவேண்டும்
பயணத்தை
எங்கிருந்து
தொடங்குவது
என்று குருவிடம்
கேட்டேன்
குரு சொன்னார்:
“மலை உச்சியிலிருந்து தொடங்கு”
**– மயன்**

அள்ளி
கைப்பள்ளத்தில் தேக்கிய நீர்
நதிக்கு அந்நியமாச்சு
இது நிச்சலனம்
ஆகாயம் அலைபுரளும் அதில்
கை நீரைக் கவிழ்த்தேன்
போகும் நதியில் எது என் நீர்?
**– சுகுமாரன்**

புனலுக்கும் அனலுக்கும் சேற்றினுக்கும்
கக்கும் விஷப் பாம்பினுக்கும் பிலத்தினுக்கும்
கடும்பசிக்கும் இடையறா நோய்களுக்கும்
பலியாகிக் கால்கைகள் உடல்கள் சிந்தும்
பச்சை ரத்தம் பரிமாறி இந்த நாட்டைச்
சலியாத வருவாயும் உடையதாகத்
தந்ததெவர்? அவரெல்லாம் இந்தநேரம்
எலியாக முயலாக இருக்கின்றார்கள்!
ஏமாந்த காலத்தில் ஏற்றங் கொண்டோன்
புலிவேஷம் போடுகின்றான்! பொதுமக்கட்குப்
புல்லளவு மதிப்பேனும் தருகின்றானா?....
ஒரு மனிதன் தேவைக்கே இந்தத் தேசம்
உண்டென்றால், அத்தேசம் அழிதல் நன்றாம்!
**– பாரதிதாசன் (பில்ஹணன் காவியத்தில்)**

# கல்விசார் செயற்பாடுகளில் கிளிநொச்சி முன்னேற்றம்



(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்திலே கல்விசார் செயற்பாடுகள் துரித கதியில் முன்னேற்றம் கண்டு வருகின்றது. அத்தோடு காணப் படும் ஒருசில குறைகளையும் நிவர்த்தி செய்வதற்கு தொடர்ந்து முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றோம். அதில் ஆசிரியர் வளப்பற்றாக்குறைகளை நிவர்த்தி செய்யும் விடயத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுத் துள்ளோம் என ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

கிளி.கனகபுரம் மகாவித்தியா லயத்தில் அமைக்கப்பட்ட வகுப்பறைக் கட்டடத்தொகுதி யினை நேற்றுமுன்தினம் திறந்து வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

வித்தியாலய அதிபர் குகா நந்தராசாவின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், கிளி நொச்சி வலயக்கல்விப்பணிப் பாளர் முருகவேல், கரைச்சி பிர தேசசபைஉறுப்பினர் கிருஸ்ண சாமி, ஈ.பி.டி.பி.யின் வலிகாமம் மேற்கு பிரதேசசபை உறுப்பி னர் பாலகிருஸ்ணன்(ஜீவன்), கிளிநொச்சி வலயக்கல்விப் பணிமனையின் கல்விமுகாமைத் துவ பிரதிக்கல்விப்பணிப்பாளர் செல்வராசா, கரைச்சிக் கோட் டக்கல்விப்பணிப்பாளர் அமிர் தலிங்கம், ஈ.பி.டி.பியின் கிளி நொச்சி மாவட்ட அமைப்பாளர் தவநாதன், பாடசாலை அபிவி ருத்திச்சங்க செயலாளரும் கிளி நொச்சி சந்தைவர்த்தக சங்கத் தலைவருமான இரத்தினமணி ஆகியோரும் மற்றும் அயற் பாடசாலைகளின் அதிபர்களும் ஆசிரியர்களும் பாடசாலை 'அபி விருத்திச் சங்கத்தினரும் கலந்து கொண்டனர்.

# வறட்சியின் பாதிப்புக்களை வெற்றிகொள்ளும் கண்காட்சி



(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் வரலாறு காணாத வறட்சியின் பாதிப் புக்களையும் நீர்ப்பற்றாக்குறையையும் வெற்றி கொள்வது பற்றி வவுனியா மாவட்ட அனைத்துப்பல்கலைக்கழக மாணவர் அபி விருத்தி சங்கம் "கிறீனியா" எனும் செயற்றிட்டம் ஊடாக மாணவர் களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக மேற்கொண்டிருந்த சித்திர மற்றும் புகைப்பட மற்றும் புத்தாக்க போட்டிகளுக்கான கண்காட்சி நேற்று வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலத்தின் ஐயாத்துரை மண்டபத்தில் இடம்பெற்றது.

இதன்போது வவுனியா பிரதேசம் எதிர்நோக்கும் நீர்ப் பற்றாக் குறை தொடர்பான விளக்கங்கள் வழங்கப்பட்டதுடன் பிரக்டிக் கல் அக்சன் நிறுவனத்தின் நீர் விரயமின்றிச் செயற்படுத்தும் செயற்பாட்டு முறைகளின் காட்சித்தொகுப்பும் வைக்கப்பட்டிருந்தது. சிறந்த புகைப்படம் மற்றும் சித்திரப்போட்டிகளுக்கான தெரிவும் இடம்பெற்றிருந்தது. (160)

## தேசிய மட்டத்தில் மகேந்திரராசா இரண்டாமிடம்

(பூநகரி)

அகில இலங்கை ரீதியில் சிறந்த தபால் ஊழியர்களைத் தெரிவு செய்வதற்கான மதிப்பீட்டில் பூநகரி பிரதம தபால் நிலையத் தைச் சேர்ந்த ப.மகேந்திரராசா வடமாகாண நிலையில் முதலாம் இடத்தையும் தேசிய மட்டத்தில் இரண்டாம் இடத்தையும் பெற் றுள்ளார்.

இவருக்குரிய மதிப்பளிப்பு விழா கடந்த 6ஆம் திகதி கொழும்பு சுதந்திரசதுக்கத்தில் தபால் தொலைத்தொடர்பு அமைச்சர் தலைமையில் நடைபெற்றது.

வடமாகாணத்தில் முதல் நிலைகளைப் பெற்றவர்களுக்கான பாராட்டுவிழா எதிர்வரும் 27ஆம் திகதி மன்னாரில் நடைபெற இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (112)

## பாலியல் துஷ்பிரயோகம்; வட்டுக்கோட்டை இளைஞன் கைது

(யாழ்ப்பாணம்)

இளவாலை பொலிஸ்பிரி வில் 15வயதுச் சிறுமியைக்காத லித்து பாலியல் வல்லுறவுக் குட்படுத்திய வட்டுக்கோட்டை யைச் சேர்ந்த 19 வயது இளை ஞன் ஒருவர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத் தில் முற்படுத்தப்பட்டிருப்பதாக யாழ் பிரதிப் பொலிஸ் மா அதி பர் எரிக்பெரேரா தெரிவித் துள்ளார்.

நேற்றுமுன்தினம் யாழ் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்ச கர் காரியாலயத்தில் நடை பெற்ற வாராந்த செய்தியாளர் சந்திப்பில் கலந்த கொண்டு இந்தக் குற்றச் செயல் குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த மாதம் நடைபெற்ற இந்தச்சம்பவம் குறித்து கடந்த 14ஆம் திகதியே இளவாலைப் பொலிஸில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டிருப்பதாகவும் இந்த முறைப்பாட்டை அடுத்து சந்தேகநபர் கைது செய்யப் பட்டு நீதிமன்றத்தில் பாரப்படுத் தப்பட்டுள்ளதாகவும் பிரதிப் பொலிஸ் மா அதிபர் எரிக் பெரேரா மேலும் தெரிவித் துள்ளார். (பா)

# வெங்கலச்செட்டி குளத்தில் சிறுவர், முதியோர்தின விழா

(வவுனியா)

வெங்கலச் செட்டிகுள பிர தேச செயலகம் நடாத்தும் சர்வ தேசசிறுவர், முதியோர்தின விழா பிரதேச செயலக முன்ற லில் எதிர்வரும் வியாழக்கிழமை காலை 9.00 மணிக்கு பிரதேச செயலாளா என். கமலதாசன் தலைமையில் நடைபெறவுள் ளது.

இந்நிகழ்வுக்கு பிரதம விருந் தினராக வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் பந்துல ரிச் சந்திர கலந்து கொள்ளவுள் ளதுடன், கௌரவ விருந்தின ராக சர்வதேச தொழிலாளர் நிறுவன தேசிய திட்ட இணைப் பாளர் சு.சிவப்பிரகாசமும், சிறப்பு விருந்தினராக செட்டிகுளம் கோட்டக்கல்வி பணிப்பாளர் கே. நித்தியானந்தமும் கலந்து கொள்ளவுள்ளனர்.

வரவேற்பு நடனத்தை செட்டி குளம் மகாவித்தியாலய மாண விகள் வழங்க வரவேற்பு ரையை உதவிப் பிரதேச செய லாளர் வே.ஆயகுலன் நடாத்த வுள்ளார்.

இந்நிகழ்வில் சிறுவர்களுக் கான விளையாட்டுப்போட்டிகள் முதியோர்களுக்கான பாரம்ப ரிய விளையாட்டுப்போட்டிகள் மற்றும் சிறுவர், முதியோரின் கலை நிகழ்வுகளும் இடம் பெற வுள்ளதுடன், செட்டிகுள கோட்ட மட்ட பாடசாலை மாண வர்களிடையே நடை பெற்ற கவிதை, கட்டுரை பேச்சுப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக் கான பரிசில்க ளும் வழங்கப்படவுள்ளன. நன்றியுரையை சமூக சேவை உத்தி யோகத்தர் செ.ஸ்ரீநிவாசன் வழங்குவார். (160)

## வெள்ளக்காடாகியுள்ள நெல்லியடிச்சந்தை

(நெல்லியடி)

கடும் மழை காரணமாக நெல்லியடி மரக்கறிச்சந்தை வெள்ளக்காடாக காட்சியளிக் கின்றது. இதனால் வியாபாரி களும் பொது மக்களும் பல சிரமங்களை எதிர்நோக்குகின்ற னர். சந்தையின் முன்பகுதியில் பல்பொருட்களை விற்பனை செய்யும் பாபு என்பவரின் பொருட்கள் அனைதது்ம் தண்ணீ ரில் நனைந்து நாசமாகியுள்ளது.

இந்நிலையில் சம்பந்தப்பட்ட வர்கள் உடனடியாக நடவ டிக்கை எடுத்து ஆவன செய்யு மாறு வியாபாரிகளும் பொது மக்களும் கோரிக்கைவிடுத்துத் துள்ளனர். (18)

## கால் நடையை அவிழ்க்க விசம் தீண்டியது

(வரணி)

வடக்கு வரணி கறுக்காய் பகுதியில் கடந்த ஞாயிற்றுக் கிழமை மாலை தனது கால் நடைகளை மேய்ச்சல் தரையில் இருந்து வீட்டுக்கு அழைத்துச் சென்ற பெண்ணொருவர் விசக்கடிக்கு ஆளாகியுள்ளார்.

குறித்த பெண் உடனடியாக பருத்தித்துறை ஆதாரவைத்தி யசாலைக்கு கொண்டு செல் லப்பட்டு தற்போது விடுதியில் தங்கி நின்று சிகிச்சை பெற்று வருகின்றார். (150)









சண்டிலிப்பாய் பிரதேச செயலகம் நடாத்திய சர்வதேச முதியோர் மாற்றுவலுவுடையோர் தின விழாவுக்கு வருகை தந்த விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும், சண்டிலிப்பாய் பிரதேச செயலர் எஸ்.முரளிதரன் தலைமையுரை நிகழ்த்துவதையும், முதியோர்கள் ஓட்டப் போட்டிக்குத் தயாராகுவதையும் காணலாம். (104)

# க.பொ.த. (சாதாரணதர) மாதிரி வினாத்தாள்
# G.C.E. (O/L) Examination model Paper

**கணிதம்**    32 | T | I    ஆசிரியர் : T.ஜெயகாந்தன்

## பகுதி I

1) கூட்டுக. $\frac{1}{7} + \frac{2}{7}$

2) 6400 ÷ 1000 சுருக்குக.

3) 6, 3, 2, 3, 7, 8 ஆகாரம் யாது?

4) $\frac{13}{100}$ தசமத்தில் தருக.

5) $x + 1 = 5$ தீர்க்க.

6) சுட்டி விதியைப் பயன்படுத்தி சுருக்குக $x^{'} \times x^5$

7) 24 லீற்றர் எத்தனை மில்லிலீற்றர் ஆகும்.


8) சுருக்குக. $3a + 2 + 5a$

9) $65^0$ நிரப்புகோணம் யாது?

10) $\varepsilon = \{1, 2, 3, 4, 5, 6,7\}$, $A = \{2, 6, 7\}$ எனின், தொடை $A^1$ இன் உறுப்புகளை எழுதுக.

11) ரூபா 600 இன் 8% ஐக் காண்க.

12) $110_{\text{இரண்டு}}$ பத்தின் அடியில் எழுதுக.

13) 

x இன் பெறுமானம் யாது?


14) குறித்த ஒரு வேலையைச் செய்து முடிப்பதற்கு 8 மனிதர்களுக்கு 6 நாட்கள் தேவைப்பட்டது. 12 மனிதர்களுக்கு அவ்வேலையை முடிப்பதற்கு எத்தனை நாட்கள் எடுக்கும்?

15) $1 - \left[\frac{1}{2} + \frac{1}{4}\right]$ சுருக்குக.

16) ரூபா 5000 ஐ 15% எளிய வட்டிக்கு கடனாகப் பெற்ற ஒருவர் மூன்று வருடங்களின் இறுதியில் செலுத்த வேண்டிய வட்டி எவ்வளவு?

17) $\sqrt{8}$ சேடாக மாற்றி எழுதுக.

18) $3^{x-1} = 9$ தீர்க்க

19) 

முக்கோணி ABC இல் $A\hat{C}B = 90^0$ ஆகும். பக்கம் AC இன் நீளத்தைக் காண்க.

20) $(a+b)^2 = a^2 + 2ab + b^2$ எனின், அதனூடாக $(x+3)^2$ இன் விரிவை எழுதுக.

21) நேர்கோட்டின் சமன்பாடு $2x - y - 1 = 0$ ஆகும்.
I இச்சமன்பாட்டை $y = mx + c$ வடிவில் எழுதுக.
II இச்சமன்பாட்டின் படித்திறனை எழுதுக.

22) A இன் வயது 18 ஆகும். B இன் வயது 15 ஆகும். B, A இன் வயதுகளுக்கிடையிலான விகிதத்தை எளிய வடிவில் தருக.

23) $S = a(p+2)$ சூத்திரத்தில் p ஐ எழுவாயாக மாற்றுக.

24) கீழே விஞ்ஞானமுறைக் குறிப்பீட்டில் தரப்பட்டுள்ள எண்ணை சாதாரண முறையில் எழுதுக.
$6.12 \times 10^2$

25) கீழுள்ள எண் பரம்பலில் முதலாம் காலணையைக் காண்க. 4, 9, 7, 10, 2, 5, 8


26) $P = \{a, b, c, d, e, f, g\}$ ஆகும்.
கீழுள்ள இடைவெளிகளுக்குப் பொருத்தமான தொடை குறியீடுகளை இடுக.
i . a ........... P
ii. (a, e) ......................P

27) b= 5, c= -2 எனின், y = b-c சூத்திரத்தில் y இன் பெறுமானம் காண்க.

28) காரணிகளை வேறாக்கி எழுதுக.
$a(x+y) + 2x + 2y$

29) ABC ஒரு முக்கோணியாகும். இம்முக்கோணியின் மூன்று பக்கங்களுக்கும் சமதூரத்தில் அமையும் புள்ளியை அறிய வேண்டியுள்ளது. ஒழுக்க பற்றிய உமது அறிவைப் பயன்படுத்தி புள்ளியைக் காணும் முறையை சுருக்கமாக எழுதுக.

30) உருவில் PQRS செவ்வகமும், QTVR சதுரமுமாகும். PTVS இன் சுற்றளவிற்கான கோவையை a,b இல் எழுதிக் காட்டுக.





## பகுதி B

**1)** வியாபாரி ஒருவன் தான் கொள்வனவு செய்யும் ஒவ்வொரு பொருளிற்கும் 15% இலாபம் வைத்து விலை குறிக்கிறான். உடனடி பணத்திற்கு விற்கும் போது 4% கழிவு கொடுக்கிறான்.

1) ரூ. 100 பெறுமதியான பொருளொன்றிற்காக வியாபாரி எதிர்பார்க்கும் இலாபம் எவ்வளவு?
2) ரூ.500 இற்கு கொள்வனவு செய்த பொருளிற்கு குறித்த விலை யாது?
3) ரூ. 3500 இற்கு கொள்வனவு செய்த பொருளை உடனடி காசுக்கு விற்கும் விலை யாது?
4) நுகர்வோர் ஒருவர் ரூ.8280 செலுத்தி கொள்வனவு செய்த பொருளின் குறித்த விலை யாது?

**02)** தோட்டமொன்றின் பூ பாத்தி உருவில் காட்டப்பட்டுள்ளது. அதன் நீளம் 15 m உம் அகலம் 7 m உம் ஆகும். நிழற்றபபட்ட பகுதியில் புல் வளர்க்கப்பட்டுள்ளதுடன் எஞ்சிய பகுதியில் பூ வளர்க்கப்பட்டுள்ளது. (AP =AQ =BR =BS ஆகும்)




a) QR இன் நீளத்தைக் காண்க.
b) பூ வளர்க்கப்பட்டுள்ள பகுதியின் சுற்றளவைக் காண்க.
c) புல் வளர்க்கப்பட்ட பகுதியின் பரப்பளவைக் காண்க.
d) புல் வளர்க்கப்பட்ட பகுதியில் புல் நட முன்பாக 10 cm ஆழத்திற்கு மண் அகற்றப்பட்டது எனின், அகற்றிய மண்ணின் கனவளவு யாது?

**03)** 6, 10, 14, x, y .......................... என்பது கூட்டல் விருத்தி ஒன்றின் முதல் 5 உறுப்புகளாகும்.


a) x, y இன் பெறுமானம் காண்க.

b) விருத்தியின் பதினைந்தாவது உறுப்பைக் காண்க.

c) முதல் 15 உறுப்புகளின் கூட்டுத்தொகையைக் காண்க.

d) 6, 18 இற்கிடையிலான கூட்டலிடைகள் 2 தருக.

**04)** a தரப்பட்டுள்ள வென் உருவில் $P \cap Q^1$ ஐ நிழற்றுக.





b) கீழுள்ள வெண் உருவை அடிப் படையாகக்கொண்டு,

1) தொடை B ஐ சொற்களில் விபரிக்குக.

2) தொடை A, B இற்கிடையிலான தொடர்பை தொடை குறிப்பீட்டில் தருக.

3) $(A \cap B^1)$ தொடையின் மூலகங் களை எழுதுக.

4) $n(B^1)$ எத்தனை?




*05) 100 இற்கு வழங்கிய வினாப் பத்திரத்திற்கு குறிப்பிட்ட மாணவர்கள் பெற்ற புள்ளிகள் தண்டு இலை வரைபில் காட்டப்பட்டுள்ளது.*

| தண்டு | இலை |
|---|---|
| 1 | 2 3 5 |
| 2 | 1 0 2 |
| 3 | 3 4 |
| 4 | 5 9 |
| 5 | 0 2 |

a) பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கை யாது?

b) மாணவர்கள் பெற்ற புள்ளிகளின் வீச்சு யாது?

c) மாணவர்கள் பெற்ற புள்ளிகளின் இடையைக் காண்க.

d) இக்குழுவில் ஒரு மாணவனை எழுமாறாகத் தெரிவு செய்யும் போது அவன் 50 புள்ளிகளுக்கு மேல் பெற்றவனாக இருப்பதற்கான நிகழ்தகவினைக் காண்க.

## கணிதம் II

### பகுதி B

**01)** மின்சார உபகரணமொன்று உடனடிக் காசுக்கு ரூ. 27, 250 ஆகும். அதற்கு ஆரம்பத்தில் ரூ. 3250 செலுத்தி மீதியை வட்டி உள்ளடங்கலாக சமனான 16 மாதக் கட்டணங்களாக செலுத்திப் பெறலாம். வட்டி வீதம் ஆண்டுக்கு 5% ஆகும்.

a) மீதிக் கடன் பணம் எவ்வளவு?
b) மாதாந்தம் செலுத்தப்படும் கடனின் பகுதி எவ்வளவு?
c) வட்டியுடன் தவணைக் கட்டணம் ஒன்றின் பெறுமதி எவ்வளவு?

**02)** $y = 2x^2 + 4$ எனும் சார்பினை வரைவதற்குரிய பூரணமற்ற அட்டவணை கீழே தரப்பட்டுள்ளது.

| x | -3 | -2 | -1 | 0 | 1 | 2 | 3 |
|---|---|---|---|---|---|---|---|
| y | -14 | -4 | ---- | 4 | ---- | -4 | -4 |

a) i) x = -1, x=1 ஆகும் போது y இன் பெறுமானத்தைக் காண்க.

ii) பொருத்தமான அளவீடுகளைக் கொண்டு சார்பின் வரைபை வரைபு தாளில் வரைக.

b) சார்பு நேராகும் x இன் பெறுமானவீச்சை எழுதுக.

c)

i) மேற்படி வரைபு மீது அமைந்த x ஆள்கூறுகள் y ஆள்கூறுகளி லும் இருமடங்காகும். புள்ளியைக் காண்பதற்கு தேவைப்படும் ஏகபரிமாண வரைபின் சமன்பாட்டினை எழுதுக.

ii) ஏகபரிமாண வரைப்ப மேற்படி ஆள்கூற்றுதளத்தில் வரைக.

iii) அப்புள்ளிகளின் ஆள்கூறுகளை எழுதுக.

**03)** i) தீர்க்க $3a - 4b = 10$

$2a - 3b = 7$

ii) $A = \begin{pmatrix} 1 & 0 & 2 \\ 2 & 1 & 4 \\ 0 & 2 & 1 \end{pmatrix}$ உம் $3A + B = \begin{pmatrix} 2 & 1 & 7 \\ 7 & 3 & 0 \\ 2 & 7 & 2 \end{pmatrix}$ எனின்,


B தாயத்தைக் காண்க.

**04)** a) தீர்க்க $2x + 1 = \frac{6}{x}$

b) பகுதியையும் தொகுதியையும் எழுதுக.


$(2x^2 + x + 3) \div (x + 2)$

**05)** a) பூமிக்கு 50 m உயரத்தில் S புள்ளியிலிருந்து பார்க்கும் போது P, Q புள்ளிகளின் இறக்கக் கோணம் முறையே $18^0$ உம் $12^0$ உம் ஆகும். திரிகோண கணித விகிதங்களையும் மடக்கை அட்டவணையையும் பாவித்து PQ இன் தூரத்தைக் கணிக்க.




b) புவியின் மீது அமைந்த X, Y, Z புள்ளிகளின் அமைவு பின்வருமாறு ஆகும்.
A இற்கு வடக்கில் B அமைந்துள்ளது.
B இலிருந்து C இன் திசைகோள் $220^0$ ஆகும்.
AB = AC ஆகும்.
A இலிருந்து C இன் திசைகோளைக் காண்க.

**06)** கேத்திர கணித உருக்களைப் பயன்படுத்தி செய்த உரு கீழே காட்டப்பட்டுள்ளது. அது O ஐ மையமாகக் கொண்ட இரு ஆரைச் சிறைகளையும் POQ செங்கோண முக்கோணியையும், ABCD செவ்வகத்தினையும் உடையது.




i) $\sqrt{2} = 1.41$ எனக் கொண்டு PQ இன் நீளத்தைக் காண்க.
ii) இவ்வுரு கம்பிகளால் செய்யப்பட்டிருப்பின் தேவைப்பட்ட கம்பியின் நீளத்தைக் காண்க.
iii) இவ்வுருவினால் உள்ளடக்கப்படும் பரப்பளவைக் காண்க.

**07)**
a) கிணறு தோண்டும் ஒருவர் முதல் மீற்றருக்கு ரூ. 350, இரண்டாவது மீற்றருக்கு ரூ. 700, மூன்றாவது மீற்றருக்கு ரூ. 1400 என அறவிடு கின்றார். குறித்த ஒரு கிணறைத் தோண்டியதற்காக அவருக்கு கிடைத்த கூலி ரூ. 22,050 ஆகும். கிணற்றின் ஆழத்தைக் காண்க.

b) மடக்கை அட்டவணையை உபயோகித்து பெறுமானம் காண்க.

$$\frac{6.071 \times 1.25^2}{\sqrt{0.072}}$$


**08)**
cm / mm அளவிடை, கவராயம் மாத்திரம் பயன்படுத்தி
a) AB =7cm, $A\hat{B}C = 60^0$, $B\hat{A}D = 75^0$ உடைய $\Delta$ ABD அமைக்க.
b)i) BAD இன் இருசமகூறாக்கியை வரைக
ii) BC =7 cm ஆகுமாறு நாற்பக்கல் ABCD ஐ பூரணப்படுத்துக.
c) i) C ஊடாக DB இற்கு சமாந்தரம் ஒன்றை அமைக்க. அதனை நீட்டும் போது அது AB ஐ சந்திக்கும் புள்ளியை P என பெயரிடுக.
ii) ADP $\Delta$ உம் நாற்பக்கல் ABCD உம் பரப்பளவில் சமனாகும் எனக் காட்டுக.

**09)**
தொடர்பாடல் நிலையமொன்றில் குறிப்பிட்ட கால எல்லையினுள் கிடைத்த இலாபம் கீழே தரப்பட்டுள்ளது.

| வருமானம் (ரூ) | 360 | 380 | 400 | 420 | 440 | 460 | 480 | 500 |
|---|---|---|---|---|---|---|---|---|
| நாட்களின் எ.கை | 02 | 06 | 10 | 12 | 13 | 09 | 05 | 03 |


**a)** மேற்படி தரவுகளின்
i) ஆகாரம்
ii) இடைக்கோணம் என்பவற்றை கர்ண்க.
c) மேற்படி கால எல்லையினுள் எழுமாறாகத் தெரிவு செய்த நாள் ஒன்று ரூ. 400 இற்கு மேல் வருமானம் கிடைக்கும் நாளாக இருப்பதற்கான நிகழ்தகவினைக் காண்க.

**10)** உருவில் காட்டப்படுருக்கும் வட்டத்தின் மையம் O ஆகும்.




i) இங்குள்ள வட்ட நாற்பக்கல் இரண்டினைப் பெயரிடுக.
ii) $A\hat{B}D$, $A\hat{E}D$ இற்கிடையிலான தொடர்பை எழுதுக. காரணம் குறிப்பிடுக.
iii) $D\hat{E}F$ இற்கு சமனான கோணங்கள் இரண்டு எழுதுக.
iv) $A\hat{C}D = 70^0$ எனின், $A\hat{O}D$ இன் பெறுமானம் காண்க.
v) $A\hat{B}D = D\hat{E}F$ என முறையாக நிறுவுக.

# நாட்டில் இலஞ்சமும், ஊழலும் புற்றுநோய் போல் பரவுகிறது



(மங்களூர்)

நாட்டில் இலஞ்சம், ஊழல் புற்றுநோய் போல் பரவி வருகிறது என்று சோனியா காந்தி தெரிவித்தார். கர்நாடகா மாநிலம் மங்களூரில் காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி நேற்று முன்தினம் தசரா விழாவைத் தொடங்கி வைத்தார். பின்னர், நேரு மைதானத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் அவர் பேசியதாவது: சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலை பரலுக்கு 140 டொலர் உயர்ந்தது. எனவேதான் பெற்றோலிய பொருட்களின் விலை உயர்த்த வேண்டிய நிலை ஏற்பட்டது.

காஸ் சிலிண்டரை பொறுத்த வரை டில்லியில் மானிய விலையில் 6 சிலிண்டர்கள் வழங்கப்படுகின்றன. அம் மாநில காங்கிரஸ் அரசு 3 சிலிண்டர்களுக்கு மானியம் வழங்குவதால் பொதுமக்களுக்கு 9 சிலிண்டர் மானிய விலையில் கிடைக்கிறது. இந்த வழிமுறையை மற்ற மாநில அரசுகளும் பின்பற்றினால், பொதுமக்களுக்கு மானிய விலையில் 9 சிலிண்டர் கிடைக்கும். பெற்றோலிய பொருட்கள் விலை கட்டுப்படுத்துவது மத்திய அரசின் கையில் இல்லை.

நாட்டில் இலஞ்சம், ஊழல் புற்றுநோய் போல் பரவி வருகிறது. ஊழலுக்கு எதிராக காங்கிரஸை போல் மற்ற கட்சிகள் எதுவும் நடவடிக்கை எடுத்ததில்லை. ஊழலைத் தடுப்பதற்காக மத்திய அரசு கொண்டு வந்துள்ள லோக்பால் மசோதாவை நாடாளுமன்றத்தில் நிறைவேற்ற விடாமல் பா.ஜ தடுக்கிறது.

கர்நாடக மாநில வளர்ச்சிக்காக மத்திய அரசு ரூபா 80 ஆயிரம் கோடி வழங்கியுள்ளது. அதில் நடத்தப்பட்ட வளர்ச்சிப் பணிகள் என்னென்ன என்பது குறித்து மாநில அரசு தெரிவிக்க வேண்டும். பொய்யான வாக்குறுதி கொடுத்து ஆட்சிக்கு வந்துள்ள பா.ஜ. கடந்த 4 ஆண்டுகளாக எந்த வளர்ச்சிப் பணியையும் செய்யவில்லை. மத்திய அரசை குறைகூறுவதையே வாடிக்கையாக வைத்துள்ளது. இவ்வாறு சோனியாகாந்தி தெரிவித்தார்.





# ஸ்பெக்ட்ரம் ஏலத்தில் பங்கேற்க விண்ணப்பம்

(புதுடில்லி)

பார்தி ஏர்டெல், வோடாபோன், டாடா டெலி சர்வீஸ் உள்ளிட்ட நிறுவனங்கள், ஸ்பெக்ட்ரம் ஏலத்தில் பங்கேற்பதற்காக விண்ணப்பித்துள்ளன. "2ஜி" ஸ்பெக்ட்ரம் ஒதுக்கீடு வழங்குவதில், பெரும் ஊழல் நடந்ததாக புகார் எழுந்ததை அடுத்து, இதுகுறித்து சி.பி.ஐ. விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

இது தொடர்பாக உச்சநீதிமன்றில் நடந்த விசாரணையின்போது, விதிமுறைகள் மீறப்பட்டதாகக் கூறி தொலைத் தொடர்பு நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட 122 உரிமங்கள் இரத்துச் செய்யப்பட்டன. யூனிநார் வீடியோகான், லூப், ஐடியா உள்ளிட்ட நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட உரிமங்கள் இதில் இரத்தாயின. இரத்து செய்யப்பட்ட உரிமங்களுக்கு பதிலாக புதிய உரிமங்கள் வழங்குவதற்கு, அடுத்த மாதம், 12 முதல் ஏல நடவடிக்கைகள் தொடங்குகின்றன. இதில் பங்கேற்பதற்காக, பார்தி ஏர்டெல், வோடபோன் ஐடியா செல்லுலர் டெலிநார், டாடா டெலிசர்வீஸ் உள் ளிட்ட நிறுவனங்கள், மத்திய தொலைத் தொடர்பு துறையிடம் விண்ணப்பித்துள்ளதாக, தகவல் வெளியாகியுள்ளது.

# அவதூறு வழக்கு; நீதிமன்றம் தடை



(சென்னை)

தி.மு.க தலைவர் கருணாநிதி மீது தொடரப்பட்ட அவதூறு வழக்கு விசாரணைக்கு உயர் நீதிமன்றம் தடை விதித்துள்ளது. கடந்த ஓகஸ்ட் 4ஆம் திகதி முரசொலி நாளிதழில், கோத்தகிரியில் ஒரு குடம் தண்ணீர் ரூபா 5 என்று புகைப்படத்துடன் நாளேடு ஒன்று செய்தி வெளியிட்டுள்ளதே என்ற கேள்வியும், அதற்கு தி.மு.க தலைவர் கருணாநிதி அளித்த பதிலில் கோத்தகிரியில் தண்ணீர் பஞ்சத்தை போக்குவது பற்றி, கோட நாட்டில் முதலமைச்சர் ஆய்வு நடத்துகிறார் என்றும் அரசின் சார்பில் புதிய அறிவிப்பு ஒன்றினை செய்யலாமே என்றும் கூறப்பட்டுள்ளது. இந்த செய்தி தமிழக முதல்வரின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தும் வகையில் உள்ளது. எனவே, இந்தச் செய்தியை வெளியிட்ட முரசொலி நாளிதழின் பதிப்பாளர் மற்றும் வெளியீட்டாளர் முரசொலி செல்வம், தி.மு.க தலைவர் கருணாநிதி ஆகியோர் மீது அவதூறு பரப்புதல் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரி மாநகர அரசு வக்கீல் எம்.எல்.ஜெகன் செஷன்ஸ் நீதிமன்றத்தில் ஓகஸ்ட் 30ஆம் திகதி ஒரு மனு தாக்கல் செய்தார்.

இந்த மனுவை விசாரித்த முதன்மை செஷன்ஸ் நீதிபதி கலையரசன் ஒக்ரோபர் 10ஆம் திகதி தி.மு.க தலைவர் கருணாநிதி மற்றும் முரசொலி ஆசிரியர் செல்வம் ஆகியோர் நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு கட்டளை அனுப்ப உத்தரவிட்டார்.

இந்நிலையில், இந்த வழக்கின் விசாரணைக்கு தடை விதிக்க வேண்டும் எனக்கோரி தி.மு.க தலைவர் கருணாநிதி மற்றும் முரசொலி செல்வம் ஆகியோர் சார்பில் உயர் நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்யப்பட்டது. இந்த வழக்கு நீதிபதி பால்வசந்தகுமார் முன்னிலையில் நேற்று முன்தினம் விசாரணைக்கு வந்தது. சட்டத்தரணி குமரேசன் ஆஜராகி, தி.மு.க தலைவர் கருணாநிதி மீது தொடரப்பட்ட வழக்கு அரசியல் உள்நோக்கத்துடன் உள்ளது. எனவே, இந்த வழக்கு விசாரணைக்கும் வழக்கு தொடர்பான அரசாணைக்கும் தடை விதிக்க வேண்டும் என்று வாதிட்டார். இதையடுத்து, கருணாநிதி, முரசொலி செல்வம் ஆகியோர் மீதான இந்த வழக்குக்கு நீதிபதி தடை விதித்தார்.

# இந்தியன் திரைப்படவிழாவில் "வாகை சூட வா" தெரிவு

(சென்னை)




43ஆவது இந்திய சர்வதேச திரைப்பட விழா அடுத்த மாதம் கோவாவில் நடக்கிறது. இதில் இந்தியன் பனோரமாவில் திரையிட தமிழில் இருந்து "வாகை சூட வா" படம் தேர்வாகி இருக்கிறது. இந்திய சர்வதேச திரைப்பட விழா ஒவ்வொரு வருடமும் கோவாவில் நடக்கும். இந்த வருடத்துக்கான விழா அடுத்த மாதம் தொடங்குகிறது.

இதில் இந்தியன் பனோரமா பிரிவில் திரையிடப்படும் படங்களை, இயக்குனர்கள் சுரேஷ் கிருஷ்ணா, சிபி மலையில் அஜய் சர்மா உள்ளிட்ட பத்து பேர் கொண்ட குழு 20 படங்களை தேர்வு செய்துள்ளது. தமிழில் இருந்து விமல், இனியா நடிப்பில் சற்குணம் இயக்கிய "வாகை சூட வா" படம் தேர்வாகி உள்ளது. சற்குணம் கூறும்போது, "வாகை சூட வா" பல விருதுகளை பெற்றுள்ளது. இந்தியன் பனோரமாவுக்கு தேர்வு பெற்றதில் மகிழ்ச்சி. இன்னும் பல விருதுகளை இந்த படம் பெறும் என நம்புகிறேன் என்றார்.

# தமிழகத்தில் கனமழை; இருநாட்களில் 16 பேர் பலி


(சென்னை)

தென்மேற்கு மற்றும் மேற்கு மத்திய வங்கக் கடலில் இலங்கை, தமிழகம், தெற்கு ஆந்திரா எல்லைக்கு அப்பால் நகர்ந்து, காற்றழுத்தத் தாழ்வு தீவிரமடைந்து வருகிறது. இதன் காரணமாக, தமிழகம்மற்றும் புதுச்சேரியில், அடுத்த இரு தினங்களுக்கு கனமழை பெய்யக்கூடும்.மழை காரணமாக, சென்னை,காஞ்சிபுரம், திருவள்ளூர், விழுப்புரம் உள்ளிட்ட மாவட்டங்களில் உள்ள பாடசாலை மற்றும் கல்லூரிகளுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது. தமிழகம் முழுவதும், இரு தினங்களில் மழைக்கு 16 பேர் 'பலியாகியுள்ளமை' குறிப்பிடத்தக்கது.




# கூடங்குளத்தை திறக்க அரசு ஒத்துழைக்க வேண்டும்

(திருச்சி)



மின்வெட்டுக்கு காரணம் என்ன, யார் என்பதை தமிழக மக்கள் அறிந்து, எடை போட்டு வைத்துள்ளனர். கூடங்குளம் திறக்க, மத்திய அரசுக்கு, தமிழக அரசு ஒத்துழைக்க வேண்டும், என, மத்திய அமைச்சர் வாசன் கூறினார். மத்திய கப்பல் போக்குவரத்துத்துறை அமைச்சர் வாசன் நேற்று முன்தினம் திருச்சி வந்தார். சமீபத்தில் மறைந்த முன்னாள் எம்.பி. அடைக்கலராஜ் வீட்டுக்கு நேரில் சென்ற வாசன், அவரது உருவப்படத்துக்கு மாலை அணிவித்து, மரியாதை செலுத்தினார்.பின் அவர் நிருபர்களிடம் கூறியதாவது: தமிழகத்தில் மின் பற்றாக்குறை முதன்மைப் பிரச்சினையாக உள்ளது.

இதை அனைத்து தரப்பு மக்களும், 100 சதவீதம் உணர்ந்துள்ளனர். எனவே, கூடங்குளம் அணுமின் நிலைய எதிர்ப்பாளர்கள் உண்மை நிலையைப் புரிந்து கொண்டு, போராட்டத்தைக் கைவிட வேண்டும்.தமிழகத்தில் தடையில்லா மின்சாரம் கிடைக்க, கூடங்குளம் அணு உலை எந்த அளவுக்கு முக்கியம் என, மத்திய அரசு அப்பகுதி மக்களுக்கும், தமிழக மக்களுக்கும் விளக்கம் அளித்து வருகிறது. தமிழக அரசும், பிற கட்சியினர் மற்றும் பல்வேறு அமைப்பினரும் இதற்கு ஒத்துழைப்பு கொடுக்க வேண்டும். தமிழகத்தில் கூடங்குளம் அணு உலையை திறக்கவும், மின்வெட்டை போக்கவும் மத்திய அரசுக்கு மாநில அரசு துணை நிற்க வேண்டும்.

மின்வெட்டுக்கு காரணம் என்ன? காரணமானவர்கள் யார்? என்பதை தமிழக மக்கள் நன்கு அறிந்து, எடை போட்டு வைத்துள்ளனர்.சேது சமுத்திர திட்டம், தென் மாவட்ட மக்களின் நீண்ட கால கனவு. நாட்டின் பொருளாதாரத்தை உயர்த்தும் திட்டம். இத்திட்டத்தை தடுக்க சிலர் முயற்சிக்கின்றனர். இது தொடர்பான வழக்கில், உச்சநீதிமன்றத்தில் நல்ல தீர்ப்பு வரும் என்ற நம்பிக்கை உள்ளது.இவ்வாறு அவர் கூறினார்.

# தென்கொரியாவை தாக்குவோம்; வடகொரியா கடும் எச்சரிக்கை

வடகொரிய இராணுவம் தென்கொரியாவில் தாக்குதல் நடத்தப் போவதாக மிரட்டல் விடுத்திருப்பதால் அந்தப் பிராந்தியத்தில் பதற்றம் ஏற்பட்டுள்ளது. இது பற்றி வட கொரிய இராணுவம் நேற்று முன்தினம் வெளியிட்ட அறிக்கையில் எவ்வித முன்னெச்சரிக்கையும் இல்லாமல் தென்கொரியா மீது தாக்குதல் நடத்தத் தயாராக உள்ளோம்.

வடகொரியாவில் இருந்து சென்று தென்கொரிய எல்லைப் பகுதியில் வசிக்கும் மக்கள், எங்களுக்கு எதிராக பலூன்களை பறக்கவிட்டு போராட்டம் நடத்த திட்டமிட்டுள்ளனர். அவர்கள் அங்கிருந்து வெளியேறி விடவேண்டும். இல்லாவிட்டால் தாக்குதலில் மோசமான விளைவுகள் ஏற்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கு முன்னர் வடகொரிய தரப்பில் விடப்பட்ட மிரட்டல்களில் எந்த இடத்தில் தாக்குவோம், என்பது குறித்து நேரம் குறிப்பிட்டதில்லை. ஆனால் நாளை முதல் தென்கொரியாவின் பஜு நகரின் அருகே எல்லைப் பகுதியில் தாக்குதல் நடத்த இருப்பதாக வடகொரியா தெரிவித்துள்ளது.

இதன்பின்னர், தென்கொரிய அதிபர் லீ மையுங்-பக், எல்லைப் பகுதிக்குச் சென்று திடீரென ஆய்வு செய்தார். அப்போது அவர் இராணுவ வீரர்கள் மத்தியில் பேசுகையில் வடகொரியாவின் எந்தவித தாக்குதலையும் சந்திக்கத் தயாராவோம். உயிரைக் கொடுத்தாவது நமது எல்லையைப் பாதுகாப்போம் என்றார் இதே வேளை எதிர்வரும் 25ஆம் திகதி முதல் தென்கொரிய இராணுவ வீரர்கள், 500 அமெரிக்க இராணுவ வீரர்களுடன் இணைந்து பயிற்சியைத் தொடங்க உள்ளனர். என்பது குறிப்பிடத்தக்கது.

# ஐரோப்பிய யூனியனில் வங்கிக் கண்காணிப்பு அமைப்பு

ஐரோப்பிய நாடுகளில் உள்ள வங்கிகளைக் கண்காணிக்கும் அமைப்பு ஒன்றை அடுத்த ஆண்டில் ஏற்படுத்துவது என்று ஐரோப்பிய யூனியன் தலைவர்கள் உடன்பாடு செய்துள்ளனர்.


ஐரோப்பிய யூனியனில் 27 நாடுகள் இடம்பெற்றுள்ளன. இந்த அமைப்பின் உச்சி மாநாடு பிரஸல்ஸ் நகரில் கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பமாகியது. இதற்கு முன்பாக, இந்த நாடுகளின் தலைவர்கள் வியாழக்கிழமை இரவு கூடி ஐரோப்பிய மண்டலத்தில் உள்ள சுமார் 6,000 வங்கிகளை ஒரே குடையின் கீழ் கொண்டு வருவது பற்றி விவாதித்தனர். அப்போது, இந்த வங்கிகளைக் கண்காணிக்கும் அமைப்பு ஒன்றை அடுத்த ஆண்டில் ஏற்படுத்துவது என்று ஒப்புக் கொண்டு, அமைப்பின் தலைவர்கள் உடன்பாடு செய்து கொண்டனர்.

பிராங்க்பர்ட் நகரில் உள்ள ஐரோப்பிய மத்திய வங்கியின் தலைமையில் இந்த அமைப்பு செயற்படும். வங்கி ரீதியிலான நெருக்கடிகளையும், நாடுகளின் எல்லை தாண்டி நிதி நெருக்கடி பரவுவதையும் தடுக்கும் நோக்கில் இந்த அமைப்பு உருவாக்கப்பட உள்ளது.

ஸ்திரமான பொருளாதார மற்றும் நிதிக் கூட்டமைப்பை நோக்கிய முக்கிய நடவடிக்கை இதுவாகும். ஐரோப்பிய நாடுகள் கடும் பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ள நிலையில், வங்கிக் கண்காணிப்பு அமைப்பு உருவாக்கப்பட உள்ளமை குறிப்பிடத்தக்கது.

## உலகச் செய்திகள்

# தற்கொலைப்படை தாக்குதல்; ஏமனில் 33 பேர் உயிரிழப்பு



ஏமனில் இடம்பெற்ற தற்கொலைத்தாக்குதலில் 33பேர் பலியாகியுள்ளனர். ஏமன் நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடியைப் பயன்படுத்தி கடந்த ஆண்டு தெற்கு பகுதியில் அபியான் மாகாணத்தில் உள்ள முக்கிய நகரை தீவிரவாதிகள் கைப்பற்றினர். அதன் பின்னர் அங்கிருந்து தாக்குதல் நடத்தி வருகின்றனர்.


எண்ணெய் வளம் மிகுந்த இப்பகுதியில் தீவிரவாதிகள் ஆதிக்கம் செலுத்தி வருவது வளைகுடா நாடுகள் மற்றும் அமெரிக்காவுக்கு கவலையை ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில் ஏமனில் கடந்த சில வாரங்களாக வன்முறை தீவிரம் அடைந்துள்ளது. குறிப்பாக இராணுவ தளங்களை குறிவைத்து தீவிரவாதிகள் தாக்குதல்கள் நடத்தி வருகின்றனர். இதனால், தீவிரவாதிகள் இருப்பதாக சந்தேகிக்கப்படும் பகுதியில் அமெரிக்கா ஆளில்லா விமானம் மூலம் தாக்குதல் நடத்தி வருகிறது. அந்த வகையில் நேற்று அமெரிக்கா நடத்திய விமான தாக்குதலில் 9 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர்.

இந்நிலையில் நேற்று ஏமனின் தெற்கு பகுதியில் உள்ள அபியான் மாகாணத்தில் இராணுவ வீரர்கள் போன்று உடையணிந்த தற்கொலைப்படை தீவிரவாதிகள் 2 பேர், வெடிகுண்டு நிரப்பிய காரில் வந்து இராணுவ முகாம் மீது மோதி வெடிக்கச் செய்தனர்.

இத்தாக்குதலில் அந்த இரு தீவிரவாதிகள் மற்றும் 10 இராணுவ வீரர்கள் கொல்லப்பட்டனர். மேலும் 15 வீரர்கள் காயமடைந்தனர். இச்சம்பவம் நடந்த சிறிது நேரத்தில், 11 பேர் கொண்ட ஒரு தீவிரவாத கும்பல் கடல் மார்க்கமாக வந்து, இராணுவத்தினரை நோக்கி தாக்குதல் நடத்தினர். அப்போது நடந்த கடும் சண்டையில் 11 தீவிரவாதிகளும், 3 இராணுவத்தினரும் பலியாகினர். தாக்குதல் நடத்தி இறந்த தீவிரவாதிகள் அனைவரும் அல்கொய்தா அமைப்பைச் சேர்ந்தவர்களாக இருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகிறது.


# உலக மக்கள் தொகைக்கு இணையாக கைத்தொலைபேசிகள்



(ஜெனிவா)

உலக மக்கள் தொகைக்குச்சமமாக, கைத்தொலைபேசிகளின் எண்ணிக்கை உள்ளதாக ஐ.நா.தொலை தொடர்பு முகவர் நிலையம் தெரிவிக்கிறது.ஐ.நா. தொலை தொடர்பு முகவர் நிலையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டிருந்தாவது:கடந்த ஆண்டு வரை, 600 கோடி கைத்தொலைபேசிகளுக்காக சந்தா செலுத்தப்பட்டுள்ளது. அதாவது, 100ல், 86 பேர் கைத்தொலைபேசி சந்தாதாரர்களாக இருந்துள்ளனர்.இதில், சீனாவில் மட்டும், 100 கோடி சந்தாக்கள் செலுத்தப்பட்டுள்ளன. இந்த ஆண்டு முடிவில், இந்தியாவும் அந்த எண்ணிக்கையைத் தொட்டு விடும் என, எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த ஆண்டு, உலகில் உள்ள, 700 கோடி மக்களில், 230 கோடி பேர், இணையதளத்தை பயன்படுத்தினர். ஆனால், பணக்கார நாடுகளுக்கும், வளர்ந்து வரும் நாடுகளுக்கும், நிறைய இடைவெளி இருக்கிறது.இணையதளத்தைப் பயன்படுத்துபவர்களில், 70 சதவீதம் பேர் தொழில் வளர்ச்சி அடைந்த, பணக்கார நாடுகளைச் சேர்ந்தவர்களாக இருக்கும் நிலையில், வளர்ந்து வரும் நாடுகளில், இணையதளத்தைப் பயன்படுத்துவோர், வெறும், 24 சதவீதம் பேர் மட்டுமே.ஆகும் என அதில் கூறப்பட்டிருந்தது.



# காற்று மற்றும் நீரிலிருந்து பெற்றோல் தயாரிப்பு

(லண்டன்)

இங்கிலாந்தில், ஏ.எப்.எஸ் என்னும் நிறுவனத்தில் பணிபுரியும் பொறியியலாளர்கள் காற்று மற்றும் நீரிலிருந்து பெற்றோல் தயாரித்து சாதனை படைத்துள்ளனர். கடந்த மூன்று மாதங்களில் காற்று மற்றும் நீரிலிருந்து, அவர்கள் சுமார் ஐந்து லீட்டர் அளவுக்கு பெட்ரோல் தயாரித்துள்ளனர்.


காற்றிலிருந்து காபனையும், நீரிலிருந்து ஹைட்ரஜினையும் பிரித்தெடுத்த அவர்கள், காபன், ஹைட்ரஜினை உலையில் இட்டு, மெத்தனால் தயாரித்துள்ளனர். பின்னர் மெத்தனாலிலிருந்து பெற்றோல் தயாரித்துள்ளனர்.

இது செயற்கை முறை என்பதால் இவ்வகையில் தயாரிக்கப்படும் பெற்றோல் தூய்மையாக இருக்கும் எனவும், இதனால் காற்று மாசுபடுவதைத் தடுக்க முடியும் எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். ஆனால் இவ்வகை பெற்றோலின் விலை சாதாரண விலையை விட அதிகமாக இருக்கும் எனவும் பொறியியலாளர்கள் கூறினர். அடுத்த இரண்டு வருடங்களில் இதற்காக ஆலை ஒன்றை நிறுவப் போவதாகவும், அதன்மூலம் ஒரு நாளைக்கு 1200 லீட்டர் அளவுக்கு பெறறோல் தயாரிக்கப் போவதாகவும் அவர்கள் கூறினர்.




திபெத்தில் நடைபெறும் கலாசார படுகொலையைக் கண்டித்து, சுவிட்சர்லாந்தில் வாழும் திபெத்தியர்கள், ஜெனீவா நகரில் உள்ள ஐக்கிய நாடுகள் அமைப்பின் ஐரோப்பிய தலைமையகம் முன்பு ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளனர்.

# நோபல் பரிசைப் பெறுவதில் சர்ச்சை



(பிரசல்ஸ்)

அமைதிக்கான நோபல் பரிசை, ஐரோப்பிய யூனியனில் உள்ள நாடுகளின் தலைவர்கள், ஒன்று சேர்ந்து பெற்று கொள்ள வேண்டும்" என, வற்புறுத்தப்பட்டுள்ளது. அமைதிக்கான நோபல் பரிசு, இந்த ஆண்டு, ஐரோப்பிய யூனியனுக்கு, அறிவிக்கப்பட்டுள்ளது. இரண்டாம் உலகப் போரின் போது, சண்டை போட்ட நாடுகள், தற்போது ஒன்றிணைந்து அமைதியாக இருப்பதைப் பாராட்டி, 27 நாடுகள் கொண்ட ஐரோப்பிய யூனியனுக்கு, இந்த அமைதி விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

ஐரோப்பாவில் 44 நாடுகள் உள்ளன. ஐரோப்பிய யூனியனில் இல்லாத நாடுகள், இந்த விருதுக்கு கண்டனம் தெரிவித்துள்ளன. ஐரோப்பாவில் உள்ள பெரும்பாலான நாடுகள் இன்று பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்கின்றன. நோபல் பரிசை நேரில் யார் சென்று பெறுவது, பரிசு பணத்தை பிரித்து கொள்வது உள்ளிட்டவற்றில் சிக்கல் நிலவுகிறது.

ஐரோப்பிய யூனியனின் தலைவர், வான் ராம்பி, "நேரில் சென்று இந்தப் பரிசை பெற்றுக் கொள்வார் என, பிரான்ஸ் மற்றும் ஜெர்மன் அதிபர்கள் தெரிவித்திருந்தனர்."நம்மை மதித்து அளித்துள்ள இந்த பரிசை, ஐரோப்பிய யூனியன் தலைவர்கள் அனைவரும், ஒன்று சேர்ந்து பெற வேண்டும்" என, ராம்பி வற்புறுத்தியுள்ளார். நோபல் பரிசை, ராம்பி பெற்றுக் கொண்டால், யார் ஏற்புரை நிகழ்த்துவது என்பதில், தற்போது சர்ச்சை நிலவுகிறது. நோபல் பரிசை உருவாக்கிய, ஆல்ப்ரெட் நோபலின், நினைவு தினமான, டிசம்பர், 10ம் தேதி,நோபல் பரிசு வழங்கப்பட உள்ளது

# இறுதிப் போரில் ஐ.நா. பங்கு என்ன? வெளிவர மறுக்கும் உண்மைகள்

## இன்னர் சிட்டிபிரஸ் போர்க்கொடி

(கொழும்பு)

புலிகளுடனான இறுதி யுத்தம் இடம்பெற்ற காலப்பகுதியில் ஐ.நா. சபையின் வகிபாகம் எவ்வாறு இருந்தது என்பது குறித்த அறிக்கை தயாரிப்பதில் தாமதம் ஏற்படுவதன் காரணம் என்ன என்பது குறித்து இன்னர் சிட்டி பிரஸ் ஊடகம் கேள்வி எழுப்பியுள்ளது.

வன்னியில் இறுதி யுத்தம் இடம்பெற்ற காலப்பகுதியில் ஐக்கிய நாடுகள் சபையின் செயற்பாடுகள் குறித்து ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட குழு தமது அறிக்கையை எப்போது சமர்ப்பிக்கும் என்று மேலும் பல தரப்புக்கள் எதிர்பார்ப்புடன் உள்ளனர்.

நேற்று முன்தினம் ஐக்கிய நாடுகளின் தலைமையகத்தில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின் போது இது தொடர்பீல் வினவப்பட்டுள்ளது.

இறுதி யுத்தகாலத்தில் ஐக்கிய நாடுகளின் செயற்பாடுகள் குறித்து ஆராய்வதற்கான பொறுப்புகள், 2011 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம், ஐக்கிய நாடுகளின் பொதுச் செயலாளரால், தொராயா ஒபாய்ட் என்பவருக்கு வழங்கப்பட்டது.

எனினும் ஒன்பது மாதங்கள் வரையில் அவர் அறிக்கையினை சமர்ப்பிக்காததைத் தொடர்ந்து, ஐக்கிய நாடுகள் சபையில் சிரேஷ்ட உறுப்பினராக இருந்து பதவி விலகிய சார்ள்ஸ் பெற்றியிடம் இந்தப் பொறுப்புகள் வழங்கப்பட்டிருந்தன. அவரும் இன்னும் எந்த அறிக்கையையும் சமர்ப்பிக்கவில்லை. இந்த நிலையிலேயே இன்னர் சிட்டி பிரஸ் இந்தக் கேளவியை எழுப்பியது. எனினும் இதற்கு ஐக்கிய நாடுகள் சபைத் தரப்பில் பதில் எதுவும் இதுவரை வழங்கப்படவில்லை.



கிழக்கில் மீன் இனங்களின் படையெடுப்பு

# புலம்பெயர் தமிழர் தரப்பை பேச்சுக்கு அழைக்கிறது அரசு

நாட்டில் இனங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கும் இதனூடாக இனப்பிரச்சினைக்குத் தீர்வை எட்டுவதற்காகவும் புலம்பெயர தமிழர் தரப்புடன் அரசு பேச்சுவார்ததைகளை ஆரம்பிக்கவிருக்கிறது. இப்பேச்சுக்களுக்கான பூர்வாங்க ஏற்பாடுகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

இனங்களுக்கிடையில் நம்பிக்கையைக் கட்டி வளர்க்க உதவும் என்ற நம்பிக்கையுடன் ஆரம்பிக்கப்பட விருக்கும் இப்பேச்சுக்களின் போது அரச தரப்புக்கு ஜனாதிபதி தலமை தாங்குவார் என்று அரச தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

புலம்பெயர் தமிழர்களுடன் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கும் ஆரம்பகட்ட பணிகள் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டுள்ளதாக ஊடக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார். திட்டமிட்டவாறு புலம்பெயர் தமிழர்களுடன் தொடர்புகள் ஏற்படுத்தப்பட்டால் வெகுவிரைவில் கொழும்பில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் பேச்சுவார்த்தைகள் நடத்தப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

மிக நீண்ட காலமாக நிலவிவரும் நம்பிக்கையின்மையைக் களைய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார். விடுதலைப் புலிகள் போன்ற அமைப்புக்கள் உருவாவதற்கு ஏதுவாக அமைந்த காரணிகள் தொடர்பில் புலம்பெயர் தமிழர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தப்படும் எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்கப்படாவிட்டால் இன்னும் ஒரு தசாப்த காலத்தில் மீண்டும் யுத்தம் ஏற்படக் கூடிய அபாயம் காணப்படுகின்றது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# ஆசிரியர் இடமாற்றம் மீளாய்வுக்கு வலியுறுத்தல்

யாழ்பபாணம் வடமராட்சி, தென்மராட்சி ஆகிய கல்வி வலயங்களில் இருந்து வன்னி மாவட்டத்திற்கு இடமாற்றம் பெறுகின்ற ஆசிரியர்கள் நேற்றுக் காலை 10 மணியளவில் யாழ். சன்மார்க்க மகாவித்தியாலயத்தில் வடமாகாண கல்வி அபிவிருத்திக் குழு பிரதிநிதிகளைச் சந்தித்து தங்களுடைய இடமாற்றம் தொடர்பாகக் கலந்துரையாடினர். சுமார் 50 ஆசிரியர்கள் தங்களுடைய மேல்முறையீடு பிரதிகளைச் சமர்ப்பித்து இந்த இடமாற்றப் பட்டியலில் காணப்படுகின்ற குறைபாடுகளைச் சுட்டிக்காட்டினர். அதில் பின்வரும் குறைபாடுகள் ஆதாரபூர்வமாக வடமாகாண கல்வி அபிவிருத்திக் குழு பிரதிநிதிகளிடம் எடுத்துக்காட்டப்பட்டன. ஆங்கில மொழி மூல கணித விஞ்ஞான ஆசிரியர்கள் இடமாற்றம் பெறல், ஏற்கனவே கஷ்டப்பிரதேச சேவை முடித்த ஆசிரியர்கள் இடமாற்றம் பெற்றுள்ளனர். ஏற்கனவே இடமாற்றம் பெற்று தகுந்த காரணங்களுடன் இடமாற்றம் இரத்துச் செய்யப்படட் ஆசிரியர்கள் இடமாற்றம் பெற்றுள்ளனர்.

## தரமற்ற...

நடத்தவும் அத்தகைய இயந்திரங்களுக்கான அனுமதிப்பத்திரங்களை இரத்து செய்யவும் நடவடிக்கை எடுத்துள்ளதாக இலங்கை அணுசக்தி அதிகார சபை கூறுகிறது.

நாட்டில் சுமார் 615 எக்ஸ்-ரே மற்றும் சீ.ரீ. ஸ்கேன் என்ஜியோகிராம் போன்ற அணு தொழில்நுட்பத்துடன் கூடிய இயந்திரங்களுக்கு அணு சக்தி அதிகார சபை அனுமதிப்பத்திரம் வழங்கியுள்ளது.

இவற்றினூடாக வழங்கப்படும் எக்ஸ்-ரே படங்கள் மற்றும் பெறுபேறுகள் தொடர்பில் குறைபாடுகள் இருந்தால் தங்களிடம் முறையிடுமாறு கோரியுள்ள அணு சக்தி அதிகார சபை இந்த வருடத்தில் மாத்திரம் தாம் சுமார் 20 இயந்திரங்களின் அனுமதிப்பத்திரங்களை இரத்து செய்துள்ளதாகவும் குறிப்பிட்டது. அரச மற்றும் தனியார் ஆஸ்பத்திரிகள் தனியார் சிகிச்சை முகாம்கள் என்பவற்றில் பயன்படுத்தப்படும் அணுசக்தி தொழில் நுட்பத்துடன் கூடிய உபகரணங்களுக்கு இரண்டு வருட காலத்திற்கு அனுமதிப்பத்திரம் வழங்கப்படுகிறது.

இவற்றின் செயற்பாடுகள் குறித்து அணுசக்தி அதிகார சபை திடீர் பரிசோதனைகள் நடத்தி வருவதாக கூறிய அதிகார சபை சிரேஷ்ட பிரதிப் பணிப்பாளர் அனில் ரஞ்சித் தெரிவித்தார்.

தரம் குறைந்த இயந்திரங்கள் தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுப்பதாகவும் அவர் குறிப்பிட்டார். புதிதாக இத்தகைய இயந்திரங்கள் நாட்டுக்கு தருவிக்கப்படுகையில் அணுசக்தி அதிகார சபையின் அனுமதிபெறப்பட வேண்டும் என்று கூறிய அவர் அவை வைக்கப்படும் அறைகளின் தரத்தையும் பரீட்சிப்பதாகவும் குறிப்பிட்டார்.

அணு சக்தி அதிகார சபையின் அனுமதிப்பத்திரமின்றி பயன்படுத்தப்படும் எக்ஸ்-ரே இயந்திரங்கள் மற்றும் சரியான எக்ஸ்-ரே படங்களை வழங்காத இயந்திரங்கள் என்பன தொடர்பில் அணு சக்தி அதிகார சபையின் 25334271 அல்லது 2533428 ஆகிய இலக்கங்களுக்கு முறையிட முடியும் எனவும் அவர் கூறினார்.

## மாணவத்...

கட்டம் கட்டமாக இந்த தலைமைத்துவப் பயிற்சியில் உள்ளீர்க்கப்பட உள்ளனர்.

கல்வி அமைச்சின் செயலாளர், பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ ஆகியோரின் ஆலோசனைக்கு அமைய இந்தத் திட்டம் முன்னெடுக்கப்பட உள்ளது.

ரன்டெம்பே பிரதேசத்தில் அமைந்துள்ள மாணவப் படையணி பயிற்சி முகாமில் பத்து நாட்களுக்கு இந்த பயிற்சிகள் வழங்கப்பட உள்ளன. முதலில் 250 பாடசாலை மாணவ, மாணவியருக்கு பயிற்சி வழங்கப்பட உள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.

## யாழ். உதவித்...

இருந்த தயானந்த அங்கிருந்து இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். இந்நிலையிலேயே அந்த இடத்திற்கு குகநாதன் நியமிக்கப்பட்டிருக்கின்றார்.

## வடக்கில்...

உள்ளது. இந்த வாரத்தில் அதிக மழை வீழ்ச்சி காணப்படும் என்றும் மின்னல் தாக்கம் அச்சுவேலி காங்கேசன்துறை, சாவகச்சேரி ஆகிய பகுதிகளில் அதிகளவில் இருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

# கட்சிக்குத் தேவை இராணுவ ஒழுக்கம்

## ரணிலின் கனவு

(கொழும்பு)

ஆட்சியை பிடிக்க வேண்டும் என்றால், கட்சியினுள் இராணுவ ஒழுக்கத்தை கடைபிடிக்க வேண்டும் என்று எதிர்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார். கண்டியில் இடம்பெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்பாட்டாளர்களுடனான சந்திப்பின் போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

கட்சியின் மத்திய செயற்குழு மேற்கொள்கின்ற தீர்மானங்கள் உரிய வகையில் அமுலாக்கப்பட வேண்டும். அவ்வாறு அமுலாக்கப்படுகின்ற உத்தரவுகளையும், தீர்மானங்களையும், இராணுவ வீரர்களைப் போல கட்சி உறுப்பினர்கள் பின்பற்றி நடக்க வேண்டும். அவ்வாறு செயற்படாத பட்சத்தில் இந்த அரசாங்கத்தை கலைக்க முடியாது என்று ரணில் விக்ரமசிங்க சுட்டிக்காட்டியுள்ளார்.

# வருடாந்தம் 425 மில்லியன்

நீரிழிவு நோயாளர்களுக்காக அரசாங்கம் வருடாந்தம் 425 மில்லியன் ரூபாவை செலவிடுவதாக சுகாதார அமைச்சின் செயலாளர் டாக்டர் வை.டீ. நிஷால ஜயதிலக்க தெரிவித்தார்.

நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்டுள்ளவர்கள் ஒழுங்கான சிகிச்சைகளை பெறாவிட்டால் அந்த நோயாளர்களின் கண்கள் பாதிக்கப்படும். எனவே தமது கண்களை பாதுகாத்துக் கொள்ள விரும்பும் நீரிழிவு நோயாளர்கள் முறையாக மருந்துகளை உட்கொள்ள வேண்டும்.

உணவு வகைகளிலும் பேணுதல் வேண்டும். நீரிழிவு நோயாளர்களுக்காக அரசாங்கம் வருடாந்தம் பெருமளவு நிதியைச் செலவிடுகிறது எனவும் அமைச்சின் செயலாளர் டாக்டர் ஜயதிலக்க தெரிவித்தார்.

நீரிழிவு நோயினால் ஏற்படும் கண்பார்வை இழப்பை தடுப்போம் என்ற தொனிப் பொருளில் இம்முறை விழிப்புலனற்றவர் தினம் அனுஷடிக்கப்பட்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## கொழும்பில்...

இதன்போது ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் மகஜர் ஒன்று கையளிக்கப்படவிருப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தச் சத்தியாக்கிரகப் போராட்டத்திற்கு காணாமல் போனோர் மற்றும் கடத்தப்பட்டோரின் உறவினர்களும் இணைந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இதன்போது தடுத்துவைக்கப் பட்டிருப்பவர்களின் பெயர்களையும் வெளியிடுமாறு காணாமற் போனவர்கள் தொடர்பாக சுயாதீன ஆணைக்குழு விசாரணை ஒன்றையும் ஏற்படுத்துமாறு வலியுறுத்தப்பட விருப்பதாகவும் அந்த அமைப்பினால் கூறப்பட்டுள்ளது.

## வன்னியில்...

எனினும் அந்த குறித்த அறிக்கையினை வழங்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

அதேவேளை அரச காணியில் நீண்டகாலமாக இருந்து வரும் குடும்பங்களுக்கு அவர்களுக்குரிய காணிகள் இதுவரை கரைச்சிப் பிரதேச செயலகம் பகிர்ந்தளிக்கவில்லை என முறைப்பாடு ஒன்றும் மக்களினால் பதிவு செய்யப்பட்டது. இருப்பினும் அது குறித்த அறிக்கையினைச் சமர்ப்பிக்குமாறும் கோரப்பட்டுள்ளது. இதேவேளை காணித்தகராறு தொடர்பான முறைப்பாடுகள் ஏராளம் வந்த வண்ணம் உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

மேலும் துணுக்காய் கல்வி வலயத்திற்கு எதிராக நிர்வாகப் பிழைகள் தொடர்பில் முறைப்பாடு ஒன்றும் பதியப்பட்டுள்ளது. இது குறித்த விசாரணைகள் எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு நடைபெறும் என்றும் அவர் குறிப்பிட்டார். அத்துடன் 2009 ஆம் ஆண்டு நடைபெற்ற இறுதிக் கட்ட யுத்தத்தில் காணாமல் போயுள்ளதாக ஏற்கனவே முறைப்பாடுகளை செய்தவர்கள் ஆலோசனைகள் பெற்றும் செல்கின்றனர்.

பெற்றோர்கள் தமது பிள்ளைகளைக் கண்டுபிடித்துத் தருமாறு கோரியுள்ளனர். அத்துடன் தற்போது முறைப்பாட்டாளர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது என்றார். எனிவரும் காலங்களில் எண்ணிக்கை அதிகரிப்பினைக் கொண்டு நிரந்தரமான காரியாலயத்தினை அமைப்பதற்கும் ஆணைக்குழு நடவடிக்கை எடுக்கும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# ஆசிரியர்களுக்கு அதிரடி இடமாற்றம்; கிளம்புகிறது கண்டனக்கணைகள்

(வலிகாமம்)

வலிகாமம் கல்வி வலயத்திற்கு உட்பட்ட ஆசிரியர்களுக்கு திடீர் இடமாற்றம் அறிவிக்கப்பட்டமையை கண்டித்து ஜனநாயக தொழிலாளர் கட்சி கண்டனம் தெரிவித்து அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது. கட்சியின் தலைவர் சத்தியேந்திராவினால் விடப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவையாவன.

வலிகாமம் கல்வி வலயத்தில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களில் ஒரு பகுதியினர் உள்ளக இடமாற்றம் செய்யப்படவுள்ளதாகத் திடீர் அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது. இதனை ஜனநாயக தொழிலாளர் கட்சி வன்மையாகக் கண்டிக்கின்றது.

டிசெம்பர் மாதத்தில் இடம்பெறவுள்ள கல்விப் பொதுத் தராதர சாதாரணதரப் பரீட்சைக்கு மாணவர்கள் தயார்படுத்தப்பட்டு வருகின்ற நிலையில், தீடீரென விடுக்கப்படும் இவ்வாறான அறிவித்தல்களால் மாணவர்களின் கல்வி பாதிக்கப்படுவதற்கான வாய்ப்புக்களே அதிகம்.

ஒரே பாடசாலையில் தொடர்ந்து ஏழு வருடங்களுக்கும் மேல் பணியாற்றிய ஆசிரியர்கள் இடமாற்றப்படவுள்ளனர். குறிப்பாக, வலிகாமம் கல்வி வலயத்தில் அவ்வாறு உள்ளக இடமாற்றங்கள் இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வலிகாமம் கல்வி வலயத்தில் அவ்வாறு சுமார் 108 ஆசிரியர்கள் இடமாற்றம் பெறவுள்ளனர். வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ஆர்.இராஜேந்திரன் தலைமையில் வலிகாமம் கல்வி வலய மாநாட்டு மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்ற அதிபர்களுடனான கலந்துரையாடலில் இது பற்றிய அறிவிப்பு விடுக்கப்பட்டது.

இதன்போதே இடமாற்றம் பெறவுள்ள ஆசிரியர்களின் பெயர்ப்பட்டியலும் அறிவிக்கப்பட்டது. போதிய கால அவகாசமின்றி இவ்வாறு இடமாற்ற உத்தரவு விடுக்கப்பட்டிருப்பது குறித்து பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

அத்துடன் கல்விப் பொதுத் தராதர சாதாரணப் பரீட்சை டிசெம்பரில் நடைபெறவுள்ள நிலையில், இவ்வாறான திடீர் இடமாற்றங்களால், அவர்களின் கல்வித் தொடர்ச்சித்தன்மை பாதிக்கப்பட்டு விடும் என்றும் மேற்படி ஆசியரியர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

# புலிகளுக்கு ஆயுத கொடுக்கல் வாங்கல்; கனடாவில் கண்ணன் நாடுகடத்தல்

புலிகளின் கனேடிய நிதிப் பொறுப்பாளர் கண்ணன் என்பவரை நாடு கடத்த உள்ளதாக திவயின பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

கனேடிய அரசாங்கம், குறித்த நபரை விரைவில் இலங்கைக்கு நாடு கடத்தும் என தெரிவிக்கப்படுகிறது. கனடாவின் குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்தினால் கண்ணனை நாடு கடத்தும் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

உலகத் தமிழர் பேரவையின் தலைமைக் காரியாலயத்தை சுற்றி வளைத்து தேடுதல் நடத்திய போது, அதன் செயற்பாட்டாளராக கண்ணன் பற்றிய தகவல்கள் அம்பலமாகியுள்ளன.

மீட்கப்பட்ட கணனிகளில் புலிகளின் ஆயுதக் கொடுக்கல் வாங்கல்கள் பற்றிய தகவல்களும் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. 1997 ஆம் ஆண்டு முதல் கண்ணன் கனடாவில் வாழ்ந்து வருகின்றார் என திவயின செய்தி வெளியிட்டுள்ளது.

# தபால் சேவையில் 1060 பேரை நியமிக்க நேர்முகப் பரீட்சை

தபால் சேவையை வலுப்படுத்தவென புதிதாக 1060 ஊழியர்களை இணைத்துக் கொள்ள நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்காக இன்று தொடக்கம் நேர்முகப் பரீட்சை இடம்பெறவுள்ளதாக தபால்சேவை அமைச்சின் செயலாளர் ஹேமசிறி பெனாண்டே தெரிவித்துள்ளார்.

நடத்தப்பட்ட தேர்வு காண் பரீட்சையில் சித்தியடைந்த 3000 பேர் நேர்முகப்பரீட்சையில் கலந்து கொள்ளவுள்ளனர். நேர்முகப்பரீட்சை 10 நாட்கள் தொடர்ந்து இடம்பெறவுள்ளது.

நேர்முகப்பரீட்சையில் ஊழியர்கள் மாகாண மட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர் பின்னர் தபால் சேவை வலையமைப்பு வலுப்படுத்தப்படும் என மேலும் தெரிவித்துள்ளார்.

# சாரதியின் கவனக்குறைவு 12 மாணவர்கள் காயம்

தலவாக்கலை அக்கரப்பத்தனை பகுதியில் தலவாக்கலையில் இருந்து டயகம நோக்கி பயணித்த பஸ் வண்டியும் டயகமயில் இருந்து தலவாக்கலை நோக்கி பயணித்த பஸ் வண்டியும் ஒன்றுடன் ஒன்று மோதியதில் 12 மாணவர்கள் காயமடைந்துள்ளனர்.

நேற்றுக் காலை 7.45 மணியளவில் இந்த விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பாடசாலை மாணவர்களை ஏற்றிச் சென்ற பஸ்சார்தியின் கவனக்குறைவே விபத்துக்கு காரணமாக அமைந்தது என தெரிவிக்கும் அக்கரப்பத்தனை பொலிஸார், விபத்து தொடர்பாக மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# அவுஸ்ரேலியா சென்ற நால்வர் நாடு திரும்ப விருப்பம்

சட்டவிரோதமாக படகு மூலம் அவுஸ்திரேலியா சென்று அங்கு அகதி அந்தஸ்து கிடைக்கப்பெறாத நான்கு இலங்கையர்கள் மீண்டும் நாடு திரும்ப விருப்பம் தெரிவித்துள்ளனர்.

கடந்த ஆகஸ்ட் 13ம் திகதி அவுஸ்ரேலியா சென்ற இலங்கை அகதிகள் குழுவில் இருந்த நால்வரே இவ்வாறு நாடு திரும்ப விருப்பம் தெரிவித்துள்ளனர்.

குறித்த அகதிகளை நௌரு தீவுகளுக்கு மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள நிலையில் அதற்கு விருப்பம் இல்லாமல் நால்வர் நாடு திரும்ப விருப்பம் தெரிவித்துள்ளதாக அவுஸ்ரேலிய குடிவரவு திணைக்களம் தெரிவித்துள்ளது. இதன்படி இவ்வருடம் இதுவரை 79 பேர் இலங்கை திரும்ப விருப்பம் தெரிவித்துள்ளதோடு அகதிகள் நௌரு தீவுக்கு மாற்றப்படுவார்கள் என அறிவிக்கப்பட்டதன் பின் 47 பேர் நாடு திரும்ப விருப்பம் தெரிவித்துள்ளதாக அவுஸ்ரேலியக் குடிவரவுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

# முதியோர் இல்லங்களை மூடுமாறு ஆதிவாசிகளின் தலைவர் ஆலோசனை

இலங்கையிலுள்ள அனைத்து முதியோர் இல்லங்களையும் மூடிவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று ஆதிவாசிகளின் தலைவர் ஊறுவரிகே வன்னியலா அத்தன் தெரிவித்துள்ளார்.

இந்த நாடும் நாட்டின் சமூகங்களும் அபிவிருத்தி கண்டுள்ளன என்று தலைவர்கள் தெரிவித்து வருகின்றனர். இருப்பினும், தமது தாய், தந்தையர் முதுமையடைந்ததும் அவர்களை முதியோர் இல்லங்களுக்கு கொண்டுசென்று விடும் பிள்ளைகள் இந்த சமூகத்தில் இருக்கும் பட்சத்தில் இதுவொரு அபிவிருத்தியடைந்த சமூகம் என்று எப்படிக் கூறமுடியும்? என்று அவர் கேள்வி எழுப்பியுள்ளார்..

நாட்டின் எல்லாப் பாகங்களிலும் முதியோர் இல்லங்களை நிர்மாணிப்பதை விட்டுவிட்டு முதியோருக்கு எவ்வாறு மரியாதையளிக்க வேண்டும் என்று அறிவுறுத்தி ஆரோக்கியமான சமூகத்தை உருவாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று குறிப்பிட்டார். மேலும்,

ஆதிவாசிகளின் பரம்பரைகளுக்கு பல்வேறு கட்டுப்பாடுகள்ள விதிக்கின்றனர். பரம்பரை பரம்பரையாக நாம் கையாண்டு வந்த வேட்டையாடும் மரபைத் தொடரும் உரிமை எமக்கு தொடர்ந்து இருக்க வேண்டும்.

உலகின் ஏனைய இனத்தவர்களைப் போன்று எமக்கும் வாழும் உரிமை முழுமையாகக் கொடுக்கப்பட வேண்டும் என்று அவர் குறிப்பிட்டார்.

# கல்வி அபிவிருத்தி கலந்துரையாடல்

(கொழும்பு)

வவுனியா தெற்கு பிரதேச கல்வி அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் வட மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி தலைமையில் கொழும்பு பத்திரமுல்லவிலுள்ள ஆளுநர் உப அலுவலகத்தில் கடந்த 18 ஆம் திகதி நடைபெற்றது.

பாடசாலைகள், கல்வி அலுவலகங்களின் பௌதீக வளங்கள், ஆளணி விபரங்கள், மாணவர்களின் பொதுப் பரீட்சை பெறுபேறுகள் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டது. இதன்போது மாணவரகளுக்கு விசேட வகுப்புக்களை நடாத்துதல், ஆசிரியர் விடுதிகள் அமைத்தல் போன்ற விடயங்களை முன்னெடுக்குமாறு ஆளுநரினால் உரிய அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டது.

வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களுக்கான பிராந்திய ஆணையாளர் ஐ.எம்.எஸ்.மொகைதீன், கல்வி உயர் அதிகாரிகள், பாடசாலை அதிபர்கள் ஆகியோர் இதில் கலந்து கொண்டார்கள்.

# மாகாண நீதிமன்றங்களில் விசாரிக்க கோரிக்கை

மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் உள்ள மனித உரிமை மீறல் சம்பவங்கள் தொடர்பிலான வழக்குகளை, மாகாண நீதிமன்றங்களில் விசாரணை செய்வது தொடர்பில் ஆராயுமாறு மனித உரிமைகள் ஆணையகம் கோரிக்கையை விடுத்துள்ளது.

அதன் ஆணையாளர் பிரதீபா மஹானாம இது தொடர்பில் கருத்து வெளியிடும் போது, இவ்வாறான செயற்பாட்டின் காரணமாக, மக்களுக்கு அவர்களின் நீதிசெயற்பாடுகளை இலகுவாக முன்னெடுக்க கூடியதாக இருக்கும் என்று தெரிவித்துள்ளார்.

# ஒ சந்தேகநபர்கள் கைது தொலைபேசி திருடிய

(யாழ்ப்பாணம்)

யாழ்.நவலர் வீதி மற்றும் நல்லூர் செட்டித் தெருவில் அமைந்திருந்த கணினி மற்றும் கையடகத் தொலைபேசி விற்பனை நிலையங்களை உடைத்து அதில் இருந்த இலத்திரனியல் பொருட்களைக் கொள்ளையடித்த ஆறு சந்தேகநபர்கள் நேற்று முன்தினம் யாழ்.பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் இரண்டு மாணவர்களும், ஏனையவர்கள் அரியாலை, குருநகர், பலாலிவீதி, நல்லூர் ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்கள் பொலிஸாரினால் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளதுடன், நாளை யாழ்.நீதவான் நீதிமன்றத்தில் பாரப்படுத்தப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

யாழ்.நாவலர் வீதியில் அமைந்திருக்கும் குறித்த கணினி மற்றும் கையடக்கத் தொலைபேசி விற்பனை நிலையம் இரண்டு முறை இவ்வாறு உடைக்கப்பட்டு ஒருதடவை 17 இலட்சம் ரூபா பெறுமதியான பொருட்களும், மறுதடவை 13 இலட்சம் ரூபா பெறுமதியான பொருட்களும் கொள்ளையடிக்கப்பட்டதுடன், நல்லூர் செட்டித் தெருவில் அமைந்திருக்கும் முருகன் கையடக்கத் தொலைபேசி விற்பனை நிலையமும் இவ்வாறு உடைக்கப்பட்டு அங்கிருந்து பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டிருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இதேவேளை கடந்த வெள்ளிக்கிழமை யாழ். சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்தில் நடைபெற்ற வாராந்த செய்தியாளர் சந்திப்பில் இந்த இரண்டு கொள்ளைச்சம்பவங்கள் சம்பந்தப்பட்டவர் இரு நாட்களில் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் நிறுத்தப்படுவார் என்று யாழ். பொலிஸ் மா அதிபர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

(பா)

# நுளம்புகளின் தொழிற்சாலை பொம்மை வெளியில் முற்றுகை

(யாழ்ப்பாணம்)

பொம்மைவெளிப் பகுதியில் பழைய இரும்புப் பொருட்களை சேகரித்து தென்பகுதிகளுக்கு ஏற்றுமதி செய்கின்ற இடங்களுக்கு யாழ்.மாநகர சுகாதார பரிசோதகர் குழு ஒன்று கடந்த வெள்ளிக்கிழமை திடீர் பரிசோதனை மேற்கொண்டது.

டெங்கு நுளம்புகள் பெருகுவதற்கு ஏதுவாக இருக்கின்ற பழைய இரும்புகள் சேகரித்து ஒழுங்கான முறையில் பராமரிக்காமல் வெளியிடங்களில் சேமிக்கின்ற தளங்களுக்கு இக்குழுவினர் திடீர் பரிசோதனை மேற்கொண்டனர்.

இதன் போது ஒரு இடத்தில் சேகரிக்கப்பட்ட பழைய இரும்புகள் வெளியான இடங்களில் காணப்பட்டதால் மழை காலமாகையால் டெங்கு நுளம்பு பெருக வாய்ப்பு இருப்பதாகக் கூறி எச்சரிக்கப்பட்டதோடு இரண்டு நாள் தவணையில் அவற்றை அகற்றவும் உத்தரவு விட்டதாக மாநகர பிரதம பொதுச் சுகாதாரப்பரிசோதகர் ஆ.ஜீவானந்தன் தெரிவித்தார்.

சுகாதார வைத்திய அதிகாரி பி.ஞானசோதி, நாவாந்துறை பஷா ஜ, பிரிவு பொது சுகாதாரப்பரிசோதகர்கள் உட்பட்ட குழுவினரே இப்பரிசோதனையில் ஈடுபட்டிருந்தனர்.

(இ)

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2012 ஒக்ரோபர் 21 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.